
கல்கி
KALKI 18-1-81 90 கா.

"நான் ஒரு டீச்சர்
நான் அணியும் ஆடைகள் என் லட்சியத்தைப் போதிக்க வேண்டும், இல்லையா."



உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி



மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், புடவைகள், மற்றும் துணிகள்
மற்றும் வேஷ்டிகள்.

MF-30 TAM

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ் நியூ ஷொர்ராக் மில்ஸ் **மஃபத்லால் ஃபைன்**





தலைநகரில் திரைப்படப் பெருவிழா






எட்டாவது சர்வதேசத் திரைப்பட விழா தில்லியில் ஜனவரி 3ந் தேதி ஆரம்பமாகியது. ஆனால் பத்திரிகையாளர்கள் காட்சி மட்டும் ஒரு நாள் முன்னதாக ஆரம்பமாகியது. அன்று முதல் மூன்று படங்களும் பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பரிசுபெற்ற படங்கள்: FIANCEE (G D R) CONDUCTOR (POLAND) ALL'THAT JAZZ (U.S.A.) பல பத்திரிகையாளர்களும் படத் துறையைச் சேர்ந்தவர்களும் இந்தப் படங்களைப் பார்க்காமல் ஏமாற்றமடைந்தனர்.

தில்லி 'விக்ஞான் பவன்' அரங்கில் ஆரம்ப விழா சம்பிரதாயமான விழாதான். வரவேற்புரையை ஏ.கே.தத் நவில, ஆர். ரேய்னு சிறப்புரை ஆற்ற, எட்டாவது சர்வதேசத் திரைப்பட விழாவைத் துவக்கி வைத்துப் பேசினார், தகவல் ஒலிபரப்பு அமைச்சர் வசந்த் சாத்தே.

நன்கு பரிச்சயமாக நம்மவர் தவிர இந்த விழாவில் தெரிந்த சில முகங்கள்: சஞ்சீவ் குமார், ஜீனத் ஆமன், சசிகபூர், ரேகா, அசோக்குமார், ராஜ்கபூர், அமிதாப் பச்சன், ஜெய பாதுரி, டானி, பர்வீன் பாபி, ஏ.பி. ரல்கன், பி.ஆர். சோப்ரா, பாசு சட்டர்ஜி, சங்கராபரணம் இயக்குனர் விசுவநாத். அவரது அடுத்த இருக்கையில் மஞ்சு பார்கவி, சோமையாஜுலு (இவர் பாண்ட், கோட் போட்டிருந்ததால் யாருமே அடையாளம் கண்டுபிடிக்கவில்லை) மௌசுமி சட்டர்ஜி, மற்றும் பலர். இதில் இருக்கைக்காக அதிகம் கஷ்டப்பட்டவர் ஜெயபாதுரி தான். முதலில் ஒன்றாக உட்கார்ந்திருந்த அமிதாப் – ஜெயபாதுரியை சசி கபூர் பிரித்தார். பின்னர், பி. ஆர். சோப்ரா

- ⌘ ஒலிம்பியன் ஹாலிடேயில் ஒரு கட்டம்
- ⌘ ஹாங்காங் படமான Legend of the Mountain ஒரு காட்சி
- ⌘ பெல்ஜியம்''படமான Woman in a Twilight Garden''ல் ஒரு படக் காட்சி
- ⌘ திரைப்பட விழாவில் இடம் பெற்ற 'Sunday Children
- ⌘ புதுதில்லியில் ஜனவரி 3ந்தேதி சர்வதேசத் திரைப்பட விழாவை மத்திய சர்க்கார் தகவல் ஒலிபரப்பு மந்திரி வஸந்த் ஸாத்தே தொடங்கிவைக்கிறார்.



இடைவெளியை அதிகப்படுத்தினர். கடைசியில் ஜெயபாதுரியைக் கடைசி இருக்கைக்குத் தள்ளிவிட்டார்கள்.


இனி திரைப் படங்களைப் பற்றி:

GLORIA வெனிஸ் திரைப் பட விழாவில் தங்கச் சிங்கம் பெற்ற அமெரிக்கப் படம். மாஃபியா கும்பலினால் ஒரு குடும்பமே அழிகிறது. ஆனால் அவர்களது ஒரே மகனை (8 வயது) பக்கத்து வீட்டில் உள்ள குளோரியா என்ற நாற்பது வயதுப் பெண்மணியிடம் ஒப்படைத்து விடுகின்றனர், அவனது பெற்றோர். குளோரியாவோ சிறைத் தண்டனை அடைந்து, விடுதலையான கைதி. நிம்மதியாக வாழ ஆசைப்படுகிறாள். ஆனால் முடியவில்லை. எட்டு வயது மகனை எப்படி அந்தக் கொலைகாரக் கும்பலிலிருந்து காப்பாற்றுகிறாள் என்பதுதான் கதை. ஒரு சீனுக்கு ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம், பல பேர் மரணம். ஒரு காட்சியில் படத்தில் மைக் தெரிகிறது. ''கன்டின்யூட்டி''யைக் காணோம். ''நாங்கள் தப்புச் செய்தால் கேட்கிறீர்களே? இவ்வளவு பெரிய டைரக்டரே மைக் தெரியும்படி படம் எடுத்தால்...?'' என்று என்னிடம் கேட்டார் எஸ். பி. முத்துராமன்.

OLYMPIAN HOLIDAY (FINLAND) விவாகரத்து செய்துவிட்டு மனம் சமாதானம் அடையச் சுற்றுலா கிளம்புகிறாள் நியோமி. ஏறவேண்டிய விமானத்துக்குப் பதிலாக வேறு விமானம் ஏற, தெரியாத இடத்தில் பணமில்லாத நிலையில், மாற்றுத் துணி இல்லாதபோது, இவனது அறைத் தோழராக ஒரு பெண்! எப்படி இருக்கும்? நகைச்சுவை ததும்பும் படம். கடற்கரைக் காட்சிகள் நிறைய உண்டு.

DEATH OF A BUREAUCRAT (CUBA) அரசாங்க அலுவலகங்களில் சிவப்பு நாடா முறையை இந்தப் படம் நகைச்சுவை மிளிரக் காட்டுகிறது. ஒரு அரசாங்க உத்தியோகஸ்தன் இறந்துவிடுகிறான். அவனுடன் அவனது உத்தியோக அத்தாட்சி அட்டையையும் சேர்த்துப் புதைத்து விடுகிறார்கள். இதைத் திரும்ப எடுப்பது எப்பேர்ப்பட்ட உம்மணா மூஞ்சியையும் சிரிக்க வைத்துவிடும்.

அவர்: மனைவியை அடிச்சதில் அவள் பல் உடைஞ்சு போயிட்டதா இரவு கனவு கண்டாராம்!
இவர்: அப்புறம்?
அவர்: காலைல அதுக்கு மனைவியிடம் வருத்தம் தெரிவிச்சுக் கிட்டாராம்!
-கபிலா நாதன்



THE SCAPEGOAT (FRANCE) இந்தப் படத்தில் கதாபாத்திரங்களின் உறவு முறையைத் தெரிந்து கொள்வதற்குள் படமே முடிந்து விடுகிறது. இரண்டுபேர் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அன்பு செலுத்துகிறார்கள். கடைசியில் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்திவிடுகிறார்கள்.

WHEN THE HILLS TURN RED (CHINA) காதல்தான் இப்படத்தின் கரு. ஆனால் அதை நேரடியாகச் சொல்லவில்லை. சுற்றி வளைத்துக் கதைக்கு வரும்போது நமக்குப் பொறுமை போய் விடுகிறது. கண்ணுக்குக் குளிர்ச்சியான கதாநாயகி இருந்துவிட்டால் போதுமா என்ன?

THE WATER CARRIER IS DEAD (EGYPT) ஏராளமான வசனங்கள் நிறைந்த மட்டமான தமிழ்ப் படத்தைப் பார்ப்பதுபோன்று இருந்தது. ஒரு தண்ணீர் தூக்கி. அவனுக்கு ஏழு வயது மகன். தாய் இறந்து விடுகிறாள். இவனது வறுமை மிக்க வாழ்க்கையில் ஒரு குண்டுமனிதர் நுழைகிறார். நெருங்கிய நண்பர்கள் ஆகிறார்கள். பிறகுதான் அந்த மனிதர் கூலிக்குப் பிணம் பின்னால் செல்பவர் என்று தெரிகிறது. திடீர் என்று அந்தக் குண்டு மனிதர் இறக்கிறார். தண்ணீர் தூக்குபவன் பிணம் பின்னால் செல்பவனாக மாறுகிறான். அதிகம் சிரமப்படாமல் சம்பாதிக்கிறான்.

SUNDAY CHILDREN (F.R.G.) ஓர் இளம்பெண்ணின் வாழ்க்கையை எப்படி போர் சிதற அடித்து விடுகிறது என்பதுதான் கதை. நல்ல கதை, நடிப்புத் திறன், எல்லாம் இருந்தும் படம் நத்தை வேகம்.

WOMAN IN A TWILIGHT GARDEN (BELGIUM) உலகப் போர் மூண்ட சமயம். ஜெர்மானியர் ஆக்கிரமிப்பாளர். அவர்களுக்கு எதிராக ரகசிய புரட்சி இயக்கம். கணவன் ஆக்கிரமிப்பாளருக்கு அடங்கி ஆதரவு தர, மனைவி புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞனுக்கு ரகசியப் பாதுகாப்பு அளிக்கிறாள். அந்தத் தொடர்பு காதலாகப் பரிணமிக்கிறது. கடைசியில் ஜெர்மானியர் தோல்வியுற்றுவிடும்போது, ஆக்கிரமிப்பாளருக்கு ஆதரவு தந்த குற்றத்துக்காகக் கணவன் மரண தண்டனை பெற வேண்டிய சமயம், காதலன் அவனைக் காப்பாற்றுகிறான். தேசப் பற்றும், தேசத் துரோகமும், வெறுப்பும், மனிதாபிமானமும் எதிரெதிராக நின்று மனப் போராட்டங்களை வளர்க்கும் சிறந்த கதை. நாஜிகளின் அடக்குமுறை துல்லியமாகச் சித்திரிக்கப்படுகிறது.

LEGEND OF THE MOUNTAIN (HONG KONG) அங்கேயும் ஒரு விட்டலாச்சாரியா. அவர் பெயர் கிங் ஹூ. மாயா ஜாலம் மந்திரங்கள் நிரம்பிய கதை. ''கவர்'' (இரண்டு அர்த்தம்) கண்ணைக் கவர்கிறது.

—சலன்



daCunha-S-22 TM

வங்கிகள்: வளர்ச்சியின் வேகமும் சேவையின் தரமும்

இந்தியன் ஓவர்சீஸ் பாங்கின் தலைவர் - சேர்மன் அண்டு மானேஜிங் டைரக்டர் - திரு. விஷ்ணு மூர்த்தி ஏகார்த்தியாவை அவருடைய ஆறாவது மாடி அறையில் சந்திக்க முற்படுகிறேன். ஐம்பத்தாறு வயதுக்காரரின் இளமையும் வற்றாத ஒளி வீசும் புன்னகையும் என்னை வரவேற்கின்றன.

''நீங்கள் அயல் நாடுகளில் அதுவும் கீழை நாடுகளில் பல ஆண்டுகள் இதே பாங்கியின் மேலதிகாரியாகப் பணி புரிந்திருக்கிறீர்களே, அதன் அனுபவம் எவ்விதம் இங்கே, தாய் நாட்டில் செயல்பட உதவி புரிகிறது?''

''நான் பணிபுரிந்த நாடுகளில் பல தேச வங்கிகள் உலக ரீதியில் நடக்கின்றன. நம் நாட்டு வங்கிகள் அங்கே அவர்களுக்கு இணையாக, ஈடுகொடுத்துச் செயல்படுகின்றன. இதன் மூலம் கிடைத்த அனுபவம் தாய் நாட்டில் சேவை புரிகையில் பெரிதும் கை கொடுக்கிறது.

''அங்கே உள்ள வங்கிகள் உலகக் கண்ணோட்டத்துடன் செயல்படுகின்றன. நம் நாட்டு வங்கிகள் உள்நாட்டுத் தேவைகளை மட்டுமே முக்கிய கருத்தாகக் கொண்டு நடக்கின்றன.''

''உலகெங்குமுள்ள பெரிய பெரிய கோடீசுவரர்கள் தங்கள் பணத்தை சுவிட்ஜர்லாண்ட் பாங்கியில் போட்டு வைக்கிறார்களே? பெட்ரோலை அள்ளிக் கொடுக்கும் மத்திய கிழக்கு நாடுகளின் ஐசுவரியத்தில் ஒரு துளியேனும் நம் நாட்டு வங்கிகளில் முதலீடானால் நாட்டின் செல்வநிலையும் பொருளாதார நிலையும் உயருமே? ஏன் இந்திய வங்கிகள் அரபுப் பணத்தை ஈர்க்க முயற்சி செய்யக்கூடாது?''

''பணத்தை ஈர்த்தால் மட்டும் போதாது. அரபுப் பணத்தை முதலீடு செய்ய என்னென்ன மார்க்கங்கள் நம் நாட்டில் இருக்கின்றன என்பதை முதலில் ஆராய வேண்டும். பற்பல விதமான தொழில்களைத் தொடங்கி லாபகரமாக நடத்த வகை இல்லாத நிலையில் அரபுப் பணம் வந்து சேர்ந்தால் அது பண வீக்கத்தைத்தான் உருவாக்கும்! மக்களின் கஷ்டங்கள் அதிகரிக்கும். அரபு நாடுகளின் பணம் இங்கு நமது பாங்குகளில் போடப்பட்டால் அதற்கு நாம் வட்டி தரவேண்டும் என்பதை மறவாதீர்கள்.''

''சமீபகாலமாக வங்கிகள் திருப்திகரமாகச் சேவை செய்வதில்லை என்ற எண்ணம் பரவலாகத் தோன்றியிருக்கிறது. சொல்லப்போனால் தரம் குறைந்து காணப்படுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''மக்களைத் திருப்திசெய்ய வேண்டும் என்கிற எங்கள் லட்சியம் குன்றியதே இல்லை. ஆனால் உங்கள் எண்ணம் முற்றும் தவறு அல்ல. பத்து ஆண்டு காலத்தில் செயல்படும் முறை ஓரளவு மாறித்தான் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் விஸ்தரிப்புத்தான். கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் இந்திய வங்கிகளில் 7000 கோடியிலிருந்து 34000 கோடிக்கு டெபாஸிட் உயர்ந்திருக்கிறது. அதற்கேற்பஎல்லாத் திசைகளிலும் கிளைகள்; ஏராளமான புதிய சிப்பந்திகள். காலப் போக்கில் கிடைக்கும் அனுபவத்தில்தான் சேவையின் தரத்தை நிலைநாட்ட முடியும்.''

''நாட்டின் பல தொழில் ஸ்தாபனங்களில் ரிஸர்ச் அண்ட் டெவலப்மெண்ட் என்று தனி இலாகா இருக்கிறது. வருங்காலத் தேவைகளை எண்ணிப் பார்க்கவும் சமூகத்திற்கு இன்னும் எந்தெந்த விதத்தில் சேவை புரியலாம் என்று ஆராயவும் இம்மாதிரி ஒரு இலாகா வங்கிகளுக்குத் தேவை இல்லையா?''

''தேவை. அவசியம் தேவை. இன்றியமையாதது. ஆவன செய்ய வேண்டும். அசுர வேகத்தில் பாங்கிங் வளருகிறது. முன்பெல்லாம் குமாஸ்தா போன்ற சிறு பதவியில் சேருகிறவன் ஒரு கிளையின் மானேஜர் பதவியை அடையும்போது வயது நாற்பது நாற்பத்தைந்து கூட ஆகும். அப்போது அவன் அனுபவத்தில் பழுத்த பழம். ஆனால் இப்போது? துடிதுடிப்பான புத்திகூர்மையுள்ள இளைஞர்கள் உற்சாகத்துடன் பணி புரிகிறார்கள். ஆனால் அனுபவ முதிர்ச்சி இல்லை. வங்கிகளின் தினசரி ஓட்டத்தில் மெத்தனமாக முடிவுகள் எடுக்க முடியாது. பிரச்னை தோன்றுகையிலேயே தீர்வு காண முடிவுகளை எடுத்தாக வேண்டும். சரியான முடிவுகளை எடுக்க நிச்சயம் அனுபவம் தேவை. வளர்ச்சியின் வேகத்தில் அங்கங்கே—சிறிய சிறிய தவிர்க்க முடியாத குறைகள் ஏற்படலாம். ஆனால் இவை தற்காலிகமானவை. அதிகாரத்தை ஒரே இடத்தில் மையத்தில் குவிக்காமல் அடுத்தடுத்த கீழ் மட்டங்களில் அதிகாரப் பொறுப்புக்களை வழங்குவது சிறந்தது.''


''இது கம்ப்யூட்டர் யுகம். வங்கிகளில் அதன் உபயோகம் அதிகரிக்குமா?''

''சைனா கூட நவீன முறைகளைக் கையாளத் தொடங்கியிருக்கிறது. வேலை வாய்ப்பைக் குறைக்காமலேயே—சொல்லப்போனால் அது அதிகமாகும் - கம்ப்யூட்டர்களை நாம் வங்கிகளில் அதிகமாக உபயோகிக்கத்தான் வேண்டும்''





விடைபெறும் முன் அவருடைய பொழுது போக்கு பற்றிக் கேட்கிறேன். பொருளாதார நூல் படிப்பதுதானாம்!

- நமது நிருபர்



உலகத் தமிழ் மாநாட்டின்
வெற்றியைக் கொண்டாட
ஸ்டாம்ப் வெளியிட வேண்டும்
என்று யோசனை தெரிவிக்கப்
பட்டுள்ளது!





ரேகென்

இந்த இதழ் மேலட்டையில் கம்பீரமாகக் குதிரைமீது ஆரோகணித்த நிலையில் காட்சி தரும் ரேகென் இம்மாதம் 20-ம் தேதி ஜனாதிபதி பீடத்தில் அமரப் போகிறார். குதிரை மீது எவ்வளவு லாகவமாக அமர்ந்திருக்கிறாரோ அதே போல அமெரிக்க ஜனாதிபதி பதவியையும் திறம்பட வகித்துப் பெரும் புகழ் பெறவேண்டும் என வாழ்த்துகிறோம்.

நாற்பதாவது அமெரிக்க ஜனாதிபதி ரேகென் பேசுவதைப் பார்த்தால், அறிவிக்கும் கொள்கைகளை அலசினால், 'இவர் எப்போது ராஜாஜியின் அணுக்கச் சீடரானார்?' என்று எண்ணத் தோன்றும்.

''பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்தும் பணியை அரசாங்கம் தனியாரின் நன் முயற்சிக்கு விட்டு அவர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் நிற்க வேண்டும். அனைத்தையும் தானே செய்ய அரசு முற்படும்போது மக்களும் ஊக்கமிழந்து அனைத்துக்கும் அரசையே எதிர்பார்க்கின்ற நிலை தோன்றுகிறது;

''குறைந்தபட்ச அரசாங்கமே சிறந்த அரசாங்கம்;

''அரசு தான் செய்யத் தேவையில்லாத காரியங்களையெல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய எண்ணும்போது எதையும் சரியாகச் செய்வதில்லை;

''மத்தியில் அதிகாரங்கள் குவியக் கூடாது; திட்டமிடுவது அதை நிறைவேற்றுவது போன்ற பொறுப்புக்கள் பல படிகளில் பரவலாகப் படவேண்டும்; பொறுப்புக்களை மாநில அரசுகளுக்கும் அதற்கும் கீழே நகராட்சிகளுக்கும் இதர மக்கள் மன்றங்களுக்கும் மாற்றி விட வேண்டும்''

என்றெல்லாம் கூறும் ரேகென், பற்றாக்குறை பட்ஜெட்டுக்குப் பரம விரோதி. அரசாங்கத்தின் அனாவசியச் செலவினங்களைக் கட்டுப் படுத்துவதில் தீவிரவாதி. அரசின் அளவையும் செலவையும் குறைப்பதுடன் வரிகளையும் கணிசமாகக் குறைக்கப் போவதாக அறிவித்துள்ளார். இவற்றின் மூலம் பணவீக்கம் வடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்.

சுதந்திரமான தொழிலும் வியாபாரமுமே துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு வழி என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ள ரேகென், வேலை வாய்ப்புக்களை அரசாங்கமே தன் பொறுப்பில் அதிகரித்துக்கொண்டு போகக் கூடாது என்றும் தனியார் துறையினர் அப்பணியைச் செய்யும் விதமாக அவர்களுக்குத் தொழில்களைத் தொடங்கவும் விரிவாக்கவும் அரசு ஊக்கமளிப்பதுடன் நிற்க வேண்டும் என்றும் அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறார். அப்படி பேசும்போது வரிக்கு வரி நமக்கு ராஜாஜியை நினைவூட்டுகிறார்.

ரேகெனின் ஆமோதிப்பைப் பெற்றுள்ள ராஜாஜியின் இந்தக் கொள்கைகள் நமக்கும் எவ்வளவு அத்தியாவசியமானவை என்று கூறத் தேவையில்லை. ஆனால் அவசியங்களை விட்டுவிட்டு அனாவசியங்களில் நேரத்தை விரயமாக்குவது தானே நம் தலைவர்களுக்கு வழக்கமாகி விட்டது!

ரேகென் ராஜாஜியிடமிருந்து மாறுபட்டு நிற்கிற ஒரு விஷயமும் உண்டு. ராணுவ பலத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டு சக்தி வாய்ந்த நிலையிலிருந்து கொண்டுதான் ருஷ்யாவுடன் சமாதானப் பேச்சு நடத்த வேண்டும் என்று நம்புகிறார் ரேகென். ருஷ்யாவும் இதேபோல எண்ணுமானால் மேன்மேலும் அணு ஆயுதக் குவிப்புத்தான் நடைபெறுமேயன்றி அணு ஆயுதப் போர் பயத்திலிருந்தும் அபாயத்திலிருந்தும் உலகம் மீள வழியே இல்லை.

''ராணுவ பலத்தை அன்றி தார்மீக பலத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்'' என்றார் ராஜாஜி. ''எதிராளிக்காகக் காத்திராமல் அமெரிக்கா தானாகவே முன்வந்து யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொண்டு விட வேண்டும்; அப்போது ருஷ்யாவும் அதே பாதையைப் பின்பற்றும்'' என்றார்.

உலகில் அணு ஆயுத பயம் நீங்கி சாந்தி நிலவ இது ஒன்றே வழி. ராஜாஜியின் இந்தக் கொள்கையையும் ரேகென் ஏற்றால் உலகம் நிம்மதி பெருமூச்சு விடும்.

1981 ஜனவரி 18

ரௌத்திரி தை 5

மலர் 39: இதழ்: 25




கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

"यस्मिन्देशेहि यो जातः तस्मै तज्जौषधं हितम् ॥"

"எந்த தேசத்தில் (சீதோஷ்ண நிலையில்) எவன் பிறந்திருக்கிறானோ அவனுக்கு அந்நாட்டு மூலிகைகளே சிறந்த பலனை அளிக்கும்."

—(சரகஸம்ஹிதை)



கும்பகோணம் "லலிதா பார்மஸி" மருந்துகளின் சிறப்பு அம்சங்கள்

ஸ்ரீ காஞ்சி பெரியவாளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் ஸ்ரீ தன்வந்திரியின் ஸன்னதியில் மருந்துகள் தயாராவது.

பல் வருஷங்கள், முறைப்படி "ஆயுர்வேதத்தை" அத்யயனம் செய்த நிபுணர்களின் நேர்பார்வையில் மருந்துகள் தயாராவது.

எந்த மருந்தையும் எளிதில் முறைப்படி தயாரிக்க உதவியாகப் பல உயர் வைத்ய நூல்கள் கொண்ட புத்தகசாலை, சிறந்த மூலிகைசாலையுடன் இணைந்து விளங்குவது.

○●○

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

லலிதா பார்மஸி

(ஸ்தாபிதம் 1942)

தலைமை ஆபீஸ் :

கும்பகோணம் Pincode: 612001

போன் : 123

DRUG LICENCE No. 40/78

(மத்திய அரசால் ஈட்டுத் தொகைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

கிளைகள்

மஹாதானத் தெரு, மாயூரம் 609001

போன் : 379

வடக்கு வீதி, சிதம்பரம் - 608001

நெ. 6, ரங்கநாதன் தெரு, சென்னை - 600017

போன் : 441454

நெ. 60-B, கச்சேரி ரோடு, சென்னை - 600004

போன் : 73007

கடிதம் மூலம் வைத்திய ஆலோசனை பெற விரும்புவோர்கள் 35 பைசா தபால் தலையுடன் தலைமை அலுவலகத்திற்கு எழுதக் கோருகிறோம்.

(கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.)

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஏகாம்பரம் சாதாரண ஏழை ஏகாம்பரமாக இருந்த போது அவருடைய அக்கா தெய்வானையின் அழகிலே மயங்கிய பணக்கார வீட்டுப் பிள்ளை சரவணன், தன் தாய் தந்தை உறவினர் பேச்சை யெல்லாம் மீறி அவளைத் திருமணம் செய்து கொண்டார்.

அவர் ஒரு கார் விபத்தில் சிக்கி அகால மரணம் அடைந்தபோது மகள் ராஜிக்கு மூன்று வயது. மருத்துவ மனையில் டாக்டர்களின் முயற்சி யெல்லாம் மீறி, உயிர் விடும் போது, சரவணன் ராஜியையும் மனைவியையும் ஏகாம்பரத்தின் கையில் ஒப்படைத்து ''தெய்வானை உலக அறிவில்லாதவ; என் சொந்தக்காரங்க எல்லாம் இவளுக்குப் பகையாயிட்டாங்க. அதனாலே ராஜியை உன் மகள் மாதிரி வளர்த்து ஆளாக்கி, உன் மருமகளாகவும் ஆக்கிக் கொள்ளணும்'' என்று சத்தியம் வாங்கிக் கொண்டுதான் கண்ணை மூடினார்.

அதற்குப் பிறகு சரவணனின் தொழிற்சாலையையும் சொத்துக்களையும் நிர்வகித்து அதன் மூலம் தானும் பணக்கார அந்தஸ்து அடைந்து, படிப்படியாக அரசியலிலும் நுழைந்து, இப்போது, செல்வாக்குள்ள ஓர் எம். எல். ஏ. ஆகியிருந்தார் ஏகாம்பரம்.

கட்சிகளையும் கொள்கைகளையும் அடிக்கடி மறந்து போனாலும் தன் முன்னேற்றத்துக்குக் காரணமான மைத்துனரை ஏகாம்பரம் மறக்கவேயில்லை.

சரவணனுக்குத் தான் செய்யும் நன்றிக் கடனாக, அவர் விருப்பப்படி ராஜியைத் தன் மகன் ஆனந்துக்குத் திருமணம் செய்து வைக்கத் தயாராயிருந்தார். ஆனந்தும் அத்தை மகள் ராஜியும் ஒருவருக்கொருவர் அன்புடன் பழகுவதைக் கண்டு அவருக்கு மிக்க மகிழ்ச்சி.

அரசியல் கட்சிகள் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளித் தெளிப்பது போல், இயற்கைப்பருவம் கனிந்த ராஜியின் உடலில் அழகை அள்ளித் தெளித்திருந்தது. கவர்ச்சி பூத்துக் குலுங்கும் அந்தக் கட்டழகியை மணந்துகொள்ள மாமன் மகன் சம்மதித்திருந்ததில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?

அவன் பி.ஏ. படித்து முடித்ததும் திருமணத்தை நடத்தி விடத் திட்டமிட்டிருந்தார் ஏகாம்பரம். அவன் பி. ஏ. தேறி சென்ற வாரம் எம்.ஏ வகுப்பில் சேர்ந்ததும், அவர் திருமணத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.

''வேண்டாம் அப்பா! கல்யாணத்துக்கு இப்போ என்ன அவசரம்? எம்.ஏ. முடியட்டும்'' என்று மறுத்தான் மகன்.

அதற்கு மேல் அவனைக் கட்டாயப்படுத்தாமல் விட்டுவிட்ட ஏகாம்பரம், கல்லூரியில் அவனுடைய நடவடிக்கையைக் கண்



கட்சித் தாவல்

அய்க்கண்

காணிக்கச் சில ஆட்களை நியமித்தார். அவர்கள் கொண்டுவந்த நம்பகமான செய்தி எம். எல். ஏ.யின் தொந்தியில் புளியைக் கரைத்தது.

ஆனந்த் பொருளாதார முதுகலைப் படிப்பைவிட சொல்லித் தெரியாத மன்மதக் கலையைத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருக்கிறானும். 'ரம்பா டெக்ஸ்டைல்ஸ்' முதலாளியின் மகள் கவிதாவின் வண்ண வண்ணச் சேலைகளில் மயங்கி, பின்னால் சுற்றித் திரிகிறானும். அந்த உண்மையையும் தந்தையிடம் ஒப்புக் கொண்டான்.

''ஏண்டா, இத்தனை நாளும் ராஜியைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிருந்தியே, இப்போ ஏன் திடீர்னு இன்னொருத்தியைக் கட்டிக்கிறேன்னு சொல்றே?'' என்று கதறினார் ஏகாம்பரம்.

''கவிதாவைப் பார்க்கிறவரை, ராஜியைக் கல்யாணம் செஞ்சுக்கிற எண்ணத்தோடு தான் இருந்தேன். ஆனால் கவிதாவைப் பார்த்துப் பழகிய பிறகு — நானும் கவிதாவும் தம்பதிகளாவதற்கென்றே பிறந்தவர்கள். 'மேட் ஃபார் ஈச் அதர்' ஜோடின்னு தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றான் அந்தப் பிறவிக் காதலன்.

''ஏண்டா பாவி! உன்னைப் பத்தி எத்தனை நாளாய், எவ்வளவோ நினைச்சிருந்தாங்களே ராஜியும் உன் அத்தையும் — அவங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா?''

''ஏம்பா, நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றி நீங்க பேசறீங்களா? ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி ஆயிரக் கணக்கான ஜனங்கள் கிட்ட ஓட்டு வாங்கி எம்.எல்.ஏ. ஆகிவிட்டு, சடார்னு இன்னொரு கட்சிக்குத் தாவினீங்களே அது உங்களுக்கு ஓட்டுப் போட்ட ஜனங்களுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகம் இல்லையா?''

''அது... அது நம்பிக்கைத் துரோகம்னு எப்படிச் சொல்றே?... அதுதான் அரசியல் சாதுரியம் — பொலிடிகல் டிப்ளமஸி...'' என்று ஏதோ சொல்லிச் சமாளித்தார் எம். எல். ஏ.

''அது அரசியல் சாதுரியம் இல்லை. அரசியல் வியாபாரம் — பொலிடிகல் பிஸினஸ்! எதிர்க் கட்சியில் இருப்பதை விட ஆளுங் கட்சியிலே இருப்பது அதிக லாபம் தரும்னு கணக்குப்போட்டுக் கட்சி தாவிட்டீங்க. அதுமாதிரிதான் நானும். உங்க மகன் இல்லையா? ராஜியைக் கல்யாணம் செஞ்சுக்கிறதை விட கவிதாவைக் கல்யாணம் செஞ்சுக்கிறது அதிக லாபம்னு கணக்குப் போட்டு, காதலை மாத்திக்கிட்டேன்...''

''டேய்! அரசியல் வேறே, தனிப்பட்ட வாழ்க்கை வேறே — தெரியுமா? அரசியலில் தந்திரம், ஏமாற்று, மோசடி செய்யலாம்!''

''சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்த காந்தியின் நாட்டிலே இப்போ, அரசியல் எவ்வளவு மட்டமாகப் போய் விட்டது? காதலை மாத்திக்கிட்டது தப்புன்னு சொல்றீங்களே, அது மாதிரி கட்சியை மாத்திக்கிடறது குற்றம்னு உங்களாலே சட்டம் கொண்டு வர முடியுதா?'' என்று கேலியாகச் சிரித்தான் மகன்.

''உனக்கு ராஜியைக் கல்யாணம் செய்து வைப்பதாக என் மைத்துனர் சாகும்போது வாக்குக் கொடுத்திருக்கேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியது என் கடமையில்லையா?''

''வாக்குறுதி மேலே நீங்க எவ்வளவு மதிப்பு வச்சிருக்கீங்கன்னு எனக்குத் தெரியாதா? 'இந்தக் கட்சியில் நான் சாகும்வரை இருப்பேன்'னு நீங்க சொன்ன வாக்குறுதியெல்லாம் எத்தனை நாள் நின்னுச்சு?.... தேர்தல் மேடைகளில் ஆயிரக் கணக்கான மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையே நீங்க நிறைவேத்தறதில்லை; ஒருத்தருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறினால் என்ன?''


''டேய்! அரசியல் வாழ்க்கையிலே நான் எத்தனை அயோக்கியனாக இருந்தாலும் சொந்த வாழ்க்கையிலே சொன்ன சொல் தவறாதவன். தொழில் வாழ்க்கையில் நாணயஸ்தன்னு எனக்குப் பேர் இருக்கு'' என்று நெஞ்சை நிமிர்த்திச் சொன்னார் எம்.எல்.ஏ.

அப்பாவின் பேச்சைக் கேட்டுக் கலகல என்று சிரித்தான் ஆனந்த்.

''அதென்னப்பா அரசியல் வாழ்க்கை, சொந்த வாழ்க்கை, தொழில் வாழ்க்கை, சமூக வாழ்க்கை, ரகசிய வாழ்க்கைன்னு எத்தனை வாழ்க்கை ஒரு மனிதனுக்கு? மனிதன் என்கிறவன் ஒருத்தன்தான். அவன் வாழ்றதெல்லாம் சேர்ந்து ஒரு வாழ்க்கைதான்... உடம்பைப் பிரிச்சுச் சொல்லி, என் மூக்கு யோக்கியமானது; கண்தான் அயோக்கியமானதுன்னு சொல்ற மாதிரி இருக்கு, நீங்க சொல்ற அரசியல் வாழ்க்கை, சொந்த வாழ்க்கைப் பிரிவுகள்!... 'மை லைஃப் இஸ் மை மெஸ்ஸேஜ்'னு சொன்னாரே மகாத்மா காந்தி — அதை மறந்திட்டீங்களா? உடம்பிலே ஒரு பாகம் அழுக ஆரம்பிச்சிட்டா உடம்பு பூராவுக்குமே ஆபத்து தான்.... உங்க வாழ்க்கையிலே எங்கே பாவம் பண்ணினாலும் அதுக்கு உரிய பலாபலனை அனுபவிச்சுத்தான் ஆகணும்...'' என்று சொல்லிவிட்டுச் சென்ற மகனைக் கண்டிக்க, தார்மீக உரிமையோ, வலிமையோ இல்லாமல், வாயடைத்து நின்றார் எம்.எல்.ஏ!

''அப்பா, சுவரில் அடிக்க முடியாம அடித்து அப்படியே விட்டு வைத்திருந்தோமே ஒரு ஆணி, அதிலே அம்மா தலையை மோதிண்டு...''
''அடடா, காயம்பட்டு இரத்தம் வருகிறதா?''
''இல்லேப்பா ஆணி முழுவதும் சுவருக்குள் போய் விட்டது.''
- ஏ. கே. சங்கர்




லக்ஷ்மி
எழுதும்
புதிய தொடர்கதை
கழுத்தில்
விழுந்த மாலை...
கல்கி
ஜனவரி 25 இதழில் ஆரம்பம்

எங்கள் பிறந்த நாளில் உங்களுக்குக் கூறுகிறோம் பொங்கல் வாழ்த்து !



'' பெரும் பொருளால் பெட்டக்கதாகி
அருங் கேட்டால் ஆற்றவிளைவது நாடு '' — குறள்

அனைவருக்கும் உணவு வழங்குதலே தேசிய வளர்ச்சியின் அடிப்படை என்ற கொள்கையுடன், 1965-ம் ஆண்டு, பொங்கல் நன்னாளிலிருந்தே பணியாற்றிவரும் இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் இந்நன்னாளில் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பரந்த பாரதத்தின் எண்ணற்ற விவசாயிகளுக்கு 16 ஆண்டுகளாக நியாய விலை வழங்கி, இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் ஆண்டுதோறும் 100 லட்சம் டன்களுக்கும் மேலாக உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து சேமிப்புக் கிடங்குகளில் விஞ்ஞான முறையில் பாதுகாத்து வருகிறது.

ஆண்டுதோறும் 12 லட்சம் கிலோ மீட்டருக்கும் மேலாக தானியங்களை ரயில் மற்றும் சாலை மார்க்கமாக கொண்டு செல்வதோடு நாடெங்கிலுமுள்ள நுகர்வோர்க்கு எங்கும் என்றும் தொடர்ந்து இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் வழங்கி வருகிறது.

ஒவ்வொரு பொங்கல் பொன்னாளும் இந்திய உணவு கார்ப்பொரேஷனுக்கு தான் செயலாற்றவேண்டிய பொறுப்பினை நினைவூட்டும் நன்னாளாக அமைகிறது.


இந்திய உணவு கார்ப்பொரேஷன்



ACIL 0174 80 TM

ராஜலக்ஷ்மி

ஹேமா ஆனந்த தீர்த்தன்



கபாலீஸ்வரர் கோவிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ராஜலக்ஷ்மியின் கவனத்தை அந்த வயதான தம்பதி கவர்ந்தனர்.

அந்த அம்மாளின் கைகளில் ஒரு தாம்பாளம். அந்தத் தாம்பாளத்தில் ஒரு ராமர் பட்டாபிஷேகப் படம். படத்திற்கு முன்னல் ஒரு சின்ன ஊதுவத்தி ஸ்டாண்டில் இரண்டு மூன்று மெல்லிய ஊதுவத்திகள் எரிந்தபடி லேசாக மணம் பரப்பிக் கொண்டிருந்தன. அந்த முதியவர் வால்மீகி ராமாயணமோ வேறு எதுவோ பிரவசனம் செய்து கொண்டிருந்தார்.

தெருவில் போகிறவர்களில் ஓரிருவர் கூட நின்று அவர் பேசுவதைக் கேட்கவில்லை.. ஆனல் அதிசயமாகப் பார்த்துக் கொண்டு போகிறவர்கள் பலர். சிலர் அதுகூடச் செய்யவில்லை. தாம்பாளத்தில் சில்லறைக் காசுகள் சில, கிடந்தன.

ராஜலக்ஷ்மி அவர்களை நெருங்கித் தானும் பர்சிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து அந்தத் தாம்பாளத்தில் இட்டாள்.

''தீர்க்க சுமங்கலியா சந்தோஷமா இரு அம்மா'' என்றார் அந்தப் பிராம்மணர்.

''உன்னோட தாராள மனசைத் தெரிஞ்சிண்டு, இடத்தைக் கொடுத்தா மடத்தைப் பிடுங்கற கதையா நினைச்சுண்டுடாதே. என்னமோ, உன்னைக் கேட்டா இல்லேன்னு சொல்ல மாட்டேங்கற ஒரு நம்பிக்கைதான்.'' என்று அந்த அம்மாள் தீனமாக உரைத்தாள்.

''பரவாயில்லே சொல்லுங்கோ'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''நாளைக்கு காத்தாலே உங்காத்துலே எங்க ரெண்டு பேரோட சாப்பாட்டையும் வெச்சுக்கலாமா, சௌகரியப் படுமான்னு கேக்கணும்.''

''இவ்வளவுதானே? இதுக்கா இவ்வளவு தயங்கறேள்? தாராளமா வாங்கோ.''

வெள்ளை வெளேரென்று மல்லிகைப் பூக்களைக் கொட்டினாற் போல் சாதம். மணக்கும் நெய். சேப்பங்கிழங்கு மோர்க் குழம்பு, அப்பளாம். தக்காளி ரசம். கெட்டித் தயிர்.

''தேவாமிர்தமா இருந்ததும்மா. சாப்பாடு. எங்க வயறும், மனசும் குளிர்ந்திருக்காப்பலே உன் மனசும் என்னிக்கும் சந்தோஷமா, திருப்தியா இருக்கணும்'' என்று கிழவர் வாழ்த்தினர்.

''அப்பா அம்மா சாப்பிட்டாச்சா?''

''பத்து மணிக்கே ஆயிடுத்து.''

''நீ?''

''இனிமேதான். ஞாயித்துக் கிழமை தானே? ஆபீஸ் அவசரம் ஒண்ணுமில்லையே''

''அப்ப மத்த நாள்ளெ?''

''ஆபீசுக்குப் போகணுமே. எட்டு மணிக்கே சமையலை முடிச்சு, சாப்பிட்டுட்டு ஆபீசுக்கு ஒன்பது மணிக்கெல்லாம் போயாகணும். போறதுக்கு முன்னடி அப்பாவுக்கு ஒரு டிபன் பாக்ஸ்லேயும், அம்மாவுக்கு ஒரு டிபன் பாக்ஸ்லேயும் பிசைஞ்சு வச்சுட்டுப் போயிடுவேன். அப்பா ஹால்லேயே சாப்பாடு, பேப்பர் படிக்கிறது, ரேடியோ கேக்கறது எல்லாம். படுத்துக்கணும்னு தோணரப்பப் பக்கத்திலேயே போட்டிருக்கே சோபா - கம் - பெட், அதுல படுத்துப்பார். அம்மாவோட சாப்பாடு அவங்க ரூம்லேயேதான். மத்தியானம் காப்பி மட்டும் அம்மாவோ அப்பாவோ யாராவது ஒருத்தர் போட்டு மற்றவருக்கும் கொடுத்துடுவா. டிபன்கிபன் வேணுங்கிறது கிடையாது. சாயங்காலம் ஆறு மணிக்கெல்லாம் நான் வந்துடுவேன். ஏழு மணிக்குள்ளே மூணு பேரோட சாப்பாடும் முடிஞ்சுடும்.''

''சரி, நீ சாப்பிடு. நான் வேணு போடறேன்.'' என்றாள் அந்த அம்மாள்.


ராஜலட்சுமியும் அதை ஏற்றுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள்.

அவளுக்குப் பரிமாறியபடியே தங்களின் கதையையும் விவரித்தாள் அந்த அம்மாள்.

பரிதாபமான கதை.

கராத்தே பயிற்சி 20

பயிற்சியாளர் : டோனி பொன்னையா
சித்திரம் : [illegible] படம் : உத்ரா
தயாரிப்பு : குண்டுமணி



X - BLOCK



முன்னேக்கி வரும் உதையை இரண்டு கைகளையும் மடக்கி X முறையில் பலம் கொண்டு தடுக்கலாம். இம்முறை தடுத்தல் சில சமயங்களில் மட்டும் சாத்திய மாகும். குறிப்பாக உயிர் நிலையை (Kidney Side) நோக்கி வரும் உதையை இம்முறையில் தடுப்பது சாலச் சிறந்தது.

ஒன்றல்ல இரண்டல்ல மூன்று ' ஆண் பிள்ளைகள் அந்த முதியவர்களுக்கு. எல்லோரும் ' நல்ல நிலையிலேதான் இருக்கின்றனர். ஒருத்தன் பெங்களூரில், இரண்டாமவன் பம்பாயில், மூன்ருமவன் கல்கத்தாவில். ஒவ்வொருத்தனும் இரண்டாயிரம் மூவாயிரம் என்று சம்பாதிக்கிருர்கள். கல்யாணமாகிற வரையில் ஒழுங்காயிருந்த பிள்ளைகள் மனைவி என்று ஒருத்தி வந்ததும் அவள் வலையில் விழுந்து, பெற்ருேர்களை அலட்சியம் செய்து விட்டார்கள். மூன்று நாட்டுப் பெண்களில் ஒருத்தியாவது நல்லவளாக வாய்த்திருக்கக் கூடாதோ? அவர்கள் விதி அப்படி என்று அந்த அம்மாள் விதியைத்தான் நொந்து கொண்டாளே ஒழிய தன் பிள்ளைகளேயோ, மருமகள்களையோ குற்றம் சொல்லவில்லை. பெங்களூர், பம்பாய், கல்கத்தா என்று ஒவ்வொரு ஊராகப் போய்ப் பிள்ளையுடன் இருக்க முயன்றிருக்கிருர்கள். ஆனல் ஒருத்தன் கூட இரண்டு மாசம்கூட அவர்களை வைத்துக் கொள்ளவில்லை. ஓட்டிவிட்டார்கள். கல்கத்தா பையன் அவர்கள் சென்னை திரும்புவதற்கு ரயில் டிக்கட் கூட வாங்கிக் கொடுக்க முடியாதென்று கூறிவிட்டாளும். அவனுடைய நண்பன் ஒருவன்தான் அவனுக்குத் தெரியாமல் அவர்களுக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து அனுப்பி வைத்தானும்.

மந்தவெளி அருகில் ஒரு வீட்டில் ஒரே ஒரு சமையல் அறை, பாதி கூடம் ஐம்பது ரூபாய் வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசித்து வருகிருர்கள். புரோகிதம் கற்றுக் கொண்டு நாலு வீட்டில் அமாவாசை, திதி என்று செய்து வைத்து வயிறு வளர்த்து வருகிருர்கள். போதவில்லை. அதனுல்தான் இந்தத் ''தெரு யாசகம்'' தொடங்கிஞர்களாம். ஒரு நாளைக்கு இரண்டோ மூன்ருே கிடைக்கிறதாம்.


அம்மாள் கதை சொன்னுள். அவள் கணவர் பெருமூச்சு விட்டார். இருவர் முகத்திலும் சோகம் கப்பியிருந்தது.

''உன்னைப் போல் ஒரு பொண் இருந்திருந்தாலாவது எங்களை இப்படிக் கைவிட்டிருக்க மாட்டாளோ என்னவோ, அப்பா அம்மான்னு எத்தனை அன்பா நீ பெத்தவாளைக் கவனிக்கக்கறே. பார்க்கறதுக்கே சந்தோஷமாயிருக்கு'' என்று கூறிஞள் அந்த அம்மாள்.


''ஆமா. நீ இப்படி ஆபீசுக்குப் போய் வேலை செஞ்சு சம்பாதிக்கணுமா? உனக்கு அண்ணன், தம்பி யாரும் இல்லையா?'' என்று அந்தக் கிழவர் கேட்டார்.

''இருக்காங்களே. ரெண்டு அண்ணன், ஒரு தம்பி'' என்ருள் ராஜலட்சுமி சிரித்தபடியே.


பிலிப்ஸ் 2-பாண்டு ரேடியோக்கள் ஏற்றமிகு தரம், எளிதான விலையிலே.




விஜய்
ரூ. 240/-*




பலநாதூர் 2
ரூ. 250/-*




டைகர்
ரூ. 275/-*



ஜவான்
ரூ. 305/-*



ஃப்லெட்டின் டீலக்ஸ்
ரூ. 340/-*



ப்ரின்ஸ் டீலக்ஸ்
ரூ. 360/-*

மின்சார மாடலும் கிடைக்கிறது.
ரூ. 415/-*

PHILIPS மேலானதை உங்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம்
பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி

*சில்லறை விற்பனை உச்சவிலை, கலால் வரி உள்பட்டது. மாநில விற்பனை வரி மேலும் இதர தல வரிகள் தனி.

பிலிப்ஸ்

CASPR-800-103 TAM

திரைப்பட ரேஸ் முடிவு

WIN

சென்ற அக்டோபர் மாதம் நாலு வாரங்களும் நடந்த திரைப்பட ரேஸில் ஏராளமான வாசகர்கள் பங்கேற்றுக் கொண்டிருந்தனர். அவர்களில் பதினைந்து கல்கி வாசகர்கள் சரியான விடைகளை எழுதிப் பரிசுத் தொகையான ரூபாய் ஓராயிரத்தைச் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர்.

சரியான விடை:

1. சுஜாதா — குதிரை எண் 5 (நடிப்பு)
2. எல்லாம் உன் கைராசி — குதிரை எண் 4 (இசை)
3. வள்ளி மயில் — குதிரை எண் 2 (ஒளிப் பதிவு.)
4. மற்றவை நேரில் — குதிரை எண் 1 (டைரக்ஷன்)

பரிசு பெறுபவர்கள்:

1. எஸ். அருண், சென்னை-1.
2. வி. சங்கரன், சென்னை-5.
3. வி. கௌதம், சென்னை-44.
4. ஜே. பி. ராஜேந்திரன், வட மதுரை.
5. டி. குமரேசன், கடலூர்
6. எஸ். பத்ரி நாராயணன், திருச்சி
7. ஆர். வி. முருகன், திலக்கோட்டை
8. எம். மூர்த்தி, சென்னை-5
9. இரணியல் ரவி, நெய்யூர்.
10. டி. சுவாமிநாதன், புதுக்கோட்டை
11. ம. சிவசாமி, கோவை.
12. எஸ். ராஜகோபால், சென்னை-82
13. ஆர். பரமசிவம், திருச்சி.
14. ஆர். நாராயணசாமி கோயமுத்தூர்-4
15. கலை. சந்திரசேகரன், திருப்பூர்-4.

''பின்னே.... எங்களுக்கு ஒரே குழப்பமாயிருக்கு.''

''உங்க சந்தேகம் எனக்குப் புரியறது. இது என் புக்ககம். அப்பா அம்மான்னு நான் குறிப்பிடறது என்னோட மாமனாரும், மாமியாரும்தான். அப்படியே சொல்லிச்சொல்லிப் பழக்கமாயிட்டுது.''

''அப்படியா? சந்தோஷம்மா. உங்க ஆத்துக்காரர்?'' — அந்த அம்மாள்.

''அவர் வெளி நாட்டிலே இருக்கார். அமெரிக்காவுலே. இங்கே எனக்குப் பொழுது போக வேலைக்குப் போயிண்டிருக்கேன்.''

''ஏன், நீயும் அமெரிக்காவுக்குப் போக முடியாதோ?''

''போகலாம். ஆனா நான் போயிட்டா இவாளைக் கவனிச்சுக்கிறதுக்கு யாரும் இல்லே. எங்காத்துக்காரர் இவாளுக்கு ஒரே பிள்ளை. அதனாலே நான் இங்கேயே இருந்துட்டேன்.''

''குழந்தைகள்.... உங்களுக்கு?''

''இனிமேல்தான்'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''உங்க மாமனார், மாமியார் பூர்வ ஜன்மத்துல வேணுங்கற புண்ணியம் பண்ணியிருக்கணும். உன்னைப்போல ஒரு நாட்டுப் பெண் கிடைக்கிறதுக்கு. நாங்க என்ன பாவம் பண்ணினமோ எங்களுக்கு வாய்ச்ச மூணு நாட்டுப் பெண்ணும் எங்களை வீட்டுலேயே அண்ட விடாமத் துரத்தியடிச்சுட்டா. ஒரே நாட்டுப் பொண்ணு, நீ இப்படி புருஷனைக் கூடப் பிரிஞ்சிருக்கச் சம்மதிச்சு அவரோட அப்பா, அம்மாவுக்குச் சேவை செஞ்சுண்டிருக்கே. உன்னைப் போல நாலு பேராவது இருக்கிறதுனாலேதான் லோகம் இன்னும் அழிஞ்சு போகாம இருக்கு'' என்றார் கிழவர்.

''என் நாட்டுப் பொண் நீங்க நினைக்கிறதைவிட உசத்தி'' என்று கூறியபடியே அந்த வீட்டுப் பெரியவர் தோன்றினார்.

அவர் வரவை எதிர்பார்த்திராத மூன்று பேரும் பய பக்தியுடன் எழுந்து நின்றார்கள்.

''பத்து நிமிஷமா இங்கே நின்னுண்டு நீங்க பேசறதை யெல்லாம் கேட்டுண்டுதான் இருந்தேன். ராஜலட்சுமி உங்க கிட்டச் சொன்னது முழுக்க நிஜமல்ல. பாதிதான் நிஜம். பாதி பொய்'' என்றார் பெரியவர்.

''அப்பா. போறும். போய்ப் படுத்துக்குங்கோ'' என்று ராஜலட்சுமி அவரைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

''நீ சும்மா இரம்மா. நான் சொல்ல வேண்டியதைச் சொன்னாத்தான் என் மனசுக்குச் சமாதானம். உங்க மூணு பிள்ளைகளைப் பத்திச் சொன்னேளே அதே கதைதான் எங்க வீட்டிலேயும். எனக்குப் பிறந்த ஒரே பிள்ளை எட்டு வருஷமா எங்களை இருக்கிங்களா, போயிட்டிங்களான்னு கேக்காம அமெரிக்காவிலே போய் உட்கார்ந்துண்டு, அங்கே ஒரு வெள்ளைக்காரியைக் கட்டிண்டு, குழந்தையும் குட்டியுமா இருக்கான். எங்களைத்தான் மறந்தான்னா, கட்டிண்ட இவளையும் மறந்துட்டான். பொழுது போகாம இவ வேலைக்குப் போயிண்டில்லே. இவ கொண்டு வர்ற சம்பளத்துலதான் எங்களோட சாப்பாடும், துணி மணியும் மருந்தும் வைத்தியமும் நடந்துண்டிருக்கு. தறுதலையான என் பிள்ளை கையாலே மூணு முடிச்சு போட்டுண்ட ஒரே பாவத்துக்காக இவ இப்படி எங்களுக்காகவுடா உழைச்சுண்டிருக்கா.'' என்று கூறிப் பெரியவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அம்மா, ராஜலக்ஷ்மி, உன்னோட முகத்தைப் பார்த்து ராஜலக்ஷ்மிங்கர பேர் உனக்கு ரொம்பப் பொருத்தமாயிருக்குன்னு நினைச்சேன். ஆனா இப்ப உன் மனசோட அழகையும் தெரிஞ்சுண்டேன். நீ எனக்கு வயசிலே சின்னவளாப் போயிட்டே. இல்லேன்னா உன் கால்லே விழுந்து உன்னோட பாத தூளியை நெத்தியிலே வெச்சுப்பேம்மா. உன்னோட இந்தத் தபஸ் வீண் போகாது. சீக்கிரமே உங்காத்துக்காரர் மனம் திருந்தித் திரும்பி வந்து உன்னை ஏத்துக்குவான். ஸ்ரீராமன் அருள்வான்'' என்று சொல்லிக் கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

புதிய

ஃபேப்

டிட்டர்ஜெண்ட் கட்டி

வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக



விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத ஃபார்முலா.

[illegible]

இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும் தரும் சலவைக்கு–புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டி!



தமிழ்நாடு மற்றும்
பாண்டிச்சேரியில் கிடைக்கிறது.

கோல்கேட்–
பாமோலிவ்

3. பேராசிரியரின் அனுபவம்

வஸந்த் சந்தேகக் கதவு திறந்து உடனே, 'இனியா! இன்னி! நீயா! இ நீயா! நான் காண்பது கனவா இல்லே...''

''ஷ்ஷ்.... பின்னால அப்பா!''

பைப் புகை நெடி மூக்கைத் துளைத்தது. கதவை முழுக்கத் திறந்து, பேராசிரியர் அப்பாதுரையைப் பார்த்து ''ஓ! வாங்க ஸார் வாங்க! உங்க பாத — அது என்ன? — தூளி பட்டு இந்த இடம்... '' என்று துவங்கிய வனைத் தடுத்து,

''கணேஷ் இல்லேயா?'' என்றார்.

''வெளியே போயிருக்கிறார். வந்துரு வார்... ரெண்டு பேருமே முழுசா வந்துட்டீங்களே! நான் என்னவெல்லாம் கற்பனை பண்ணிட்டேன் தெரியுமா? சரியான சமயத்தில வயத்திலே மில்க்! உள்ளே வாங்க ஸார். ஸாரி! பாச்சலர்ஸ் ரூம்... ''

பேராசிரியர் அப்பாதுரை உள்ளே வந்தார்.

''அப்பா இதான் வஸந்த்!''

அவனைக் கவனிக்காமல் சுற்று முற்றும் பார்த்தார். ஐம்பது வயதிருக்கும். கிட்டிப் புள் மாதிரி குறுந்தாடி வைத்திருந்தார். ரிம் இல்லாத கண்ணாடி..அகலமான நெற்றியில் 'பேராசிரியர்' என்று எழுதியிருந்தது. காதருகே போனால் போகிறது என்று ரோமங்கள். மற்றபடி வெற்று.

''ஆஷ் டிரே இருக்கா?''

''நிறைய இருக்கு... ஸாரி ஒண்ணுதான் இருக்கு. நிறைய எப்படி இருக்கும்? இங்க யார்சிகரெட் குடிக்கிறா... இனியா உக்காரு!''

''கணேஷ்ங்கறது....''

''என் சீனியர் ஸார். ஸார், உங்க ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாத்தையும்

சுஜாதா



வசந்த்! வசந்த்!

படிச்சிருக்கேன். பிரமாதம். ரொம்ப பார்டா எழுதியிருக்கீங்க!''

''என்ன படிச்சிருக்கே சொல்லு!'' என்றார் கருக்கமாக.

''அது வந்து... அது என்னது இனியா... நீகூட என்கிட்டப் படிக்கக் காட்டினியே! டாப்பா இருந்ததே?''

இனியா பேச்சை மாற்றி, ''அப்பா நாம வந்த விஷயம்!'' என்றான்.

''ஓ எஸ்! வஸந்த்! இன்னிக்கு எனக்கு ஒரு விநோத அனுபவம் ஏற்பட்டுது. வெரி ஸ்ட்ரேஞ்ச்! கணேஷை அட்வைஸ் கேட்கலாம்னுட்டு...''

''என்னைக் கேளுங்களேன். ஃபுல்லா எதிரிலேயே இருக்கேனே!''

''அவர் வந்துறட்டுமே!''

''என்ன சாப்பிடறீங்க?''

''ஒண்ணும் வேண்டாம்ப்பா.''

''இனியா என்ன நீ சொல்லாமத் தனியா புறப்பட்டு வந்துட்டே? நான் எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா? இங்க பாரு..'' நகம் பூராக் கடிச்சு முடிச்சாச்சு!''

''அப்பா வந்து அழைச்சுக்கிட்டுப் போயிட்டார் வஸந்த். ஸாரி!''

''அவசரமா அவளை அழைச்சுட்டுப் போக வேண்டியதா யிருந்தது.''

''ஒண்ணு கேக்கலாமா ஸார்?''


''கணேஷ் வரட்டுமே!''

''மறுபடியும் கணேஷ்! ஹூம்! வரட்டும்!''

சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''பைப் அணைஞ்சு போயிடுச்சு. பத்த வைக்கட்டுமா?''

''வேண்டாம்'' என்றார். அதிகம் பேச விரும்புகிறவராகத் தோன்றவில்லை. வஸந்த் அவரை ஒருமுறை எதிரொலி இல்லாமல்



புன்னகை செய்தான். சட்டென்று ஒரு ஐடியா உதயமாகியது.

''ஸார், உங்ககிட்ட சரித்திரத்தில சந்தேகம் கேட்கணும். லேட்டர் சோளாஸ்ல!''

அவர் சற்றுப் பிரகாசமானார். ''உனக்கு லேட்டர் சோளாஸ்ல இன்டரஸ்ட் உண்டா?''

''இன்டரஸ்ட்டா, பைத்தியம் ஸார்.. ஒரு பக்கம் ஆரிய பவன் பாதாம் அல்வாவை வையுங்க, இன்னொரு பக்கம் லேட்டர் சோளாவை வையுங்க. நான் பின்னதை நோக்கித்தான் பாய்வேன். ஆர்யபவன்? நோ!''

''பரவாயில்லையே. ஒரு வக்கீலுக்குச் சரித்திரத்திலே ஈடுபாடா!''

''ரெண்டிலேயும் நிறையச் சரடு விடலாம் இல்லையா?''

''சரடா?''



''அப்ப... கட்டாயம் மாப்பிள்ளை இழுப்புக்கு வந்துடுவீங்கல்லே?''
''மாப்பிள்ளை அழைப்புன்னு சொல்லுங்க...''
''இல்லே! மாப்பிள்ளை இழுப்புதான். பெட்ரோல் விக்கிற விலையிலே காரிலே மாப்பிள்ளையை வச்சுக் கயிறுகட்டி எல்லாரும் இழுக்கப் போகிறோம். நீங்களும் வந்து ஒரு கை குடுங்கோ...''
- ஜி. நடராஜன்

''சரடுன்னு ஐ மீன் நிறையப் படிக்கணும்னு சொல்ல வரேன்! இனியா உங்கிட்டச் சொன்னேனோ இதை? என் ஃப்ரண்ட் சம்பத்துனு பி.ஏ. ஹிஸ்டரி படிச்சிட்டிருந்தான். க்வார்ட்டர்லி எக்ஸாம். ஹிஸ்டரி பேப்பர். மூணு மணி நேர பேப்பர். Do you consider Raja raja as the greatest of the Chola kingsனு ஒரு பெரிய கட்டுரை எழுதச் சொல்லியிருந்தாங்க. இவன் No I don'tனு எழுதிட்டு மாட்னிக்குப் போய்ட்டான் ஹ ஹ ஹா!''

அந்த வட்டாரத்திலே யாருமே சிரிக்கவில்லை. பேராசிரியர் முகம் சற்றுக் குறுகி, ''யங்மேன் சரித்திரம் என்கிறது சிரிக்கிற விஷயமில்லை'' என்றார்.

''சும்மா சின்னதா ஒரு ஜோக் அடிச்சுப் பார்த்தேன் ஸார். உங்களுக்கு மெக்ஸிகோ தேசத்து வாண்டரி ஜோக் தெரியுமா?''

இனியா அவசரமாக ''வஸந்த்! நீங்க என்னவோ அப்பாவைச் சந்தேகம் கேட்கணும்னீங்களே!'' என்றாள்.

''அதான் ஸார் இந்த உத்தம சோழனைப் பத்தி எனக்கு ஒரு பெரிய சந்தேகம்!''

''என்ன?''

''பிளாகாட் ஆதித்த கரிகாலனைக் கொன்னவங்களுக்கு ஏன் பனிஷ்மெண்ட் கொடுக்கலை? அந்தக் கொலைக்கும் இவனுக்கும் கனெக்‌ஷன்னுதானே அர்த்தம்?''

''அது அவ்வளவு சிம்பிள் இல்லை வஸந்த். பஞ்சவன் பிரமாதி ராஜன்னு பாண்டி நாட்டு அரசியல் அதிகாரி ஒருவன் அதிலே சம்பந்தப்பட்டிருக்கான்!''

''அப்படியா? சொல்லுங்க ஸார்! ரொம்ப இன்டரஸ்டிங்!'' என்றான்.

இனியா அப்பாவின் பின்புறத்திலிருந்து, 'உன்னை வெட்டறேன் வா!' என்று கையைக் காட்டினாள்.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டுப் பேராசிரியர் நிறுத்தினார். கணேஷ் உள்ளே வர ''பாஸ்! உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்காங்க!'' என்றான்.

கணேஷ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து ''ஸாரி, லேட்டாயிடுத்து!'' என்றான்.

''பாஸ் இவர்தான் ப்ரொபஸர் டாக்டர் அப்பாதுரை. இது டாக்டர் இனியா. நான் சொல்லலை!''

''ஓ! இவங்கதானா? என்னமோ காணாமப் போயிட்டதுன்னு சொன்னே!''

''அதைப் பத்தித்தான் உங்ககிட்டப் பேச வந்தேன் கணேஷ்!''

''அப்ப நீங்க காணாமப் போகலியா?''

''அதாவது முதல்லே காணாமப் போனாங்க! அப்புறம் வந்துட்டாங்க!''

''வஸந்த் நான் சொன்னேன் பாத்தியா? மிஸ் இவன் அறுவை ஜோக்குக்குப் பயந்துக்கிட்டுத்தானே ஓடிட்டீங்க!... உட்காருங்க ப்ரொபஸர்... என்ன விஷயம்?''

''கணேஷ்! இன்னிக்கு காலை இருந்து எனக்கு ஒரு விநோத அனுபவம்...''

''என்னவோ வஸந்த் சொன்னான். தலைகால் புரியலை... உங்களை யாராவது கிட்நாப் பண்ணப் பார்த்தார்களா?''

''தெரியலை. புரியலை.''

''என்ன நடந்தது சொல்லுங்க!''


பேராசிரியர் அப்பாதுரை சுதாரித்து உட்கார்ந்து கொண்டு தன் பைப்பை நிரப்பிக்கொண்டார். பற்றவைத்துப் புகை போக்கிவிட்டுப் பேசினார்.

''காலை யுனிவர்ஸிடிக்குப் போனேன். ஞாயிற்றுக் கிழமையா இருந்தாலும் டிபார்ட்மெண்டிலே ஒரு ரெஃபரன்ஸ் பார்க்கப் போயிருந்தேன். நுழையறதுக்கு முன்னாடி ஒரு பெரிய கார் சக்குன்னு வந்து நிக்குது...''

''கத்தி செருகியிருப்பல!'' என்றான் வஸந்த்.

''கொஞ்சம் குறுக்கே பேசாமக் கேக்கறியா வஸந்த்'' என்றான் கணேஷ்.

''கார்லே ஒரு ஆள் சுமார் நாற்பது வயசிருக்கும். பார்த்தா வசதியுள்ளவன் மாதிரி



Imageads-TI-1314

நாடெங்கும் நலம் கொழித்திடவே வாழ்த்துகின்றோம்

பொங்கல் திருநாளை எல்லோரும் மகிழ்ச்சியுடன்
கொண்டாட எங்கள் நல்வாழ்த்துக்கள்

பல்வேறு துறைகளில் ஆக்கப்பணி

டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்

சென்னை : 600 001

சைக்கிள்கள், சைக்கிள் சீட்கள், செயின்கள், டைனமோ
லாம்ப் செட்டுகள், எஃகு குழாய்கள், மெட்டல்
செக்ஷன்கள் மற்றும் 'Z' பர்லின்கள் தயாரிப்பாளர்கள்.

வாசனையா யிருந்தான். இறங்கி மரியாதையோட 'ப்ரொபஸர் அப்பாதுரை உங்களைச் சந்திச்சதிலே எனக்கு ரொம்பப் பெரிய பாக்கியம்னு' ஆரம்பிச்சான். என்ன விஷயம்னு கேட்டேன். என் கூட ஒரு அரை மணி வரமுடியுமான்னு கேட்டான். எங்கேன்னேன்; எங்கப்பா கிட்டன்னான். உங்கப்பா யாரு? அவரை எனக்குத் தெரியாதேன்னேன். எங்கப்பாவுக்கு உங்களைத் தெரியும். நீங்க சரித்திரத்திலே எப்பேர்ப்பட்ட அத்தாரிட்டி என்று தெரியும்னு இப்ப வஸந்த் ஐஸ் வெக்கலை? அதே மாதிரி வெச்சான். எங்கப்பா உங்களைச் சந்திக்க விரும்பறார்னான். வீடு கிட்டத்தான் இருக்கு. போயிட்டு வந்துறலாம்னு சொன்னான். கார்ல ஏறிக்கிட்டேன். கார் பாட்டுக்குப் போறது போறது போய்கிட்டே இருக்குது. கிண்டி தாண்டிடுச்சு... மவுண்ட் தாண்டிடுச்சு. மீனம்பாக்கம் தாண்டிடுச்சு.... 'எங்கப்பா? செங்கல்பட்டா'ன்னு கேட்டேன். 'இல்லே வந்தாச்சுன்னான். பல்லாவரத்துக்கு முன்னாடி சட்டுனு ஒரு சின்னப் பாதையிலே கார் திரும்பிச் சுமார் ஒரு மைல் தள்ளிப் போனா ஒரு பண்ணை மாதிரி இருந்தது. அது நடுவில ஒரு வீடு. அங்க கொண்டு நிறுத்திட்டு உள்ளே வாங்க ப்ரொபஸர்னான். கொஞ்சம் தயக்கத்தோடேயே உள்ளே போனேன். ஒரு பெரிய ஹால்ல உட்கார வெச்சுட்டு அப்பாவைக் கூட்டியாரேன்னு புறப்பட்டுப் போனான். அரை மணி நேரமாச்சு ஒரு மணியாச்சு. அப்பா வரலை. நான் எழுந்து பாக்கறேன். வாசக் கதவு பூட்டியிருக்கு... யாருமில்லையான்னு கூப்பிட்டுப் பாக்கறேன். பதிலே இல்லை. எனக்கு என்னடான்னு ஒரு மாதிரி ஆயிடுத்து. அந்த ஹாலைச் சுத்திச் சுத்தி வரேன். எல்லாக் கதவுகளும் மூடியிருக்கு... வெளியே வரவும் முடியாது. டெலிபோன் இல்லை... ஏறக் குறைய கைது பண்ணப்பல ஆயிடுச்சு!''

''ஸிம்பிள் இம்ப்ரஸன்மெண்ட்டா? சொல்லுங்க. சுவாரஸ்யமா இருக்குது.''

''எனக்கு சுவாரஸ்யமா இல்லை. மணிக்கணக்கா ஒரு இடத்திலே அடைபட்டுப் பாரு தெரியும். எனக்குக் கவலையாயிடுச்சு. விஷயம் வேறயா இருக்குமோ? என்னை அடைச்சு வெச்சுட்டு ஏதாவது பணம் கிணம் கேக்கறதுக்கு பிளான் பண்ணறாங்களோ! அடடா மாட்டிக்கிட்டமேன்னு கவலைப் பட்டேன்.

''சாயங்காலம் நாலரை மணி சுமாருக்கு ஒருத்தன் வரான். கதவைத் திறந்து ப்ரொபஸர்! ரொம்ப ஸாரி! உங்களைக் காக்க வெச்சுட்டேன்னான். எனக்கா ஒரே கோபம். முதல்லே நீ என்னை வீட்டில கொண்டு விடுன்னு கத்தினேன். கோவிச்சுக் காதீங்க. எனக்கு ஒரே ஒரு தகவல் மட்டும் வேணும். அதைச் சொல்லிடுங்க. விட்டுடறேன்னான். என்னடான்னேன்.

''ராஜ ராஜன் கிணறுங்கிறது எங்க இருக்குன்னு சொல்லிடுங்க விட்டுர்றோம்!''

''எதுக்காகத் தெரியணும்னேன். அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க. இடத்தைச் சொல்லிடுங்க விட்டுடறேன்னான். காஞ்சிபுரத்திலே இருந்து வந்தவாசி போற வழியில மாமண்டூருக்குத் தெற்கே எங்கயோ இருக்குன்னேன். விவரம் போதாது எக்ஸாக்ட்டா எங்க இருக்குன்னு தெரியணும்னான். அந்த விவரம் தெரியணும்னா ராஜராஜன் கிணறு பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன். வீட்டில இருக்கு. அதில ஒரு கல்வெட்டுக் குறிப்பை ஆராய்ச்சி பண்ணி லொகேஷன் குடுத்திருக்கேன்னு சொன்னேன். அப்ப உடனே உங்க வீட்டுக்கு போன் பண்ணி அந்தக் கட்டுரையை எடுத்து வரச் சொல்லுங்க. வுட்டுடறேன்னான். எனக்கு இதெல்லாம் எதுக்குன்னே புரியலை.

''சொல்ல மாட்டேங்கறான். கட்டுரையை வரவழைங்க விட்டுர்றோம். அவ்வளவுதான்னு சொன்னான். இல்லைன்னா மறுபடியும் உங்களை அடைச்சுப் போட்டுட்டுப் போயிடுவோம். கட்டுரை வரவரைக்கும் சோறு தண்ணி கிடையாதுன்னான். என்னடாது வம்பாப் போச்சுன்னு, டெலிபோன் இருக்கான்னு கேட்டேன். மாடிக்கு அழைச்சுட்டுப் போனான். இனியாவுக்கு அங்கிருந்து போன் பண்ணினேன். யாருக்கும் தெரியாம அந்தப் பொண்ணு மட்டும் தனியா ரயில் ஸ்டேஷனுக்கு வரணும்னான்.''

''இப்பப் புரியுது. அப்புறம் நடந்தது தான் வஸந்த் சொன்னான்'' என்றான் கணேஷ். ''கட்டுரையை உங்க டாட்டர் கிட்ட இருந்து பிடுங்கிக்கிட்டாங்களாக்கும்!''

''ஆமாம். பிடுங்கிக்கிட்டு என்னை அம்போன்னு தெரு முனையில விட்டுட்டு விருட்டுன்னு கார்ல ஏறிப் போயிட்டாங்க! எனக்கு ஒண்ணுமே புரியலை. அவங்களைப் பார்த்தா சரித்திரத்திலே உற்சாகம் இருக்கிற மூஞ்சியாத் தெரியலை. வேற ஏதோ! அதுவும் ராஜ ராஜன் கிணத்துலே இவங்களுக்கு என்ன இன்ட்ரஸ்ட்?''



''இன்னிக்கு ஸ்கூட்டரிலே என் கணவர் பின்னாடி உட்கார்ந்து போகும் போது சடை சக்கரத்திலே மாட்டிக்கிடிச்சி!''

''ஐயையோ. அப்புறம்?''

''அப்புறமென்ன? ஒட்டுப் போட்டிருந்த மூணு சவுரிகளும் தனித்தனியா அவிழ்ந்து விழுந்திடுச்சு வழியிலே!''

—அ. இராமதாஸ்

''ராஜ ராஜன் கிணறுங்கிறது என்ன ஸார்?''

செங்கல்பட்டு ''ஜில்லாவில் உக்கல்ங்கிற கிராமத்துக்குப் பக்கத்திலே ஒரு பழைய கிணறு அது. ராஜராஜன் காலத்திலே ஆலூர்ல கண்ணன் ஆரூரன்னு ஒரு ஆள் ராஜா பேர்ல அதை வெட்டித் தண்ணி இறைக்கறதுக்கு விட்டிருக்கான். அது பத்தி ஒரு கோயில்ல கல்வெட்டில எழுதியிருக்கு.''

''கோயில் பேரு?''

''புவனி மாணிக்க விஷ்ணு கிரகம்!''

''சரிதான் சின்னதா இருக்கே!''

''அந்தக் கிணறு இன்னமும் இருக்கா?''

''இருக்கு அடையாளம் கண்டு பிடிக்கலாம்!''

''அந்தக் கல்வெட்டில அதைப் பத்தி வேற விவரம் ஏதாவது இருக்கா?''

''வேற விவரம்னு?''

''புதையல் கிதையல், தங்கம் அப்படின்னு''

''சேச்சே! அதெல்லாம் இல்லை....''

''கல்வெட்டு என்ன சொல்றது?''

''இந்த மாதிரி கிணற்றை வெட்ட வெச்சவன் இவன்... அதில இருந்து தொட்டிக்குத் தண்ணி இறைக்கிறவனுக்கு எத்தனை மரக்கால், எத்தனை குறுணி நெல் கொடுக்கணும்; பந்தல்காரனுக்கு இவ்வளவு. சேதத்துக்கு இவ்வளவுன்னு நெல் கணக்கு... என்னைப் போல் சரித்திர ஆசாமிக்குத்தான் இந்தக் கிணத்திலே செய்தி இருக்கு... புதையலும் கிடையாது ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது! அதான் ரொம்ப ஆச்சரியமா இருக்கு!''


''இப்ப நாங்க என்ன செய்யணும்னு சொல்றீங்க?'' என்றான் கணேஷ்.

''அந்தக் குண்டர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும். கிணத்துல போய் விழட்டும். ஆனா அந்தக் கட்டுரை எனக்கு அவசியம் திருப்பி வேணும்! அதுக்காக நீங்க உதவி செய்து எப்படியாவது அதைக் கொண்டு வந்துறணும்!''

''வஸந்த்! கேட்டில்லை? ஸார் கவலைப் படாதீங்க. வஸந்த் கெட்டிக்காரன். அதை மீட்டுக்கிட்டு வந்துருவான்'' என்றான் கணேஷ்.

(தொடரும்)

அந்தரங்கம் ஊமையானது



சபல புத்தி இளைஞன் மாமா பெண்ணை விட்டு ஒரு மனைவியிடம் நாட்டம் கொள்கிறான். கணவனிடம் குழந்தை பிறக்காதென்ற நிலையில் அந்த மனைவியும் பழைய காதலன் (சரத்பாபு) சாயலை இளைஞனிடம் கண்டு அவனிடம் தன்னை இழக்கிறாள். (அ-ஆ....வ்வ்) மாமா பெண்ணும் அத்தானைப் பேசித் திருத்தி... கணவன் மனைவியை மன்னித்து....

(ஆஆஆஆவ்வ்வ்வ்வ்வ்வ்வ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
த்துஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
த்துஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
கொர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்
கொர்ர்ர்ர் — ; . . . . . .)

'—ஆ — ஊ — ஆ — ஊ' — திடீர் திடீரென்று சுருளி ஆதிவாசி வேடத்தில் வந்து கத்தி தூக்கத்தைக் கலைக்கிறார். நகைச்சுவையால் நம் கழுத்துக்குக் கீழே ஒரு அடி தூரத்தில் வலிக்கச் செய்கிறார். தன் முடிவை முன்பே அறிந்தது போல் பேசும் சில வசனங்கள்—டச்சிங்.

இளைஞன் ஜோஸ் — சுறுசுறுப்பில்லாத சுதாகர்
மனைவி ரூபா — ரூபா
மாமா பெண் ரஜனி சர்மா — சும்மா.
கணவன் சோமன் — 'ஷோ'மேன்.

இரவு பகலை வித்தியாசப்படுத்தாத கேமரா ஊட்டி ரயிலை மட்டும் குளிர்ச்சியாய்க் காட்டுகிறது. நம்பிக்கையூட்டும் டைரக்டர் ப்ரேம்குமார். இசை ஜாய்.

- நளினி சாஸ்திரி



மகரிஷி

11

பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்த சுமங்களா சற்று தயங்கி நின்றாள். ''நான் போயிட்டு வரேன்'' எங்கே இருந்தாலும் உன் நன்றியை மறக்க மாட்டேன். என்னை இவ்வளவு தூரம் ஆளாக்கின உன் சிரமங்களை அலட்சியப்படுத்த மாட்டேன். வணங்குகிற தெய்வமா இருக்க வேண்டியவங்க வேற மாதிரியாப் போயிட்டீங்க. இருந்தாலும் என் மனசுலே என்னிக்கும் உங்க அன்பு இருக்கும். வேலைக்காக நானும் பல இடங்கள்ளே அலையறேன். ஒரு நல்ல வேலை எனக்குக் கிடைத்ததும் உங்க வீடு தேடி என் பணம் வரும்.''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்தாள்.

ஒரு பையில் புஸ்தகக் கட்டு, ஒரு கையில் பெட்டி.

புறப்பட்டுவிட்டாள்.

கோமதி தங்கியிருந்த ஹாஸ்டல் அறையில் ஏற்கனவே இருந்த நாலு பேர்களில் ஒருத்தி தன் சொந்த ஊருக்கு வேலை மாற்றிக் கொண்டு போய்விட்டாள். மற்றொருத்தி வீடு பார்த்துக் கொண்டு போய் விட்டாள்.

காலியான அந்த இடத்தில் சுமங்களா புகுந்து கொண்டாள்.

தோழி கோமதியின் வாழ்க்கைச் சூழ்நிலை பற்றி அவளுக்குத் தெரியும். இயல்பில் அதிகமானசெலவாளி அல்ல, கோமதி! அதற்காகத் தேவைகளைச் சிக்கனம் கருதிக் குறைத்துக் கொள்பவளும் அல்ல.

அவள் குடும்பத்தார் என்பது அவள் உடன் பிறந்தார் குடும்பம்தான். அவர்களில் — அவளுடைய உடனடி அடுத்த சகோதரனை திருமேனி ஒருத்தனைத் தவிர மற்றவர்களுடன் அவளுக்கு அதிகமான தொடர்பு இல்லை. கைநிறையச் சம்பளம் வாங்குகிறாள். பார்ப்பதற்கு — எடுத்த எடுப்பில் சரியான முன்கோபி போலவும் சிடுசிடுப்புக் கொண்டவள் போலவும் தோற்றம் உடையவள். ஆனால், நெருங்கிப் பழகும்போது மிக இனிய குணம் கொண்டவள்.

அவள்தான் சுமங்களாவின் பயத்தைப் போக்கித் தன் அறையில் தங்க இடமளித்தாள்.

''இந்தக் காலத்தில் சாதாரணமாக அன்றாட வாழ்க்கை என்பதே ஒரு போராட்ட வாழ்க்கை முறையாக மாறிவிட்டது சுமங்களா! அதிலும் பெண்கள் நிலை என்பது இன்னும் அப்படியேதான் இருக்கிறது. இவைகளை நம்போன்றவர்கள் எதிர்த்துச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது.

''பெண்கள் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார்கள். பெண்கள் எல்லாத் துறைகளிலும் பரவிக் கொண்டு வருகிறார்கள். சிறந்த நிர்வாகியாக... எழுத்தாளராக... ஆளுனராக மந்திரியாக... இதெல்லாம் சரியான வளர்ச்சிதான். இல்லையென்று சொல்ல முடியாது. என்றாலும் அவர்கள் போராட்டம் என்பது இன்னும் ஆரம்பிக்கப்படாமலே இருக்கிறது.''

அவள் வேறு எதற்கோ முன்னுரை எழுதுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டவள், அவள் பேசுவதை ஆமோதிப்பது போல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''போன வாரம் ஒரு வரன் விஷயமாக நான் கொஞ்சம் சுறுசுறுப்புடன் இருந்தேன். பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்றார்கள். வரட்டும் என்றேன். பெண்ணை அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வரவேண்டும் என்றார்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை. 'இதென்ன புதிய பழக்கம்? பெண்ணை அவள் இருக்கிற இடத்தில் வந்து பார்க்கிறதுதானே சம்பிரதாயம்' என்றேன் இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சரி, ஒப்புக்கொண்டு நானே திருச்சிக்குப் போனேன். பையன் என்னைப் பார்த்தான். 'பிடித்திருக்கிறது' என்றான். எம். எஸ்ஸி. யாம். கம்பெனி ஒன்றில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறானாம். வரதட்சிணை பத்தாயிரம் வேண்டுமாம். பதினைந்து பவுனுக்குக் குறையாமல் நகை போட வேண்டுமாம். குடும்பம் ஆசாரமான குடும்பம்தான். பெரியவர்கள் மேல் பக்தியுள்ள குடும்பம் தான்.

'' 'வரதட்சிணை இவ்வளவு கேட்கிறீர்களே? கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் வரையில் பெண் சம்பாதிக்கிறாள்' என்றான் திருமேனி. பையனின் தாய் தந்தையர் ரொம்பவும் இரக்கமில்லாமல் பேசிவிட்டார்கள். பையனுக்குப் பல இடங்களில் வரன்கள் வந்து

கொண்டிருப்பதாகவும், இதைவிட அதிகம் கேட்க முடியும் என்றும் கூறினார்கள்.

''நான் இவைகளைத் திருமேனிக்காக மிகவும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். முடிவாக என் அபிப்பிராயமாக ஒரு வார்த்தை மட்டும் கேட்டேன். 'நான் என் வேலையை விட்டு விட்டு உங்கள் வீட்டுக்கு மருமகளாக வரலாமா?' என்றேன். எல்லோரும் அசடு வழிந்தார்கள். நான் அதற்கு மேல் அவர்களிடம் ஏதும் பேசவில்லை.


''மனிதர்களுக்குத்தான் எவ்வளவு பேராசை பார்த்தாயா? திருமேனியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவர்கள் கேட்கவில்லை. பிறகு சொல்வதாக எழுந்து விட்டனர்.

''நேற்று தற்செயலாக நான் அந்தப் பையனைப் பார்த்தேன். 'உங்கள் சகோதரரைப் பார்த்துப் பேச வேண்டும்' என்றான். 'எதற்கு' என்றேன்.

''தன் அப்பா சில விஷயங்களைத் திருமேனியிடம் கூறும்படி கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னான். 'என்ன விஷயம்? என்னிடம்தான் சொல்லுங்களேன்' என்று கேட்டேன். ஏதேனும் சாதகமான பதிலைத்தான் சொல்லப் போகிறானாக்கும் என்று எதிர்பார்த்தேன். முன்பு பேசிய தொகையில் கொஞ்சம் குறைத்துக்கொள்ள அப்பா சம்மதம் தெரிவித்திருப்பதாகச் சொன்னான்

'' 'கொஞ்சம் என்றால் எவ்வளவு?' என்று கேட்டபோது, அந்தக் கொஞ்சத்தை என் அண்ணனிடமே நேரில் சொல்ல இருப்பதாக மென்று விழுங்கினான்.

''நாங்கள் பேசிக் கொண்டிருந்த இடம் மருத்துவ மனை காம்பவுண்ட் ஓரம். 'வேண்டாம்! அவரிடம் சொல்வதை விட நீங்கள் என்னிடமே சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். அதுமட்டுமல்ல. நீங்கள் கல்யாணத்தை ஒரு பேரம் போலக் கருதுவதால் இதை மேற்கொண்டு தொடர எனக்கு இஷ்டமில்லை. நான் என் எதிர்காலக் கணவரை ஒரு வியாபார பேரத்தின் மூலம் அடைய விரும்பவில்லை. ஆத்மார்த்தமாக நேசிக்கிற ஓர் ஏழையைக்கூட என் கணவராக ஏற்க முடியும். அவர் ஒரு பரிசாரகராக இருந்தால்கூடக் கவலைப்பட மாட்டேன். புருஷார்த்தம் என்பது சம்பாதிக்கிற பணத்திலும், அங்கம் வகிக்கின்ற அந்தஸ்திலும் வெளிஉலகைப் பொறுத்தவரை இருக்கலாம். ஆனால் அந்த அந்தஸ்தும் பதவியும் இரு



மண விஷயத்தில் ஒரு பேரமாகத் தலை நீட்டினால் அது புருஷார்த்தம் இல்லை. உயர்ந்த உள்ளத்தில்தான் அது இருக்கிறது!' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு வந்துவிட்டேன்.''

''கோமதி நீகொஞ்சம் அவசரப்பட்டுவிட்டாயோ என்று நினைக்கிறேன்.''

''அவசரமா? அது நெடுஞ் சாலையாக இருந்ததே என்று அத்துடன் விட்டு விட்டேன். அதுவே வீடாக இருந்திருந்தால் நான் பேசியிருக்கிற பேச்சே வேறாகும். இந்தச் சனாதனிகளின் ஆஷாடபூதித் தனங்களை ஒழிக்க வேண்டும். வரதட்சிணை சமுதாயத்தைப் பிடித்திருக்கிற ஒரு புற்று நோய் சுமங்களா! அந்த நோயால் தான் அந்தச் சமுதாயப் பெருமையே அழியப் போகிறது. இந்த வரதட்சிணைக் கொடுமை



''கண்ணே! எப்போதும் என் கனவிலே நீ தான் வருகிறாய். நாம் கல்யாணம் செய்து கொள்ளலாமா?''

ஓ! பேஷாக!''

''எப்போ?''

''அடுத்த கனவில்!'' -எஸ். கணேஷ்

மட்டும் இல்லையென்றால் இவர்களிடம் வாழ்க்கைப் பிரச்னை அத்தனையும் தீர்ந்த மாதிரிதான். இதை அதிலுள்ள படித்த பெரியவர்களும் உணரவில்லை. இளைஞர்களும் உணர்ந்து கொள்ளக்கூடிய நிலைமை உருவாகவில்லை.''

அவர்களிடையே நடைபெறும் பெரும்பாலான சம்பாஷணைகள் இத்தகையதாகவே இருக்கும். இதில் ஒருவித நிறைவும் ஆத்மார்த்தமும் இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள்.

பழக்க வழக்கங்களிலே அவர்களிடம் பலவித ஒற்றுமைகள் தெரிந்தன. பல விதங்களில் அவர்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரி சிந்தித்தார்கள். வெளிப்பகட்டுக்களை அதிகமாக விரும்பாதபோதும் பொது இடத்துப் பழக்க வழக்கங்களை அனுசரித்தும், நாகரீகம் தெரிந்தும், சூழ்நிலைக்கேற்ற உடைகளை — அது சற்று நாகரிகமாக இருந்தாலும் அதையே உடுத்தினார்கள். நிறங்களில் ருசிகளில்... இப்படி எல்லாவற்றிலும் ஒருவரையொருவர் அனுசரிக்கத் தலைப்பட்டபோது மேலும் பல ஒற்றுமைகள் வந்து கூடின.

இந்த ஒற்றுமைக்கு உள் மனத்தில் தோன்றியிருந்த அவர்கள் குடும்பச் சூழ்நிலையில் ஏற்பட்ட அநாதைத் தன்மையும் காரணமாக இருந்தது.

சுமங்களாவின் கல்லூரி நாட்களிலேயே அவளுக்குப் பல உதவிகளைச் செய்தவள் கோமதி. சில வேளைகளில் டேர்ம்ஃபீஸுக்குப் பார்வதத்தின் கையை எதிர்பார்த்து இன்று நாளை... நாளை மறுநாள் என்று காத்திருக்கும் வேளையில் அட்டென்டென்ஸில் அவள் பெயர் புள்ளி வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்துவிட்டுக் கோமதியே காலேஜ் பீஸைக் கட்டிவிடுவாள். இப்படி வருஷத்தில் இரண்டொரு முறைகள் நடந்ததுண்டு.

இன்றைய பிரச்னையிலிருந்து சுமங்களாவை விடுவிக்கக் கோமதி பிரயத்தனப்பட்டாள்.

பதிவுத் திருமணத்துக்கு முன்பே பரமேஸ்வரனின் நடவடிக்கைகளில் காணப்பட்ட கடினத்தால் அவன் எதிர்காலப் போக்கினைச் சுமங்களாவைப் போலவே கோமதியும் அனுமானித்திருந்தாள்.

பிற்பட்டு அவர்கள் முன்பே அனுமானித்தபடி பரமேஸ்வரனின் போக்கும் இருந்ததால் இருவருமே அதிர்ச்சி அடையவில்லைதான். மாறாக நிவாரணத்துக்கான மாற்று வழிகளைக் கண்டறிய முயன்றனர்.

சுமங்களாவுக்கு உடனடியான வேலையொன்று தேவை. இருப்பிடப் பிரச்னையுடன் குழம்பியவளைக் கோமதி அழைத்துக்கொண்டாள். அவளின் வேலைக்காகத் தெரிந்த இடங்கள் சிலவற்றிலும், அவளிடம் படிக்கும் சில உயர் அந்தஸ்துள்ள மாணவிகள் சிலரிடத்திலும் கூறியிருந்தாள்.

அப்படிப்பட்ட நாட்களில்தான் அந்தச் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைத்தது.

டிரை க்ளீன் செய்யப்பட்ட தனது பட்டுப் புடவைகளை வாங்கிப் போகும் பொருட்டு மாடர்ன் டிரை க்ளீனிங்கில் உட்கார்ந்திருந்தாள்.

நகரில் மிகவும் நவீனமானதும் மிகப் பெரியதுமான டிரை வாஷ் கம்பெனி அது. அதற்கு நகரில் பல இடங்களில் கிளைகள் உள்ளன. பெரிய மருத்துவமனை, ஹாஸ்டலுடன் இணைந்த பள்ளிக்கூடங்கள், மற்றும் பல பெரிய நிறுவனங்களின் கான்ட்ராக்ட் உள்ளவர்கள். அதனுடைய தொழில் விஸ்தீரணம் பற்றிக் கோமதிக்குத் தெரியும். நவீன மோஸ்தரில் உள்ள மிகப் பெரிய ஜவுளி நிறுவனம், ஜௌாத் எம்போரியம் என்று தூரத்திலிருந்து பார்ப்பவர்கள் எண்ணிக்கொண்டு படியேறிவிடுவார்கள்.

அவள் அங்குதான் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தனது ஆடைகளை டிரைவாஷ் செய்யக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

அவர்கள் தரும் ரசீதுகளில் உரிமையாளர் ஜான்ஸன் என்று போட்டிருக்கும். அவளுக்கும் அப்பெயருக்கும் உள்ள பரிச்சயம் அவ்வளவே. இதுவரை அந்த ஜான்

லன் யார் என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. துணிகளை டெலிவரி எடுத்துக் கொண்டு போக வரும்போது பெரிய மேஜைப் பரப்பின் பின்னால் சில சமயம் சில அழகான பெண்கள் இருப்பார்கள். சில சமயம் வாலிபர்கள் இருப்பார்கள். அதைப் பற்றியெல்லாம் அவள் அதிகம் கவனம் செலுத்திய தில்லை.

ரசீதைக் கொண்டு போய்க் கொடுப்பாள்.

பார்ஸல் சில வேளைகளில் சீக்கிரமாகவரும். சில வேளைகளில் அரை மணி நேரம் காத்திருக்க நேரிடும். மிகப் பெரிய அதன் மாடி வராந்தாவிலும் வாஷ் செய்யப்பட்ட துணிகள் பெட்டி போடப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அவைகளில் தேடி எடுக்கச் சற்று அவகாசம் ஆகும் என்று பணிவுடன் கூறிவிடுவார்கள். அதனால் அவள் காத்திருக்க வேண்டியதாகும்.

அன்றும் தன் ரசீதைக் கொடுத்து விட்டுக் காத்திருந்தாள், கோமதி.

பெரிய டெலிவரி மேஜை அருகில் நின்று கொண்டிருந்த அந்த வாலிபன் அந்தச் செய்தியை டெலிபோனில் டிக்டேட் செய்து கொண்டிருந்தான்.

'படித்த பட்டதாரிப் பெண் தேவை. நகரில் மிக நவீனமான முறையில் இயங்கும் எங்கள் நிறுவனமான மாடர்ன் டிரை கிளீனர்ஸுக்குத் தகுதி வாய்ந்த உதவியாளர் தேவை. சரளமாக இங்கிலீஷ் எழுதப் படிக்கவும், பேசவும் தெரிய வேண்டும். கவர்ச்சிகரமான ஊதியம். மற்றவை தகுதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப் படும். நேரில் வரவும்.

முகவரி.....'

தான் டிக்டேட் செய்ததை மீண்டும் படிக்கும்படி டெலிபோனில் கேட்டான்.

''இதை இன்றைய மாலைப் பதிப்பிலேயே முன் பக்கத்தில் விளம்பரப்படுத்த ஏற்பாடு செய்துவிடுங்கள்!'' என்று அந்தப் பத்திரிகையின் விளம்பர மானேஜரிடம் கூறிக் கொண்டிருந்தான்.

கோமதி இதை ஆரம்பத்திலிருந்தே கவனித்துக்கொண்டிருந்ததால், 'விளம்பரமே இன்று மாலைதானே வரப் போகிறது. இது வெளியாகு முன் சுமங்களாவை இவர்களிடம் அறிமுகப்படுத்தினால் என்ன' என்ற எண்ணம் தோன்றியவுடனேயே அவள் டிக்டேட் செய்த வாலிபன் அருகில் போய் நின்றாள். அவனும் ஏற்கனவே பரிச்சயமான தோரணையில் புன்னகை உதிர்த்து விட்டு, அவளுடைய துணிகளை விரைவில் எடுத்துக் கொண்டு வரும்படி இன்டர்காமில் மாடிக்குப் போன் செய்தான்.

''அதிருக்கட்டும். இப்போ ஒரு விளம்பர மாட்டர் டெலிபோனில் கூறினீர்களே, அது விஷயமா உங்களிடம் ஒன்று கேட்கலாமா?''

''ஓ! தாராளமாக. நாங்கள் ஒரு நல்ல பணியாளருக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நல்ல வேலே. கிராஜுவேட்டா இருந்தாப் பரவாயில்லே. இங்கேயேதான் வேலே.''

''ரெம்யூனரேஷன்?''



தந்தை : பேப்பரைப் பார்த்து அப்ளிகேஷன் போட்டியே! என்ன வேலைக்குடா?

பையன் : யாரோ மாசம் 500/- ரூபாய் சம்பாதிக்கிறபொண்ணுக்கு மாப்பிள்ளை வேணுமாம்! மனுப் போட்டிருக்கேனப்பா. - எஸ் மாரியப்பன்

''ஆரம்பத்தில் முந்நூறு ரூபாய் வரையில். மற்றதெல்லாம், போகப் போக திறமை தகுதி அடிப்படையில் நிர்ணயிப்போம். ஏன் கேட்கறீங்க?''

''என் தோழி ஒருத்தி இருக்கா. பி.எஸ்.ஸி. பாஸ் செய்திருக்கா. நல்ல பிரைட் ஸ்டூடண்ட். வேலே தேடிக்கிட்டிருக்கா!''

''இப்போ என்ன பண்றாங்க?''

''சும்மாதான் இருக்கா...''.

''வரச் சொல்லுங்களேன். யாராக இருந்தால் என்ன? எங்களுக்குத் தகுதியுள்ளவர்களா இருந்தா உடனடியாக வேலைக்கு வெச்சுக்கலாம். அவங்களுக்கும் வேலே பிடிச்சிருக்கணும்.''

''உங்கள் பெயர் தெரிந்து கொள்ளலாமா?''

''என் பெயர் சுகுமாரன். உங்கள் பெயர் பார்வதிதானே? சிடி காலேஜ்லே மாத்ஸ் புரொபஸர்.''

இந்த விவரம் அவனுக்குத் தெரிந்திருப்பதில் வியப்பொன்றுமில்லே. சலவைக்குப்போடுகிற பில்லில் விலாசம் இருக்குமே!

''சிடியிலே மொத்தம் பதின்மூன்று இடங்களில் எங்கள் கிளைகள் இருக்கு. நான் ஐந்து கிளைகளை சூப்பர்வைஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன். டெலிவரி கவுண்டரில் அநேகமாக எல்லோரும் பெண்கள்தான். ரசீதில் நம்பரைப் போட்டு பாக்கெட்டுகளை பண்டில் செய்து பீரோவில் அடுக்குவதற்குத் தனியாக ஆட்கள் உண்டு. வருகிற ரசீதுகளின் நம்பரைப் பார்த்து பார்ஸலை டெலிவரி கொடுக்கணும். கேஷ் கலெக்ட் பண்ணிக்கணும். ரொம்ப சுலபமான வேலேதான்.''

கோமதியின் துணிப் பார்சல் வந்தது.

ரசீதைப் பார்த்துப் பணத்தைக் கொடுத்து விட்டுப் பார்சலைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள்.

'இப்பொழுது அவள் இதில் சேரட்டும். இதில் இருந்து கொண்டு வேறு பார்த்துக் கொள்ளலாம்!'

சுமங்களாவிடம் வந்து இதைச் சொன்ன போது அவள் மறுப்பேதும் சொல்லாமல் உடனே ஒத்துக்கொண்டு விட்டாள்.

(தொடரும்)



✗ ஆ. கருணாமூர்த்தி, கே. வி. குப்பம்
கே. உங்கள் வீட்டில் பணம் காய்க்கும் மரம் இருந்தால் அதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?
ப: அதை ஒரு தோப்பாக ஆக்க முயற்சி செய்வேன்.

✗ எம். வி. வி. அய்யர், டோம்பிவிலி கிழக்கு
கே. பட்டாஸ் வெடிப்பது நேஷனல் வேஸ்ட் என்பது மிகவும் தவறான கருத்து. ஆகாயத்திலும் தரையிலும் மழைக்காலம் முடிந்தவுடன் வரும் பூச்சி, விஷக்கிருமிகளை இந்த பட்டாஸ், வாண புகையினால் மடிகின்றன. மேல் நாடுகளிலும் கிறிஸ்துமஸ் சமயத்தில் பட்டாஸ் வெடிக்கிறார்கள். தொன்றுதொட்டுவரும் பழக்கம் இது. கேரளாவில் திருச்சூர் பூரம், காவச்சேரிபூரம், கண்ணன் பாறை வெடி வேலை, பாலக்காட்டில் வடக்கந்தரை வேலை போன்ற திருவிழாக்களில் செய்யும் சில வாண வெடிகள் எல்லாராலும் செய்ய முடியாது.
ப: சரி. பட்டாஸ்தான் வெடிக்கிறார்களே, இன்னும் பூச்சி மருந்து, கொசு வத்தி, டி.டி.டி. போன்றவைகள் தேவைப்படாமல் போகவில்லையே (கொசு வத்தி தயாரிப்பாளர் லட்சாதிபதியாகி உள்ளார்!) மேல் நாட்டில் செய்தால் உசத்தியா? தொன்றுதொட்டு வருவது எல்லாம் சிறந்தவையா? எத்தனை விஷயங்களைக் கை கழுவி விட்டிருக்கிறோம்? கேரளாவில் சில அபூர்வ வெடிகள் செய்யப்படுகின்றன என்கிறீர்கள். இதற்காக அந்த வெடிகளை உபயோகித்துக் காசைக் கரியாக்க வேண்டும் என்கிறீர்களா?

✗ இல்லை வில்லாளன், வண்ணான் குடிக்காடு
கே. தங்களைக் கவர்ந்தவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆரா? புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரா?
ப: முன்னவர் நடிகர்; பின்னவர் அரசியல்வாதி. இவர்களல்லாது மூன்றாவதாக ஒருவர் இருக்கிறார். எம். ஜி. ஆர். என்ற மனிதாபிமானம் நிறைந்த மனிதர். அவர்தான் என்னைக் கவர்ந்தவர்.

✗ கோ ராஜகோபாலன், ஜனக்புரி (டில்லி)
கே. சுஜாதா ஒரு கதைக்கு எல்டோராடோ என்று தலைப்பு கொடுத்திருந்தார். அந்த வார்த்தை எனக்குப் புரியவில்லை.
ப: இது ஒரு பழைய கால நம்பிக்கையின் காரணமாக பழக்கத்தில்வந்துள்ள வாதம். அமெரிக்காவில் யாரோ ஒரு பழங்குடி ராஜா இருந்தானாம். அவன் உடம்பில் தங்கப் பொடியைத் தூவி 'திருமஞ்சனம்' பண்ணி விடுவார்களாம். இந்த மன்னனையும், அவனது செல்வத்தையும் கண்டுபிடிக்கப் பலர் முயன்றிருக்கிறார்கள். செல்வம் இருக்கும் இடத்துக்கு இன்று இப்பெயர் வழங்கப்படுகிறது. பணங்காய்ச்சி மரம் என்பது போல.

✗ பி. ரங்கநாதன், துடுப்பதி
கே. நீங்கள் ஏன் வாரப்பத்திரிகை ஆரம்பிக்கக் கூடாது?
ப: காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு! யார் வேண்டுமானாலும் பத்திரிகை ஆரம்பிக்கலாம் என்று ஆகிவிட்டது. இல்லாவிட்டால் என்னைப் பார்த்து இப்படிக் கேள்வி கேட்பீர்களா?


கடுகு பதில்கள்!

✗ ஆர். சாம்பசிவம், மாமல்லபுரம்
கே: கூட வேலை செய்யும் எல்லா நண்பர்களையும் பகைத்துக் கொள்ளும் என் சுபாவம் மாற என்ன வழி?
ப: உங்கள் சுபாவம் நிச்சயம் மாறிவிடும். எப்போது தவறு உங்கள் சுபாவத்தின் மீது என்பதை உணர்ந்து கொண்டீர்களோ, அதுவே உங்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் பாதையில் முதல் அடியாகும். 'ஒரு நண்பனைக் கண்டுபிடிக்க ஒரு கண்ணை மூடிக்கொள்; நட்பைக் காப்பாற்றிக் கொள்ள இரண்டு கண்களையும் மூடிக் கொள்' என்று நார்மன் டக்ளஸ் கூறியிருக்கிறார். விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

✗ ஆர். மார்க்கண்டன், விழுப்புரம்
கே: சண்டை என்று வந்தால் தான் சொல்வது தான் கடைசி வார்த்தையாக இருக்கவேண்டும் என்கிறாள் என் மனைவி. தங்கள் அனுபவம் எப்படி?
ப: அந்தக் கதை எல்லாம் நம் வீட்டில் நடக்காது. கடைசி வார்த்தை என்னுடையதாகத்தான் இருக்கும். 'நீ சொல்றதுதான் சரி' என்று அவளிடம் கூறிவிடுவேன்.

பரிசு பெறுபவர்:


ஆர். சாம்பசிவம்
214, தென்மாட வீதி
மாமல்லபுரம் 603 104




ஒரு நிமிடம் நில்லுங்கள்!

பல்வேறு காரியங்கள் நிமித்தம் அங்குமிங்கும் செல்லும்போது நமது கவனத்தைக் கவர்ந்து ஒரு நிமிடம் நிற்கச் செய்யும் சில விஷயங்கள் :

- ''பாவை பார்த்துச் சிரிப்பாள், பக்கம் வர அழைப்பாள்; பர்ச காலியானால் ஏசுவாள்; கண் கண்ணீரை இழக்கலாம்; கன்னி கற்பை இழக்கலாமா?'' என்பது போன்ற வாசகங்கள் வெள்ளைத் தாளில் எழுதப்பட்டு, ''ஜா. நி. சா. சென்னை-65'' என்ற கையெழுத்துடன் அண்மையில் சென்னை மின்வண்டியின் பல பெட்டிகளில் ஒட்டப்பட்டிருந்தன. ஒட்டியவர் யாரோ? ஒட்டக் காரணம் ஏதோ?



- நந்தனம் வேலை வாய்ப்பகத்தில், ''ஒவ்வொரு சனியன்று பதிவு, புதுப்பித்தல், பேட்டி, பிற எவ்விதமான தொடர்பும்-இல்லை'' என்ற அறிவிப்பு சாக்பீஸால் எழுதப்பட்டிருக்க, இந்த அறிவிப்பில் 'று' என்ற எழுத்து மட்டும் சுண்ணம்பால் எழுதப்பட்டுள்ளது. விரக்தியுற்ற இளைஞர்கள் 'சனியன்று' என்ற சொல்லில் 'று' என்ற எழுத்தை அடிக்கடி அழித்து விடுவது காரணமாக இருக்குமோ?



- 'முரட்டுக் காளை' வெளியான முதல் நாள் தேவி பாரடைஸில் இரவுக் காட்சி, ரஜினியும் ஜெய்சங்கரும் திரையில் தோன்றியதுமே மலர் தூவிய ரசிகர்கள், பட முடிவில் திரையை நோக்கித் தூவியது குஷன் நாற்காலிகளின் உறைகளை.

- வட பழனி முருகன் கோவில் வீதியில் உள்ள வட்டிக் கடை ஒன்றில் ''நன்றி மீண்டும் வருக'' என்ற அறிவிப்பு ஆங்கிலத்தில் காணப்படுகிறது!



- அண்மையில் அறிமுகமாகியிருக்கும் ஒரு சலவைப் பவுடரின் பெயர் ''வெளுக்கர்''. பொருத்தமாக இல்லை?

உதிரியாக




அவள் : ''கர்ப்பிணி டிசைன்ல சேலை இருக்கா...?''
கடைக்காரர் : ''மாங்காய் பார்டர் போட்ட சாம்பல் நிறச் சேலைதானே...? இருக்கு!''



மானேஜர் : '' 'பஸ் கிடைக்கலே... அதனால் தான் லேட்'டுங்கிற பல்லவியையே இன்னும் எத்தனை நாளைக்குப் பாடிக்கிட்டிருக்கப் போறே?''
அவன் : ''நான் கேட்ட ஸ்கூட்டர் லோனை நீங்க சாங்ஷன் பண்ணுகிற நாள் வரை!''

பிச்சைக்காரன் - 1: ''ஒரு காலத்தில் லட்சாதிபதியாய் வீடு, தோட்டம்னு இருந்தவன் நான்!''
பிச்சைக்காரன் - 2: ''திருவோடு வாழ்ந்த நீ திருவோடு ஏந்த வேண்டிய நிலைக்கு வந்துட்டியாக்கும்...ச்சு..ச்சு!''




ஒரு சில...

உ.ராஜாஜி



பாங்க் மானேஜர் : "ஸாரி! பேண்ட் சர்ட்டையெல்லாம் லாக்கரில் வைக்க விதிகளில் இடமில்லே!"

அவன் : "கொஞ்சம் தயவு பண்ணுங்க ஸார்! வீட்டில் வச்சிருந்தா என் பெண்டாட்டி எல்லாவற்றையும் தூக்கிப்போட்டு எவர்ஸில்வர் பாத்திரம் வாங்கிடுறா!"



அவன் : "குண்டப்பா திரையரங்கில் திருகாந்த், திருதேவி, திருப்ரியா நடித்த படம் பார்த்துவிட்டு வரலாம்... வருகிறாயா?"

இவன் : "இப்படி தனித்தமிழில் பேசிக் கழுத்தறுக்காமல் ஸ்ரீகாந்த் ஸ்ரீதேவி ஸ்ரீப்ரியா படம் பார்க்க வர்றியான்னு ஒழுங்கா கூப்பிட்டால் தான் வருவேன்!"

●

மனைவி : (கொஞ்சலாக) "நீங்க என் மடியில் வந்து உட்காருவேளாம்... நான் கொஞ்சம் கொஞ்சமா சாதம் ஊட்டுவேனாம்!"

கணவன் : "அப்புறம் சம்பளம் எங்கேனு கேட்பேனும் நீங்க அப்படியே பர்ஸைத் தூக்கி கொடுத்துடுவேளாம்னு மீதிப்பாதியைச் சொல்லாமல் விட்டுட்டியே... ஏன்?"



● திருவல்லிக்கேணி 'கோஷா' மகப்பேறு மருத்துவ மனையில் பிரசவவலியுடன் கொண்டு வரப்படும் பெண்களைக் கண்டதும் இரவு பகலென்று பாராமல் ஒரு மணி ஒலிக்கப்படுகிறது. டாக்டர்களைத் தயாராக இருக்கக்கூறும் அறிவிப்பாம் இது...

● அண்மையில் ஒரு நாள் வர்த்தக ஒலிபரப்பில் திடீரென்று தடங்கல். வானொலியினர் வருந்தப்போவதாக ஆவலுடன் எதிர் பார்த்தபோது... "மின்சாரக் கோளாறு காரணமாக நிகழ்ச்சியில் தடை ஏற்பட்டது" என்றார்களே தவிர வானொலியினர் வருந்தாதது மிகவும் வருத்தமாக இருந்தது.



● மோட்டார் சைக்கிளில் பின்புறம் அமர்ந்து செல்லும் 'புடவை கட்டிய' பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை. கடந்த வாரம் கடற் கரையில் வந்து இறங்கினர் ஒரு காதலனும் காதலியும். திடீரென்று காதலி கத்தினாள்... 'ஐயோ என் புடவை தீயில் பொசுங்கி விட்டதே' என்று. மோட்டார் சைக்கிளில் வரும்போது எப்படித் தீப்பிடித்தது? மோட்டார் சைக்கிளின் புகை போக்கி வழியே வரும் சூடான புகை அவள் புடவையின் சிறு பகுதியை ருசித்து முடித்திருந்தது.

● டாலர், பௌண்டு, மற்றும் ரூபாயைக் குறிக்கும் வகையில் "Bu$iness with P£easuRe" என்று அண்ணா மேம்பாலம் அருகே விளம்பரப்படுத்தியுள்ளது "நேஷனல் கிரின்லேஸ் பேங்க்."



● சென்னை கோட்டையில் கிறித்துவ ஆலயம் இருப்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் கோட்டைக்குள்ளேயே ஒரு மசூதி இருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

● அகரம் அருகில் ஒரு சிறிய பால் கடையில் 'சதா பால் கிடைக்கும்' என்று எழுதியிருந்தது. 'சாதா பால் கிடைக்கும்' என்பதைத் தவறாக எழுதியிருக்கிறீர்கள் எனக் கடைக்காரரிடம் கூறியபோது 'எப்போதும் பால் கிடைக்கும் என்பதைத்தான் அப்படி குறிப்பிட்டிருக்கிறேன்' என்றார் அவர்.



—யெம்ஜீ

அத்தியாயம் 25

ஒரு மாதத்தில் எவ்வளவு நிகழ்ச்சிகள், சம்பவங்கள், மாற்றங்கள்! மாப்பிள்ளை ராஜாமணி முதல் மல்லிகா வரை எல்லோரும் நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டார்கள்.

ராஜாமணி உள்ளூற வியந்தார். இமிருக்கும் பிடிவாதத்துக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த ஜெயா மனம் மாறிவிட்டாள். எந்தப் பெண் தனக்கு மருமகளாக வாய்க்கவே கூடாது என்று பொருமினளோ, அந்தப் பெண்தான் மருமகள் என்பதை மாப்பிள்ளையும் அர்ஜுனனும் தீர்மானித்த பிறகு அவள் தன் மனத்தை மாற்றிக்கொண்டாள். மாப்பிள்ளை ராஜாமணியை விரோதித்துக் கொண்டால் அப்புறம் அவர் அவளுக்குத் தங்க நிழல்கூட அளிக்க மாட்டார் என்ற பயம் பிடித்துக் கொண்டது. மல்லிகாவை ஏற்றுக் கொள்வது என்று தீர்மானித்தாள். தன் தீர்மானம் வெறும் ஒப்புக்காக அல்ல என்பதை நிரூபிக்க ஆவல் கொண்டாள். எப்படி? அற்ப சொற்ப விஷயங்கள் மூலம் தன் அங்கீகாரத்தை வெளிப்படுத்தினால் மற்றவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள் என்று தோன்றியது.

ஒருநாள் மல்லிகாவை அழைத்துக்கொண்டு நகைக் கடைக்குப் போனாள். தன்னுடைய வைர நெக்லஸையும் இரண்டு ஜதை கல் வளையல்களையும் அழித்துப் பண்ண ஏற்பாடு செய்தாள். புது மோஸ்தரில் மல்லிகாவுக்கு நெக்லஸும் வளையல்களும் தயாராகின.

இன்னொரு நாள் காரில் மல்லிகாவைக் காஞ்சிபுரம் அழைத்துச் சென்றாள். அங்கே சொந்தத் தறி போட்டு, யாரும் போடாத டிசைன்களில் புடவை தயார் செய்யும் ஒரு வியாபாரியை அவளுக்குத் தெரியும். ஏழெட்டுப் புடவைகளுக்கு ஆர்டர் கொடுத்தாள்.

வேம்புவுடன் ஜெயா எப்பவுமே கலகலப்பாகப் பேசுவாள். இப்போது அது இன்னும் அதிகமாயிற்று. மல்லிகாவை அளவுக்கு மீறி ஜெயா கொண்டாடுவதை ஒரு சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கொண்டு வந்த வேம்பு கேட்டாள்:

''ஏன் ஜெயா என்ன இப்படி இமேர்னு தனிக் கட்சியைத் தூர எறிந்துவிட்டு மெஜாரிட்டி கட்சியிலே சேர்ந்துட்டே?''

''யோசிச்சுப் பார்த்தேன், வேம்பு. அர்ஜுன் ஆசைப்படறான். மாப்பிள்ளை தீர்மானம் செய்துட்டார். நீ கூட அந்தப் பெண்ணை ரொம்பவும் சிலாகிக்கிறே. நான் யோசனை செய்து பார்த்தேன். என் மனசைக் கழுவி விட்டுப் பார்க்கிறப்போ அவள் எனக்குப்பிடித்துப் போனாள். என் பிள்ளைக்கும் புருஷனுக்கும் பிடிக்கிறதுன்னு. குதிரை உயர்ந்த ஜாதிக் குதிரையாகத் தான் இருக்கும்னு தோணித்து.... மனசை மாத்திண்டேன்!''

வேம்பு சிரித்தாள்.

''இப்ப நீ மாத்திண்டது உனக்கு நல்லதாய்ப் போச்சு, ஜெயா. கல்யாணமானப்புறம் கண்டிப்பா மல்லிகா உன்னை மாத்துவா. ஆனா நீ இப்பவே மனம் மாறியதில் உனக்குத்தான் நல்லதா அமையறது. மாப்பிள்ளை கூட உள்ளூறச் சந்தோஷப்படுகிறார்!''

''அப்படியா?''

''நீயே வேணும்னாலும் கேளேன்.''

ஜெயா கேட்கவில்லை.

மாப்பிள்ளையின் குணம் அவளுக்குத் தெரியும்.

• • •

அன்று ஒரு வெள்ளிக் கிழமை.

மல்லிகாவின் அறைக்கு வந்தான் அர்ஜுன்.

கீழே உட்கார்ந்து கொண்டு ஒரு பழைய பெட்டியினுள் எதையோ துழாவிக்கொண்டிருந்த மல்லிகா ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்ன அர்ஜுன்!''


''உனக்கு மரியாதையே போதாது!'' என்றான் அர்ஜுன்.

''ஏன்?''

''நான் வந்து நிற்கிறேன். நீ எழுந்து நிற்காமல் உட்கார்ந்தே தலை நிமிர்ந்து பேசுகிறாய்!''

''மரியாதையைக் கேட்டு வாங்கப்படாது. இப்ப என்ன செய்யணும்?''

''மெட்ராஸ்லே கூவம் நதின்னு ஒரு ஜீவநதி உலகத்துக் குப்பை கூளங்களை



யெல்லாம் ஏந்திண்டு ரொம்பப் பொறுமை யாக நிக்கறது.''

''அதை ஓட வைக்கணுமா?''

''அது பிரும்மாவாலே கூடச் செய்ய முடியாத காரியம்... இந்த ஹைதர் காலத்துப் பெட்டியை அந்தக் கூவத்திலே போடணும். எப்ப வச்சுக்கலாம்?''

''இது எங்க அப்பா சின்ன வயசுலே வாங்கின பெட்டி. அவர் ஞாபகார்த்தமா இது ஒண்ணுதான் எங்கிட்ட இருக்கு.''

''ஏன் அவர் உபயோகித்த ஜாதகப் பலகையும் சோழிகளும் கூடத்தான்...''

''இதை எனக்கு அவர் தம் கையாலே கொடுத்திருக்கிறார் அர்ஜுன்...''

''சரி சரி... இப்ப என்ன தேடறே?''

''என் காது ஸ்டட்டின் திருகு!''

''அம்மாதான் உன் காதிலே வைரத்தோடு போட்டிருக்காளே! அது மின்னற போது ஏன் பழைய ஸ்டட்....''

''அது என் காதிலே இருக்கிறப்போத்தான் உங்களைச் சந்தித்தேன்.''

''ஓ, செண்டிமெண்டா... சரி அப்புறம் அதைத் தேடலாம். இப்ப என் கூடப் புறப்படு.''

''எங்கே?''

''ஜி எச்.சுக்கு.''

''ஜி. எச்சா... எதுக்கு?''

''சாமாவுக்கு ஆபரேஷன்.''

''சாமா அன்னிலேருந்து தினம் தினம் ஆபரேஷன் ஆபரேஷன்னு சொல்லிண்டிருந்தார்.ஏன் இன்னும் பண்ணியாகலேன்னு நான் எனக்குள் ஆச்சரியப்பட்டேன்! இப்ப...''

''ஆமாம்... யாரோ பிரைவேட் டாக்டர் கிட்டே ஒரு வக்கீல் ஏற்பாடு பண்ணியிருந்தார். ஆனா அது நடக்கலே. நேத்து ராத்திரி பன்னெண்டு மணிக்குத் திடீரென்று வலி கொல்ல ஆரம்பிச்சது. ஆம்புலன்ஸில் கொண்டு போனார்கள். ஸ்ட்ராங்குலேட்டட் ஹிரண்யா!''

''நான் ரெடி.''

இருவரும் ஹால் வழியாக நடக்கையில் மாப்பிள்ளை ராஜாமணி நிறுத்தினார்.

''எதுக்கும் கையிலே கொஞ்சம் பணத்துடன் போ... சாமா ஒய்ஃபுக்கு டெலிகிராம் கொடு'' என்றார் ராஜாமணி.

''சரி அப்பா.''

''மல்லிகாவும் உடன் வருகிறாளா?''

''ஆமாம்.''

''சீக்கிரம் போய் வாருங்கள்... இன்விடேஷன் எழுதணும். ஏகப்பட்டது இருக்கு.''

''இன்னும் இருபது நாள் இருக்கே...''

''போஸ்டல் டிபார்ட்மெண்டைப் பத்தி உனக்குத் தெரியாது. சரி சரி சீக்கிரம் போய் வாருங்கள்.''

• • •

அவர்கள் ஜி.எச்.சை அடையும்போது காலை ஒன்பது மணி. சாமாவை அரை மணி நேரம் முன்புதான், பிராட்ஃபீல்ட் சர்ஜிகல் பிளாக்குக்கு அழைத்துச் சென்றார்கள் என்ற தகவல் வந்தது.

அவர்கள் சற்று நேரம் ராஜ்பவன் லிஃப்ட் அருகே நின்றபோது அர்ஜுனனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''மல்லிகா, நான் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே உட்கார்ந்திருக்கிறேன். ஹிரண்யா ஆபரேஷன் இப்பவெல்லாம் மைனர்தான். இருந்தாலும் கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஒரு மணி நேரத்துக்கு அப்புறம் இங்கே மீட் பண்ணலாம்.''

''ஏன் நானும் உங்க கூட உட்கார்றேனே.''

''வேண்டாம். அங்கே நான் பேச முடியாது.''

''அதோ போகிற லில் சேரைப் பாருங்கள். என்ன அசுருதியில் பாடிக்கொண்டே போகிறது... இதை விடவா என் குரல் நாராசமாக இருக்கும்... மெதுவாகப் பேசலாம்!''

''நோ, மல்லிகா... இப்ப ஒரு தடவை. ஒரே தடவை நான் சொல்லுவதைக் கேளு.''

''ஓ.கே. இனிமேல் நான் சொல்லுவதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும்.''

''வேறே வழி? அதுக்குத்தான் நான் என் தலையைக் கொடுத்தாச்சே!''

அர்ஜுன் போய்விட்டான்.

ஐந்து நிமிடம் அதே இடத்தில்நின்ற மல்லிகாவுக்குத் திடீரென்று எட்டாம் நம்பர் வார்ட் நினைவுக்கு வந்தது. இன்டென்ஸிவ் மெடிகல் கேர்



யூனிட். அங்கேதான் கடைசி சில மணி நேரங்களை நடேசன் கழித்து உயிரை விட்டார்.

கால் தானாகவே இயங்கியது.

அப்பா கண் முன் தோன்றினார். இப்போது அவளுடைய நிலையைப் பார்க்க அவர் இல்லாமல் போய் விட்டாரே! எவ்வளவு சந்தோஷப்படுவார்!

திடீரென்று அம்மாவின் நினைவு வந்தது. என்ன அம்மா? அப்பா இறந்து போன நான்காம் நாள் ஒரு தபால் கார்டில், 'என் துக்கத்தை நான் இங்கேயே அனுபவித்துத் தீர்த்துக் கொள்கிறேன். மெட்ராஸுக்கு வந்து முன் பின் தெரியாதவர்கள் முன்னிலையில் என்னால் அழுது புலம்ப முடியாது' என்று அல்லவா அவள் எழுதினாள்.

இனிமேல் அவளுக்கும் அவளுடைய அம்மாவுக்கும் நிச்சயம் தொடர்பு இருக்காது. தன்னுடைய ஒன்று விட்ட அண்ணா பிள்ளைக்கு — நாற்பது வயதுக்கு மேல் ஆன மாஜி ராணுவ அதிகாரிக்குத் தன் பெண்ணை எப்படியாவது கொடுத்துவிட்டு, அவனுடைய செல்வத்தை நிரந்தரமாக அனுபவிக்க வேண்டும் என்று அழகான கோட்டை ஒன்றைக் கட்டியிருந்த அம்மா இனிமேல் மல்லிகா முகத்தில் விழிக்கவும் விரும்பமாட்டாள். மல்லிகாவுக்கும் அப்பாவை மதிக்காத அம்மா மீது இரக்கம் பிறக்கவில்லை.

அவள் நடந்தாள்.

இன்டென்சிவ் கேர் யூனிட் வந்தது. நின்றாள். பல டாக்டர்கள் ஒரு கட்டிலைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

யாருக்கு என்னவோ!

ஒரு நிமிடம் நின்றவள், தன் அருகே யாரோ ஒரு நர்ஸ் நிற்பதை உணர்ந்தாள். திரும்பிப் பார்த்தாள். பார்த்த முகமாக இருந்தது. விழித்தாள்.

''நீ மல்லிகா இல்லே?''

''ஆமாம்.... நீங்க?''

''லில்லி... அம்மணியின் பிரெண்ட்...''

''அவள்....அம்மணி வெளி நாடு போய் விட்டா, இல்லே....''

''யெஸ்... மஸ்கட், நேற்று லெட்டர் வந்தது... அது சரி, மிஸ்டர் அர்ஜுன் எங்கே?''

''ஆபரேஷன் தியேட்டருக்குப் போயிருக்கிறார்.'' மல்லிகா விவரமாகக் கூறினாள்.

''நீயும் அர்ஜுனனும்....'' லில்லி ஆரம்பித்தாள். முடிக்கத் தெரியவில்லை. ஒரு வழியாக ''அம்மணி சொல்லுவாள்...'' என்றாள்.

''இந்த மாதம் இருபத்தெட்டாம் தேதி.''

''கங்கிராட்ஸ்... விஷ்யூ ஆல் தி பெஸ்ட். என் பெயர் லில்லி லூசி தாமஸ்...''

''நிச்சயம் நானும் அர்ஜுனனும் உங்களைத் தேடிக்கொண்டு உங்க ரூமுக்கு வந்து இன்விடேஷனைத் தருகிறோம். நேத்து சாயங்காலம்தான் பிரஸ்ஸிலேயிருந்து வந்தது.''

''ஓகே, மிஸ் மல்லிகா... ஒரு சின்ன பிராப்ளம்!''

''என்ன?''

''நானே அர்ஜுனைப் பார்க்கணும்னு நினைச்சேன். கார்டியாக் பிளாக்கிலிருந்து அவர் அப்பா டிஸ்சார்ஜ் ஆயிட்டார்னு தெரிஞ்சுது. ஆபீஸ் ரிகார்ட்லேயிருந்து அட்ரஸை எடுத்துக் கொண்டேன். அர்ஜுன் எப்ப ஃப்ரீயாக இருப்பார்?''

''நீங்க எப்ப வேணும்னாலும் வரலாம். என்ன ப்ராப்ளம்னு தெரிஞ்சுக்கலாமா?''

''அம்மணி போறப்போ ஒரு பொட்டணத்தை வெச்சுட்டுப் போயிட்டா. வேணும்னு வெச்சுட்டுப் போயிருக்காங்கறதை நேத்து வந்த லெட்டர்லேந்து புரிஞ்சுக்கிட்டேன். அது எனக்காகத்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறாள்.''

''என்ன பொட்டணம்?''

''நகைகள்.''

திடீரென்று பல வாரங்களுக்கு முன் அவள், அம்மணி, அர்ஜுன் மூவரும் உட்லண்ட்ஸுக்குச் சாப்பிடப் போனபோது அம்மணி சொன்ன கதை நினைவில் முட்டியது.

''பெரியசாமின்னு ஒருவர்...''

''அதேதான்... அதேதான்...''

''என்ன செய்யணும்?''

''அம்மணிக்குத் தன் அம்மா மேலே ரொம்ப பக்தி.''

''சரி.''

''நகைகளை யெல்லாம் வித்து...''

''வித்து?''

''பணமாக்கி, பணத்தை நர்ஸிங் காலேஜில் ஒரு என்டோவ்மென்டா அம்மணியின் அம்மா பெயரில் ஏற்படுத்தணும். ஏழை மாணவி ஒருத்திக்கு அதிலிருந்து வர்ற வட்டிப் பணம் உபயோகமாகணும்.''

''ரொம்ப நல்ல எண்ணம் லில்லி! நோபிள் ஐடியா.. இன்னும் ஒரு மணி நேரத்தில் ராஜ்பவன் லிஃப்டுக்கு அர்ஜுன் வருவார். நீயே உன் வாயால் இந்த உன்னதமான திட்டத்தைச் சொல்லிவிடு.''

''இந்த ஏற்பாட்டைச் செய்த பிறகுதான் அம்மணிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறேன்.''

''வெரி குட்.''

''அப்ப நான் வரேன்.''

லில்லி அவள் மனத்தை விட்டு அகலவேயில்லை. மல்லிகா மெதுவாக நடந்தாள். லில்லியின் வெள்ளை உள்ளம் அவளை மெய் சிலிர்க்க வைத்தது. கிட்டத்தட்ட இருபதாயிரம் பெறுமானமுள்ள நகைகள். லில்லி விற்று எடுத்துக் கொண்டால் அதில் தப்பு கூட இருக்காது. ஆனால் அதை அவள்

மனைவி : ஆபீஸ் முடிஞ்சு வரும்போது பூ வாங்கிட்டு வரச்சொன்னேனே! வாங்கிட்டு வந்தீங்களா?

கணவன்: ஓ, இந்தா! காலிஃபிளவர்!

-மரியஜோசப்



தன் ஸ்டீரிங்கை வேறு வழியில் திருப்பிக் கொடுக்கிறாள்.

நடந்து கொண்டே வந்தவன் படி இறங்கினான்.

திடீரென்று ஜி.எச். சூப்ரண்டெண்ட்டின் அலுவலகத்தினுள் பிரவேசிக்க வேண்டும் என்று தோன்றியது. அங்கே நிறையப் படங்களும் சுவையான தகவல்களும் இருக்கின்றன. முன்னொரு தரம் அவசர அவசரமாகப் பார்த்ததில் திருப்தி ஏற்படவில்லை.

கைக் கடிகாரத்தைப் (ஜெயா வாங்கிக் கொடுத்தது) பார்த்தான். ஒன்பதரை.

இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது.

சூப்பிரண்டெண்ட் இல்லை. 'ரௌண்ட்ஸ்' போயிருக்கிறாராம். ஏழெட்டுப் பேர் அவரை எதிர் நோக்கி உட்கார்ந்திருந்தார்கள்.

சுவரெல்லாம் படங்கள், தகவல் பலகைகள்.

1664ல் கிழக்கிந்தியக் கம்பெனி ராணுவ ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டியது. இருநூறு வருடங்களுக்குப் பிறகு 1826ல் ஜெனரல் ஹாஸ்பிட்டலாக அவதாரம் எடுத்தது. முதல் சூப்பிரண்டெண்ட் லெப்டினண்ட் கர்னல் வில்லியம் இவான்ஸ்.

இன்னொரு பலகை வாயிலுக்குப் பக்கத்தில் கண்களை ஈர்த்தது. 1979ல் புதிதாக வந்த புறநிலை நோயாளிகளின் எண்ணிக்கை எட்டு லட்சத்து நாற்பத்து நாலாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஆறு. மறுபடியும் வந்து போனவர்கள் பன்னிரண்டு லட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று இருபது பேர்கள். சராசரி 5738.

ஜி. எச்சில் அட்மிட் ஆனவர்கள் 56508. உயிருடன் வெளியேறியவர்கள் 54225.

வெறும் உடல்களாகக் கார் டாக்ஸி, குதிரை வண்டி என்று போனவர்கள் 1656.

மல்லிகா தன் அப்பாவை நினைத்துக் கொண்டாள். 1980ம் வருடத் தகவல் பலகையில் நடேசனின் பெயர் பொறிக்கப் படாவிட்டாலும் வெளியேறுதவர்களில் ஒருவராகக் கணக்கிடப்படுவார். திடீரென்று 1979 கணக்கு தப்போ என்று தோன்றியது. இறந்து போனவர்கள் 2283 என்று அல்லவா இருக்க வேண்டும்.

ஒரு சிப்பந்தியைக் கேட்டான். அவன் ரத்னச் சுருக்கமாகப் பதில் சொன்னான்.

''டிசம்பர் 31 உள்ளே வந்தவன் ஜனவரியில் வெளியேறுகிறான். அல்லது சாகிறான். அதே மாதிரி....''

''புரியறது சார்.''

மல்லிகா வெளியே வந்தாள்.

ஜி. எச்.

அவளுடைய இன்பகரமான நாட்களுக்கு அடிகோலிய இடம்.

ஜி. எச்.

மனித உணர்ச்சிகளை மனிதாபிமானங்களின் சக்திகளைப் புரிய வைத்த இடம்.

ஜி. எச்.

ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிய ஒரு விளக்கு.

ஜி. எச்.

அவளுடைய ' அப்பாவை விழுங்கிய அசுரன்.

ஜி. எச்.



''உன் மாமியார் உன்னைக் கண் கலங்காம பார்த்துக்குறாங்களா?''

''ஊஹூம் தினம் வெங்காய சட்னி, வெங்காய கொத்சு, வெங்காய சாம்பார்னு நிறைய உரிக்க வச்சுக் கண் கலங்க வச்சிடுறாங்க!''

- அ. இராமதாஸ்

நம்பிக்கை அளிக்கிறது.

நம்பிக்கையை உலுக்குகிறது. தைரியத்தைக் கொடுக்கிறது. அவநம்பிக்கையை அதிகரிக்கிறது.

ஜி. எச்.

சிப்பந்திகள்.

டாக்டர்கள்.

நர்சுகள்.

பலவிதம்.

பணம் விளையாடுகிறது.

பணத்தை லட்சியம் செய்வதில்லை.

ஊழல்கள்.

ஆனால் தியாகங்களும் உண்டு.

அற்பன்கள். ஆனால் தாராள இதயங்களும்.

மொத்தத்தில் ஜி. எச். ஓர் உலகம். உலகம் என்றால் எல்லாம் இருக்கும்.

நல்லதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

குற்றங்களை மட்டுமே சொல்லிக் கொண்டு போவதில் என்ன பயன்?

ஜி. எச். சிறப்பாக இருப்பது மக்கள் கையில். டாக்டர்கள் கையில்.

மல்லிகா கால் போனபடி நடந்தாள்.

திடீரென்று அர்ஜுன் குரல் கேட்டது.

''நான் எங்கே நிற்கச் சொன்னேன், நீ எங்கே நடந்து போகிறாய்?''

மல்லிகா நின்றாள்.

''சாமா?''

''ஆபரேஷன் முடிந்து விட்டது. வெற்றி.''

''யாருக்கு... டாக்டருக்கா, இல்லை சாமாவுக்கா?''

''எல்லோருக்கும்... நமக்கும் கூடத்தான். பத்து நாட்களுக்குப் பிறகு நமக்கு உதவி பண்ண வந்துவிடுவான்.''

''சந்தோஷம்.'' என்ற மல்லிகா தன் அப்பாவை நினைத்துக் கொண்டாள். அவர் இல்லையே?

''வா, போவோம்.''

அவள் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஒரு புது உலகத்தினுள் தான் பிரவேசிக்க இருப்பதை எண்ணிப் பார்த்தாள். ஒளி தெரிந்தது.

சுபம்



விடுமின் என் துகில்!



கலிங்கப் போருக்குச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வராமல் தாமதமாகவே திரும்பி வருகிறான். அதனால் சினம் கொண்ட தலைவி கதவைத் தாளிட்டுக் கொண்டு திறக்க மறுக்கிறாள். தலைவன் பலவாறாகக் கெஞ்சியும் அவள் கதவைத் திறக்கவில்லை.

தலைவன், தலைவியின் மனதை மாற்ற, தங்களுக்குள் நடந்த பழைய நிகழ்ச்சிகளைக் கூறி, அவளுடைய கோபத்தைத் தணிக்க முயற்சிக்கிறான். அதில் ஒரு நிகழ்ச்சியை வர்ணிக்கிறான் கவிஞன்:

தலைவனுடன் ஊடல்கொண்ட தலைவி, அவனிடம் பொய்க் கோபம் கொண்டாள். காதல் மிக்க தலைவனோ, விளையாட்டாக அவள் ஆடையைப்பற்றி இழுத்தான். இதனால் அவள் மேலும் கோபம் கொள்வதாகப் பாசாங்கு செய்து,"என் ஆடையை விடுங்கள்; விட்டு விடுங்கள்." என்று மழலை மொழியாய் கூறினாள். என்றாலும் அவள் அந்த இடத்தை விட்டு நகர முயற்சிக்கவில்லை. அவ்வாறு நகராமல் நின்ற செயலானது,"மேலும் என் ஆடையைப் பற்றுங்கள்!"என்று மறைமுகமாக உத்தரவு இடுவது போல் இருந்தது.

இப்பழைய நிகழ்ச்சியைத் தலைவிக்கு நினைவூட்டிய தலைவன், "அன்னம் போன்ற மென்மையான பெண்ணே! கதவுகளைத் திறவாய்!" என்று அன்புடன் அழைக்கிறான்.

'விடுமின், எங்கள் துகில் விடுமின்!'
என்று முனி வெகுளி மென் குதலை,
'துகிலினைப் பிடிமின்' என்ற பொருள்
விளைய நின்று, அருள்செய்
பெடைநாவீர்! கடைகள் திறமினோ!

—ஜெயங்கொண்டார் இயற்றிய
கலிங்கத்துப் பரணி (கடைத்திறப்பு பாடல் — 5)

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம் காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. ''செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்'' என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.

லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்



விதை நெல்

பூ.சொல்விளங்கும் பெருமாள்

போட்டிக் கதை - 18

அது பெரிய பாவம். அந்தப் பாவத்தையும் புண்ணியமாகக் கருதிச் செய்பவன்தான் கணேசன். படிக்கிற காலத்திலிருந்தே அவன் அப்படித்தான். வெட்டி முறிச்சான் சாமி கோயிலைச் சுற்றி ஐந்து பைசாவும் பத்துப் பைசாவும் நிரம்பக் கிடக்கும் — கன்னியாகுமரிக்குப் போகிற பயணிகள் அந்தக் கோயிலைப் பேருந்தில் கடக்கும்போது எறிகிற உண்டியல் காசுகள். அவற்றைப் பார்ப்பவர்கள் எடுத்துக் கோயிலின் முன்னாலிருக்கும் உண்டியலில் போட்டு விடுவார்கள்.

கணேசனும் காசுகளைப் பொறுக்குவான்; காசு வெட்டி முறிச்சான் சாமி உண்டியலில் போய்ச் சேராது; ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கும் அப்பாஸ் கடைக் கல்லாப் பெட்டிக்குள் போய் விழும் — வடைக்கும் டீக்கும் விலையாக. சாமியின் உண்டிக்குள் போனாலும் இவனது உண்டிக்காகப் போனாலும் ஒன்றுதான். சில நண்பர்களுக்கும் வாங்கிக் கொடுப்பான்; யாரிடமும் சாமிக் காசு என்று சொல்ல மாட்டான்.

ஒரு நாள் தனது நண்பனுடன் டீ சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, அன்று மட்டும் அந்தக் காசு வெட்டி முறிச்சான் கோயில் முன்னால் பொறுக்கியது என்று சொன்னான். கேட்டவனுக்கு வாந்தி வந்தது. தின்னதையெல்லாம் தெருவில் வாயால் எடுத்தான். வீட்டுக்கு வந்து தன்னிடம் இருந்த காசுகளையெல்லாம் கொண்டு போய் சாமியின் உண்டியலில் போட்டுவிட்டு, 'இன்னைக் கோடெ இந்தக் கணேசன்பயலோட ஒட்டும் வேண்டாம் ஒறவும் வேண்டாம்' என்று சாமியின் முன்னால் சபதம் எடுத்துக் கொண்டான்.

'அவ்வளவு கூறுள்ள பய சக்கரத்தை எங்கிட்டல்லா வீசி எறியனும்; முந்தா நாள் தின்னதெல்லாம் ஓமட்டல்லியே வோய்; காரிலே போறவனெல்லாம் நான் கேட்டாத் தரப்போறதுமில்லெ, சாமி அவ்ளத்தையும் இங்கப் போறதுமில்லெ'

கணேசன் இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேறிவிட்டான். தட்டிக் கேட்காத வெட்டி முறிச்சானிடம் திருடி வெற்றி கண்டவன், தட்டிக் கேட்க ஆளுள்ள ஊரிலும் திருடினான். யார் எவ்வளவு தட்டினாலென்ன, முதுகில் கொஞ்ச நேரம் வலிக்கும். கிடைத்தது லாபம்தானே.

குவியலாகப் போட்டிருந்த தேங்காய் அம்பாரத்தில் யாரோ இருபது தேங்காய்களைத் திருடி விட்டார்கள். முந்தின நாள் இரவு திருடியவனுடைய தடத்தை வட்டமிட்டுத் தடங்கீறிப் போட்டிருந்தார்கள். பலர் பார்த்தார்கள். யாருடைய தடம் என்று தெரியவில்லை. தடம் பார்ப்பவர் வந்தார். ஒரு தடத்தை ஒரு முறை பார்த்தாலே போதும். பல ஆண்டுகள் கழித்து வேறெங்காவது அந்தத் தடத்தைப் பார்த்தாலும் உடனே இன்னாருடைய தடம் என்று கூறும் ஆற்றலுடையவர் — தண்ணீரிலும் தடம் பார்க்கிறவர் என்று அவரைப் பற்றிச் சொல்வார்கள். டாக்டர் தொழிலைப் போல.

தோப்புக்காரரை அழைத்துத் தடம் பார்ப்பவர் என்ன கூறினாரோ கணேசனைப் பிடித்துப் பிழிந்து எடுத்து விட்டார்கள். கால் தடத்தைப் பார்த்தவர் கணேசன் முதுகில் கைத்தடங்கள் விழவைத்துவிட்டார். திருடியதை ஒப்புக்கொண்டான் — உடனே அல்ல, செமத்தையாக வாங்கிய பின். தொழில் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஆவணிப்பூ தொழி உழவுக் காலம். ஊரைச் சுற்றி எங்கு பார்த்தாலும் உழுவதும், உரம் போடுவதும், விதைப்பதும், நாற்றுப் பாவுவதுமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் கணேசனுக்கும் தொழில் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

மூலைக்கரை வயல் சுப்பிரமணியத்துக்கு அந்த ஐந்து மரக்கால் விதைப்பாடுதான் உண்டு. காலையில் எழுந்திருந்து சாமியைக் கும்பிட்டுவிட்டு, பச்சைத் தென்னை ஓலையில் முடைந்து வைத்திருந்த வல்லயத்திற்குள், குருவிக் கூடு போல் வைக்கோலை வைத்து ஐந்து மரக்கால் விதை மணியை அளந்து தட்டினார்.

''என்வேய், மூலை வயலுக்கோ?'' கேட்டுக் கொண்டே கணேசன் வந்தான்.

''ஆமடேய், லே இங்கெ வா, கொஞ்சம் இந்த வல்லயத்துக் காதைப் பிடித்து இறுக்கு'' என்று சுப்பிரமணியம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கணேசன் உதவ முந்தி வந்தான். இருவரும் சேர்ந்து விதை மூட்டையை அழகாகக் கட்டினார்கள்.

''கொஞ்சம் கஞ்சி குடிக்கிறியாலெ?'' அதற்குப் பொருள் கஞ்சியைக் குடித்துவிட்டு இந்த வல்லயத்தை ஊருக்கு மேற்கே இருக்கும் ஊத்துக்கு எடுத்து வர வேண்டும் என்பது. கணேசனுக்கும் தெரியும். சுப்பிரமணியத்தின் மனைவி கும்பாவில் ஊற்றி வைத்த கஞ்சியைக் கும்பாவின் ஓரத்தில் ஒட்டி வைத்திருந்த இளஞ் சிவப்புத் துவையலைத் தொட்டுக் கொண்டே உறிஞ்சி விட்டான்.

ஊற்றங்கரையில் வல்லத்தை இறக்கி வைத்துவிட்டு ஊனிக் கம்பு முறிக்க கணேசன் போனான். சுப்பிரமணியன், கையில்கொண்டு வந்த பனை நாரினை வல்லயத்தில் இறுகக் கட்டினார். அவன் கொய்யா மரத்தில் ஒடித்த தடித்த ஒரு கம்பைக் கொண்டு வந்து ஊற்றங்கரையில் நட்டு அடித்து இறுக்கினான்.



அந்தக் கம்பில் நாரின் மறு ஓரத்தைக் கட்டி விட்டு விதை நெல் வல்லயத்தைஊற்றுக்குள் கொண்டு போட்டார்.

''கணேசா, நார் ஒண்ணும் அத்திராதேறேய்?''

''சுசீந்திரம் தேரை வேண்ணாலும் கட்டி இழுமே ஓய். அறுமாமில்ல, பெரிய வடம் கணக்கா இல்ல இருக்கு''

''லே, குளிக்க வார சின்னப் பயலுவ, சில்லண்டி விளையாட்டு விளையாடி வித்துக் கித்துப் போட்டிர மாட்டானுவளே?''

''வித்து நெல்லுல எந்தப் பயலாவது விளையாடுவானுவளா?'' கணேசன் சொன்னதைக் கேட்டுச் சுப்பிரமணியத்துக்குச் சிரிப்பு வந்தது. வாய்க்குள்ளே அடக்கிக் கொண்டார். 'எத்தனை பேருடைய வித்து நெல்லை எடுத்து அவல் இடிக்கத் தின்னிருப்பான்; வித்துக் காசாக்கியிருப்பான்; அவல்காரிட்டக் குடுத்து இவன்....'மனத்துக்குள் எண்ண ஓட்டம் வந்தது. கணேசனிடம் கூற முடியுமா?

''அப்போ நாளைக்கு வந்து வல்லயத்தை எடுத்து வெயில்லெ வாட வைக்கணும், நானே வாறேன்.''

''ஏண்ணே, வயல் உழவுக்கு எல்லாம் ஆள் சொல்லியாச்சா?''

''என் அண்ணன் மகன் முதல் உழவு இன்னைக்கி அங்கே உழுதுக்கிட்டிருப்பான்'' என்றார் சுப்பிரமணியன்.

''அப்போ நாளைக்கு வாடணும், நாளைக் கழிச்ச நனையணும், மய்க்கா நாளு வாடணும், அப்புறம் முளை விட்டிருமில்ல?''

''ஆமலே, இன்னிக்கித் தொழிக் கலக்கி, நாளைக்கு அழுகப் போட்டு, மய்க்கா நாளு நேரொழவு, அப்புறம் மூணும் உழவு மரம் அடிச்சச் சரியா வரும். அந்தக் கணக்கிலே தானே இன்னிக்கி வித்துச் சொரனை கட்டினேன்!''

''ம், ஓமக்குத் தெரியாத சங்கதியா?''

''கணேசா, நீ இருக்கியா, போறியா? நான் ரெண்டு மூங்கு மூங்கிட்டு வந்துடறேன்டேய். காலையில இந்தச் சோலியாலே இருந்தேனு, குளிக்கல்ல பார்த்துக்க.''

அந்த ஊற்றில் காலையிலும் மாலையிலும் பலர் வந்து குளிப்பார்கள். எல்லாம் நடக்கும்! அது ஒரு தன்னூற்று. அதிலிருந்து ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் வெளியில் ஓடிக் கொண்டே இருக்கிறது. சற்று ஆழமான ஊற்று. பள்ளிப் பையன்கள் நீச்சலடித்து நீண்ட நேரம் விளையாடும் தண்ணீர் மைதானம் அது.

சுப்பிரமணியம் காக்காய்க் குளியல் குளித்துக்கொண்டு வந்ததும் இருவரும் பேசிக் கொண்டே நடந்து சென்றனர்.

மறு நாள் ஊற்றங்கரையில் பத்துப் பதினைந்து பேர் கூடி நின்றனர். தடம் பார்ப்பவர் குனிந்து குனிந்து பல கோணங்களில் பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஈர மண்ணிலே ஒண்ணும் சரியாகப் பிடிபட மாட்டேங்குது. தடத்திலேயும் தண்ணி கசிஞ்சிருக்கு. இந்த எழவு புள்ளைய குளிக்கையில போடற ஆட்டத்திலே தண்ணி அலையடிச்சு வேற அழிச்சிருக்கு. ஆகையினாலே தடம் சரியாப் புடிபட மாட்டேங்குது'' அவர் வாங்குகிற காசுக்குப் பங்கம் வரக் கூடாதென்று காரணத்தை விளக்கினார். மூளைக் கம்பு மட்டும் நின்றது; அதில் நேற்றுக் கட்டிய பனை நாரையும் காணோம்.

''இதுக்குத் தடம் பார்க்கணுமாக்கும் தடம்! அதுதான் சுப்பிரமணியன் சொல்லுவான் இல்லியா வோய்; மேப்படியானைக் கூடக் கூட்டிக்கிட்டு வந்தேறுமுண்ணு. அப்புறம் என்ன? தாணுமன் கோயில்லெ போய்க் கணக்குக் கேளுங்க.'' கூட்டத்திலிருந்து ஒருவர் கணேசன்தான் வித்து நெல்லைத்

திருடியவன் என்பதை விளக்கமாகக் கூறி விட்டார்.

இரைக்க இரைக்க ஓடிவந்த பையன் ஒருவன், ''நாரோ ஆளுக்குப் போயிருக்காவுளாம்; கணேசனுக்க அம்மா சொன்னுவே'' என்றான். இவனது நெஞ்சு ஏறி இறங்கியது.

''அந்தப் பய எங்கவோய் இங்க இருப்பான்? இதுக்கு முன்னே அவன் திரிப் பறிஞ்சது திரிப்பறிஞ்சதுங்கிற மாதிரி பறிஞ்சு ஓடிர மாட்டான்? வீட்லெ அடை காத்துக் கிட்டுக் கிடப்பாளுக்கும்....''

''இங்கிற சோத்திலெல்லாவோய் மண்ணடிச்சுப் போட்டான்.''

''இந்த ஊழும் பாளுறனையச் சொல்லு. வீட்டில அந்தக் கள்ளப் பயலுக்குக் கோழியடிச்சுச் சோறு போட்டாளுமில்லெ!'' ஒரு வயதானவர் சுப்பிரமணியன் கணேசனுக்கு கஞ்சி கொடுத்ததைக் கிண்டல் செய்தார். சுப்பிரமணியன் ஒன்றும் பேசவில்லை.

இரவு பத்து மணிக்கு சுப்பிரமணியனும் அவரோட ஒரு ஐந்து பேரும் — அவர்களில் மூன்று பேர் ஏற்கனவே வித்துச் சரணைகளைத் திருட்டுக் கொடுத்தவர்கள் — கணேசனின் ஓலைக் குடிசைக்கு முன்னால் வந்து நின்று கொண்டு அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள்.

அவன் வந்தான். ''சாமியாணை அண்ணே நான் எடுக்கல்லெ; நான்வந்த உடனே கேள்விப்பட்டேன் பாத்துக்கிடும். என்னைத் தான் சந்தேகப்படுவியன்னு எனக்கும் தெரியும்; ஆனா நான் சாமியாணை என் தாய் பேர் சத்தியம் எடுக்கல்ல பாத்துக்கிடும்.''

கணேசனுடைய தாய் உள்ளே யிருந்து வந்தாள். ''ஐயா, நானும் நல்லதனமா எவ்வளவோ கேட்டுட்டேன்; ஒரேயடியா இல்லேங்கான்; நல்லா இருப்பிய அடிச்சிப் புடாதிய ஐயா! லே மக்கா, அண்ணன் தானலே எடுத்தியன்னு சொல்லிருலே...''

''சீ... சவமே. நான்தான் சரணையை எடுக்கலெங்கறேனே... எந்தக் கோயில்லெ வேணுலும் சத்தியம் பண்ணுவேன்.''

''சரிலே, வா, வந்து ஊர் நாட்டார்கிட்ட உன் வழக்கைச் சொல்லு.''

''எங்கே வேணுமுன்னாலும் நான் வறேன்'' என்று சொல்லிக் கொண்டு கணேசன் புறப்பட்டான். குடிசைக்குள்ளிருந்து தீனமான குரல், ''ஐயா, எம்புள்ளையை அடிச்சிராதீங்கய்யா....'' எழும்பித் தேம்பித் தேய்ந்தது.

''லே, கணேசா, இதுக்கு முந்தி நீ என்னோட வித்துச் சரணையை எடுத்தாயில்லே, அப்போ நீ ஒடனே ஒத்துக்கிட்டியா? இல்லே, கேக்கேன். ஏம்லெ வாய மூடிக்கிட்டு வாறே?'' முதல் ஆள் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டார்.

''எண்ணே....'' — எதையோ சொல்ல வாயெடுத்தான்.

''எண்ணெயும் புண்ணாக்குந்தான்; சஞ்சாரக் கொட்டுக்குப் பேய் வராதுலே.''

''எண்ணே, நான் திருந்திட்டேண்ணே, தப்புத் தண்டா செய்யாதவன்னு சொன்னனு?''

''இவங்கிட்ட ஞாய விளக்கம் என்ன பேச வேண்டியிருக்கு, வெட்டி முறிச்சான் கோயில் வாசல்லே வந்து சத்தியம் பண்ணிக் குடு பாப்போம், நான் எடுக்கல்லேன்னு'' — இரண்டாவது ஆள் ஆவேசமாகப் பேசினார்.

''இந்த நடு ராத்திரியிலயா? அப்போ ஊர் நாட்டார்கிட்ட வான்னு சொன்னது சும்மாவா?''

''பாத்தியா, சுப்பிரமணியா, பய பம்முறதெப் பாத்தியா! நான் அப்பவே சொன்னேன், இவனெ இப்படிக் கேக்கப்படாது.'' ஆத்திரத்தில் சொற்கள் வெடித்து வந்தன.

''அண்ணே, சத்தியம் மட்டும் வேண்டாமுண்ணே, நான் ஒம்ம வீட்லே ஒரு வாய் கஞ்சி குடிச்சிருக்கேன் அண்ணே; தப்புப் பண்ணுதவன் செய்யுற சத்தியம் ஒம்மப் புடிச்சிரும்ணே; வேண்டாம்ணே!''

பளார் என்ற ஓர் அறை; மூன்றாவது ஆளின் இரும்புக் கரம் இறங்கி எழுந்தது. ''அம்மா'' என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தான் கணேசன்.

வெட்டி முறிச்சான் கோயில் பக்கம் வந்தாகி விட்டது. இதற்கு முன்பு வித்து சரணையை இவனிடம் திருட்டுக் கொடுத்தவர்களுடைய வெறியில் முக்கால்வாசி வெறி சுப்பிரமணியத்துக்கும் ஏறியிருந்தது.

''அப்பல்லாம் என்ன மாதிரி ஒன்னைக் கொல்லு கொல்லுன்னு கொன்னோம்... லேசலே ஒத்துக்கிட்டியாடா...'' — வாய்க்கு வராதவை.

''அப்ப வந்து....''

பூமியில் ஒன்று ஒரு உளிக் குத்து விழுந்தது. சுப்பிரமணியனுடைய காலில் மடார் என்று விழுந்தான். ''அண்ணே, எடுத்தேன்னு வேணுமின்னாலும் ஒத்துக்கிடுவேன்; ஆனால் சத்தியம் மட்டும் வேணாமிண்ணே'' காலைப் பிடித்துக் கொண்டு பரிதாபமாகக் கெஞ்சினான். மூன்றாவது ஆள் பின்னாலிருந்து ஓங்கி மிதித்தான். வெறி கொண்டவன் போல் குதித்த கணேசன் அந்த ஆளை ஒரு குத்துக் குத்திக் கீழே தள்ளி விட்டு, புலி துள்ளிக் கிளம்பியது போல் சிலிர்த்தெழுந்தான்.

இரண்டாவது ஆளும் மூன்றாவது ஆளும் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து கத்திரிப் பிடி போட்டு அமுக்கி ஒருவன் அவனது கை

கடைக்காரர்: சாமி படம் போட்ட காலண்டர் வேணுமா கவர்ச்சிப்படம் போட்ட காலண்டர் வேணுமா?

விடுதி மாணவன்: இரண்டையுமே கொடுங்க. எங்க அப்பா ஊரிலிருந்து வரும்போது கவர்ச்சி படத்திற்கு மேலே சாமி படத்தை மாட்டி வெச்சுக்கறேன்.

கே. ஆர். எம்



வாழ்க்கையின் சிறு மகிழ்ச்சிகளுக்காக சேமிப்பது எப்படி ?



உங்கள் குழந்தைகளின் முகத்தில் காணும் மகிழ்ச்சி, குடும்பத்தினருடன் உல்லாசப் பிரயாணம்—இவை போன்ற சில மகிழ்ச்சித் துளிகள் வாழ்க்கையின் சிறப்பு அம்சங்களாகும். இன்று சேமிக்கும் வசதியில் உள்ள நீங்கள் கனரா பாங்கில் **நிரந்தரா டெபாசிட்** கணக்கை உடனே தொடங்குங்கள்.

மாதந்தோறும் சேமிக்கும் சிறு தொகையானாலும், ஒரே தவணையில் செலுத்தப்படும் கணிசமான தொகையானாலும் இத்திட்டத்தில் சேமித்த தொகை நிரந்தரமான மாத வருமானத்தைப் பெற வழி செய்கிறது.

உங்கள் பாதுகாப்பான எதிர்காலத்திற்கு உறுதியளிப்பது **நிரந்தரா டெபாசிட்** திட்டம்.

விபரங்களுக்கு அருகில் உள்ள எமது கிளைக்கு விஜயம் செய்யுங்கள். எமது இதர சேமிப்புத் திட்டங்கள்: **காமதேனு, வித்யாநிதி**, பாலக்ஷேமா முதலியன

நிரந்தரா டெபாசிட்

கனரா பாங்க்

(தேசியமாக்கப்பட்ட பாங்க்)
நாடெங்கிலும் 1200க்கும்
மேற்பட்ட கிளைகள் உள்ளன

maa CB 2 E Tam 80

துணுக்கு வேட்டை

இந்த வாரம் கல்கி நேயர்களுக்காகத் துணுக்கு வேட்டையாடித் தந்திருக்கும் இளைஞர் ஜி. மோகன் ராஜ் சாரணர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். பள்ளி கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகும் தொடர்ந்து இந்த இயக்கத்தில் உள்ள இவர், சென்ற ஏப்ரல் மாதம் டெல்லியில் நடைபெற்ற ஏழாவது ரோவர் ரேஞ்சர்ஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

சேலம் அம்மாப் பேட்டைக்காரரான இவர் பெங்களூரில் புகுமுக வகுப்பை முடித்து ஸானிடரி இன்ஸ்பெக்டர் டிப்ளோமா பெற்றவர். வேலை கிடைக்காததால் சொந்த பிஸினஸ் - டூரிஸ்ட் பஸ் ஆபரேடராக இருக்கிறார்.

சாண்டில்யன், நா. பார்த்தசாரதி இவர்களை விரும்பிப் படிக்கும் திரு மோகன்ராஜ் கடந்த நான்கு ஆண்டுகளாய்ச் சபரிமலை சென்று வருகிற 'ஐயப்பன்'. காஞ்சிபுரம், காரைக்குடி, தஞ்சாவூர் போன்ற இடங்களில் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்து பெரிய வரலாறு படைத்தவர் என்று இவர் குறிப்பிடுவது திருவேற்காடு தவத்திரு ஐயப்பசுவாமிகளை.

-அமைப்பு: யெஸ்பால்

புகைப்படம்: ராமன் பிரதர்ஸ்.



கலைத் துணியால் கட்டினான். சுப்பிரமணியன் தம் பலம் கொண்ட மட்டும் ஒரு குத்து அவனது வயிற்றில் குத்தினார்.

'ஐயோ... ஐயோ... அம்மா...' — அலறல் ஊரையே கூட்டியிருக்கும் — நடு ஊராக இருந்திருந்தால். தலைத் துண்டால் ஒருவன் வாயைக் கட்டி விட்டான்.

காலையும், கையையும் உதறிக் கொண்டு, உறுமிக்கொண்டு துடித்தான். நான்காவது ஆள் தன் கையிலிருந்த ஈர்க் குச்சிகளைக் கொண்டு வந்து கணேசனுடைய கை நகக் கண்களிலோ முகக் கண்களிலோ இறக்கி இறக்கிக் குடைந்திருந்தால்கூட அவன் அந்தக் கதறல் கதறியிருக்க மாட்டான்.

சொல்லக் கூடாத இடம்.

அரை வேட்டி யெல்லாம், கால் தொடையெல்லாம் ஒரே ரத்தம். தலைத் துண்டால் கட்டப்பட்ட வாயிலிருந்தும் குளறும் அலறல் பீறிட்டு எழுந்தது. 'ஐயோ நான்... நான்....' அடங்கி விட்டான்.

''இப்பச் சொல்லுதான். நான்தான் எடுத்தேன்னு.... முதல்லே எங்கே போச்சு?''

வெட்டி மறிச்சான் கோயில் எதிரில் நடந்த பயங்கரக் கொலையைப் பற்றி எங்கு பார்த்தாலும் ஒரே பரபரப்பு — சிவப்புத் தொப்பிகள், காக்கித் தொப்பிகள், வெள்ளைக் காவலர் உந்துகள், மக்கள் கூட்டம் — பின் கை கட்டப்பட்டு, வாய் கட்டப்பட்டு, கண் பிதுங்கி, வேட்டி, கால் முழுவதும் ரத்தம் பரக்கக் கிடந்த கணேசனைச் சுற்றி.

இவ்வளவு கோரக் கொலையைக் காவலர்கள் தங்கள் வரலாற்றில் கண்டதில்லை என்று பேசிக் கொண்டார்கள். வெட்டி முறிச்சான் கோயில் வாசலில் கிடந்த மண்ணைத் தன் தலையில் வாரிப் போட்டுக் கொண்டு அந்தத் தாய் அலறி அழ முடியாமல் விம்மிக் கொண்டு கிடந்தாள்.

ஆற்றங் கரையில், குளக் கரையில், ஊற்றங்கரையில் இருவர் நிற்கும் இடங்களிலெல்லாம் இதே பேச்சு. ''மத்தவனுவெ எல்லாவனும்தலைமறைவாயிட்டானுவளாம்''

⊖ ⊖ ⊖

ஊற்றில் தொட்டுப் பிடித்து நீந்தி விளையாடிக் கொண்டிருந்த பையன்கள் குழி மண் எடுக்கும் போட்டியில் துள்ளிக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்..

ஒருவன் மண் எடுத்துக்கொண்டு வந்தான். மற்றொரு பையன் கையைத் தூக்கினான்.

''ஓ! ஓ! மண்ணெடுக்க முடியாம நாரைத் தூக்கிக் காட்டறான். தோத்திட்டான்... தோத்தாங்கள்ளி'' என்று பையன்கள் ஆரவாரம் செய்தார்கள்.

நாரை எடுத்த பையன் ''கனக்குவுலெ'' என்றான்.

''இழு, இழு, மெதுவா...ம் இழு''

வித்துச் சுரளை செத்த பன்றியைப் போல் நகர்ந்து நகர்ந்து இழுக்க இழுக்கக் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. ''வித்துச் சுரளை போய் வித்துச் சுரளை'' ஆரவாரம்—பையன்கள் குதித்தார்கள்.

குளித்து முடித்த, குளிக்க வந்த பெரியவர்கள் வாயடைத்து நின்றார்கள்.

ஆரவாரித்துக் கொண்டிருந்த சிறுவர்களும் சில்லிட்டு நின்று விட்டனர்.

முனையில் கட்டிய நார் உருவி, வித்துச் சுருளை உருண்டு ஆழத்துக்குச் சென்றிருக்க வேண்டும்.

கணேசனுக்கோ இன்னும் பிணப் பரிசோதனை முடியவில்லை.

வெட்டிமறிச்சான் சாமியின் நேமிசக் காசில் உண்டு வாழ்ந்த முரட்டுப் பக்தன் இறந்து விட்டதால் இனிமேல் உண்டியல் நிரம்பி வழியலாம்.

இரண்டே வருடங்களில் விற்பனையில் முதல் இடம்

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும், இந்தியாவிலே சமையலறைச் சாதனங்களில் ஏராளமான வகைகளும் கொண்ட ஜான்சனின் சீரிய படைப்பு ஜான்சன் மிக்ஸர் — கிரைண்டர். எங்கெங்கும் அறிமுகப் படுத்தினதுல் ஐயமின்றி தலை சிறந்ததென இரண்டே வருடங்களில் பீடு நடை போடுகிறது.

ஏன் எனக் கேட்பின் :

இலவசம் ! தனி எவர்சில்வர் கிண்ணம்! உலர்ந்த அரவைக்கென தனியான எவர்சில்வர் கிண்ணமிருப்பதால் மசாலாக்களின் மணமும், ருசியும் மில்க் ஷேக்குகளில கலக்காமல் பாதுகாப்பு அளிக்கிறது.



அதிக சுகாதாரம் பாகங்களை எளிதாக கழட்டும்படி தயாரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாகக் கழுவ முடிகிறது. உணவுப் பண்டங்களின் துகள்கள் உள்ளே நின்று விடும் சந்தர்ப்பம் இல்லை.

முழுமையான பாதுகாப்பு. பிளேட் பாகங்கள் இரு கிண்ணங்களிலும் உறுதியாக இணைக்கப் பட்டிருப்பதால் இயக்கத் தில் பிளேட் பறந்து விடாமல் பாதுகாப்பு அளிக்கிறது.





கன ரக ஓட்டம் அதிக உறுதியான 450 வாட் மோட்டார் நமது இந்திய சமையலுக்கென்றே சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது. 45 நிமிடங்கள் நிறுத்தாமல், தடையின்று ஓட்டலாம்.

மற்ற சிறப்பு அம்சங்கள்:


- மோட்டார் குளிர்ச்சியாக இருப்பதற்கென தனியான காற்றோட்டம்
- சீரிய கலவை மற்றும் அரவைக்கென மேம்படுத்தப்பட்ட பிளேட் அமைப்பு
- ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு செம்மையாக மாற்ற இஞ்சர் ஸ்விட்ச்
- ஒரு வருடத்திற்கு உத்திரவாதம் ஜான்சன்



JOHNSON®

இயக்கத்திலும், ஆற்றலிலும் இணையிலாச் சிறப்பு கொண்டது

ASP-BE-8001A



மனைவியின் மாண்பு

திருமுருக கிருபானந்தவாரியார்

சோழவள நாட்டில் பொய்யா மொழிப் புலவர் என்ற செந்தமிழ் வாணர் சீரும் சிறப்பும், பேரும், புகழும் பெற்று, தமிழ்த்தொண்டு செய்து கொண்டிருந்தார். மலருக்கு வாசனை இருப்பது போலவும், நீருள்ள இடத்தில் சேறு இருப்பது போலவும், விளக்கிற்கு ஒளி இருப்பது போலவும், புலவர்களுக்கு வறுமை இருப்பது இயல்பு. புலவர் பெருமான் வறுமையாகிய சிறுமையால் வாடினார். நதி ஓடாமல் தேங்கினால் நீர் துர்நாற்றம் அடையும். அது போல புலவன் ஒரே இடத்தில் இருந்தால் அவனுடைய அறிவு ஒளி விடாமல் மங்கிவிடும்.

பொய்யா மொழிப் புலவர் தமிழை வளர்க்கும் பொருட்டும், தனது வறுமையைத் தேய்க்கும் பொருட்டும் தமிழ் அருமை தெரிந்த மதுரையை நோக்கிப் புறப்பட்டார். அவர் வாழ்ந்த காலம் பதி நான்காம் நூற்றாண்டு. அப்பொழுது மோட்டார், ரயில் முதலிய சாதனங்கள் இல்லாத காலம். பல்லக்கில் ஏறிப் பல நாள் பயணம் செய்து, காடு, மலை இவைகளைக் கடந்து மதுரையைச் சேர்ந்தார்.

புலவர் பெருமான் மாலைப் பொழுதில் மதுரையை அடைந்தார். அப்பொழுது மதுரையை வணங்காமுடி பாண்டியன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது மன்னர்கள் காலையும், மாலையும் ஆலயவழிபாடு செய்வார்கள். வணங்காமுடி பாண்டியன் ஆலவாய் அண்ணலின் ஆலயம் சென்று வழிபாடு செய்து கொண்டிருந்தான். புலவர் அங்கு சென்று புரவலனைக் கண்டார். இவர் அரசனைக் காணும் பொழுது அரசன் கொடி மரத்தின் அருகில் தரையில் வீழ்ந்து அஷ்டாங்க வணக்கம் செய்து கொண்டிருந்தான். மன்னனுடைய சிவபக்தியைக் கண்ட புலவர் உள்ளம் மகிழ்ந்து ஒரு கட்டளைக் கலித்துறை பாடினார்.

குழற்கால் அரவிந்தம் கூம்பக்
குமுதம் முகையவிழ்ப்ப
நிழற்கால்மதியமன் றோ?நின்
திருக்குலம் நீயவன்தன்
அழற்கால் அவிர்சடை
மீதேயிருந்தும் அவ்வந்தி
வண்ணன்
கழற்கால் வணங்குதியோ?
வணங்காமுடிக் காவலனே!

இந்தப் பாடலின் பொருள் :

சந்திரனைக் கண்டு தாமரை மலர் அவியும். குமுதம் மலரும். 'பாண்டியன் சந்திர குலத்தில் பிறந்தவன். "சந்திர குலத்தில் பிறந்த பாண்டியனே! உன் குல முதல்வனாகிய சந்திர பகவான் சிவபெருமானுடைய திருமுடியில் வீற்றிருக்கின்றான். அப்படியிருக்க நீ சிவனுடைய பாதத்தில் விழுந்து பணிகின்றனையே! இது முறையா?"

இந்த நயமான பாடலைக் கேட்ட பாண்டியன் எழுந்து பாவலரைப் பணிந்தான். அவரைப் பொய்யா மொழிப் புலவர் என்று அறிந்தான். அவருக்கு நல் வரவு கூறினான்.

புலவர், "பாண்டிய மன்னா! மதுரையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழை வளர்க்கும் பொருட்டு வந்தேன்" என்று கூறினார்.

மன்னவன் மனத்தில் சங்கப் புலவர்கள் இருந்து அலங்கரித்த தமிழ்ச் சங்கத்தை இவரால் நிறுவ முடியுமா? என்ற ஐயம்



எழுந்தது. புலவர் தன்னுடைய தமிழ்ப் புலமையை அரசன் ஐயுறுகின்றான் என்று உணர்ந்து கொண்டார். சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலை வலம் வருகிற பொழுது அங்கே சங்கப் புலவர் மண்டபத்தில் அரசனுடன் நுழைந்து ஒரு வெண்பா பாடினார்.

உங்களிலே யாரொருவன்
ஒவ்வுவனோ? ஒவ்வேனோ?
திங்கள் குலனறியச் செப்புங்கள்—
சங்கத்தீர்!
பாடுகின்ற பாடலுக்கென்
பண்ணாலும் ஒக்குமோ?
ஏடெழுதார் ஏழெழுவீர் இன்று.

இந்தப் பாடலைக் கேட்டு மண்டபத்திலிருந்த சங்கப் புலவர்களின் கற்சிலைகள் கரக் கம்பம் சிரக்கம்பம் செய்தன.

பின்னர் புலவரும், புரவலனும் பொற்றாமரைத் திருக்குளத்தை அடைந்தனர். மன்னவன் புலவரை நோக்கி ''இப்பொய்கையில் சங்கப் பலகை முன்னே இருந்ததாகப் பெரியோர்கள் கூறுவார்கள்'' என்று கூறினான்.

பூவேந்தர் முன்போல்
புரப்பார் இலர் எனினும்
பாவேந்தர் உண்டென்னும்
பான்மையால் — மாவேந்தன்
மாறன் அறிய மதுரா
புரித் தமிழோர்
வீறனையே சற்றே
மிதி!

என்ற இந்த வெண்பாவைப் புலவர் பாடினார். உடனே பொற்றாமரையில் சங்கப் பலகை தோன்றிச் சற்று நேரம் மிதந்து மறைந்து விட்டது.

இதைக் கண்டு அரசன் பெரிதும் அதிசயமடைந்தான். வேந்தன் புலவரை விருந்தினர் மாளிகையில் இருக்கச் செய்து உண்டி உடை கொடுத்துப் பெரிதும் உபசரித்தான். அரசாங்க வேலையின் மிகுதியினால் புலவரைக் கொண்டு சங்கம் நிறுவும் பணியில் ஈடுபட அரசன் தாமதித்தான்.

சில நாட்கள் கழித்துப் புலவருக்குச் சீற்றம் எழுந்தது. ''நான் மதுரைக்கு வந்தது உண்ணவும் உறங்கவுமா? சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்க்கும் பொருட்டுத்தானே வந்தேன்! மன்னன் அதில் அக்கறை காட்டவில்லை. இனிக் கணமும் இங்கே இருப்பது முறையன்று. வீணே இங்கு உண்டு உறங்குவது நம்முடைய பெருமைக்கு இழுக்கு'' என்று எண்ணிக் கோபத்துடன் பல்லக்கில் ஏறிப் புறப்பட்டார்.

காவலர்கள் அரண்மனைக்கு ஓடி மகாராணியிடம் கூறினார்கள். பாண்டி மாதேவி இதனைக் கேட்டு மிகவும் நடுங்கினாள். பாண்டிய மன்னன் அப்பொழுது அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தார். தூங்குகின்ற கணவனை எழுப்புவது முறையன்று. புலவர் சீற்றத்தால் அறம் பாடினால் பாண்டிய நாட்டின் வளம் குன்றிவிடும். பாண்டியனுக்கும் தீங்கு உண்டாகும் என்று எண்ணி உள்ளம் பதைபதைத்தாள்.

அரண்மனையிலிருந்து ஓர் இளைய வீரன் கோட்டும், கால் சட்டையும் தரித்துக் கொண்டு விரைந்து சென்று புலவருடைய பல்லக்கைத் தோளில் தாங்கிக்கொண்டு சென்றான்.

அப்பொழுது பல்லக்கு அசைந்தது. பல்லக்கு ஏன் அசைகிறது என்று பாவாணர் கேட்டார்.

பல்லக்குச் சுமப்பவர்கள் ''ஒரு புதியவன் வந்து பல்லக்கைச் சுமக்கிறான். அதனால் அசைந்தது'' என்றார்கள். புலவர் பல்லக்கை விட்டிறங்கி அந்த இளம் வீரனை உற்றுப் பார்த்தார். பாண்டிமா தேவி ஆண் வடிவில் வந்து பல்லக்கைத் தாங்கிச் சுமக்கிறார் என்று அறிந்து வியப்படைந்தார். அவர் கண்கள் குளமாயின.

''அம்மா! பாண்டிமா தேவி! பாக்கியவதியே! இந்த ஏழைப் புலவனுடைய பல்லக்கைத் தாங்கள் சுமக்கலாமா? இது முறையா?'' என்று பரிவுடன் கேட்டார்.

பாண்டிமா தேவி, ''என் கணவர் அரசாங்க வேலையின் மிகுதியினால் சங்கம் நிறுவும் பணியில் தாமதித்தார். தாங்கள் சீற்றம் அடையக் கூடாது. என்னையும் என் கணவரையும் வாழ்த்தி அருள வேண்டும்'' என்று கூறி வணங்கினாள்.

உடனே புலவர் அம்மையாருடைய குணங்களைப் புகழ்ந்து அடியில் வரும் பாடலைப் பாடினார்.

நேரிசை வெண்பா

உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பே
உமையாளுக்கிங்குண்டோர் ஊனம்—
உமையாள் தன்
பாகம் தோய்ந்தாண்டான் பலிக் குழன்றான்
பாண்டியன் நின்
ஆகம் தோய்ந் தாண்டான் அரசு.

''அதோ போறவரு எங்க தெருவுல சைல்ட் ஸ்பெஷலிஸ்ட்!''
''குழந்தை வைத்தியத்தில் கெட்டிக்காரரோ?''
''டாக்டர் இல்லே! கல்யாணமாகி எட்டு வருசத்துல ஒன்பது பிள்ளைகளைப் பெத்ததுல ஸ்பெஷலிஸ்ட்!''
-கிரிஜா மணாளன்





வட்டமேஜை

● '81' ஸ்பெஷல்: இறையுணர்வு, தமிழுணர்வு, கலையுணர்வு, இலக்கிய உணர்வு இத்துடன் புதுமை உணர்வும் கலந்து திகழ்கிறது.
விழுப்புரம் — கே. எஸ். குமார்

● பரபரப்பூட்டிய நாடகத்தை 'கல்கி'யில் படித்த பின்தான் எங்கள் தாகம் தணிந்தது. அருமையான நாடகம், தெய்விகமான வண்ணக் காலண்டர், போனஸாக உலகத் தமிழ் விழா சிறப்பு மடல் எல்லாவற்றுக்கும் மேலாக சுஜாதாவின் தொடர். தாங்க்ஸ் எ லாட்!
ஸ்ரீரங்கம் — ஆர். ஸ்ரீனிவாசன்

● அன்புள்ள வஸந்த் வஸந்த் — உன்
ஆராய்ச்சி பாயும் கண்கள்
இன்பமிகு பேச்சு — எனக்கு
ஈடில்லா இன்பம்
உனக்கொரு தனி நடை
ஊருக்கே அது தெரியும்
எனக்குப் பிடித்த உன்னை
ஏற்றிப் பார்க்கிறேன் கவிதையில்
ஐயமின்றிச் சொல்வேன்
ஒரு சொல்லில் வேண்டுமா
ஓராயிரம் வார்த்தைகள் போதுமா
ஔவைத் தமிழில் சொல்வேன்
அஃதே வளர்வாய் இனிதே!
திருச்சி — அழகிய மணவாளன்

● தே. பா. சட்டம் துஷ்பிரயோகமாகாது என்ற மத்திய அரசின் உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் தி. மு. க. மாநிலங்கள் அவையில் ஆதரவு கொடுத்தது. ஆனால் 'தமிழக அரசு தனது கோணங்கித்தனமான தவறுகளைச் சரிக்கட்ட, விவசாயிகள் தலைவரைக் கைது செய்தது அநீதி என்ற நோக்கில்தான் தமிழக அரசின் மீது தி.மு.க. புகார் சொன்னது. நீங்கள் தலையங்கத்தில் கிண்டல் செய்த விதத்தில் அல்ல!
வேலாயுதம்பாளையம் — எம். சம்பத்

[''கருக்குக் கயிற்றை எங்கள் கழுத்தைச் சுற்றி மாட்டலாம், ஆனால் இறுகக் கூடாது'' என்று சொல்வதற்கும் ''தே. பா. சட்டம் இருக்கலாம்; துஷ்பிரயோகமாகக் கூடாது'' என்று தி. மு. க. கூறுவதற்கும் வித்தியாசமில்லை. தே. பா. சட்டம் அத்தனை மோசமானது. ஜனநாயகப் பற்றுள்ள எவரும் அதற்கு ஆதரவு தர முடியாது. தமிழகத்தில் தே. பா. சட்டம் துஷ்பிரயோகமாவதாக கூப்பாடு போடும் தி.மு.க. அதன் கூட்டாளியான இ. காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதையும் கவனிக்கட்டும். —ஆர்.]

● காழியூர் எம். ஸ்ரீனிவாசாசாரியார் அவர்களது பதிலில் துணிச்சலும் 27 ஆண்டு காலம் நமக்கு நல்ல காலம் என்ற ஆறுதலும் கிடைக்கிறது.

ஆனாலும் முற்றிலும் மாறுபட்ட மற்றவர் கூறும் பலன்களைப் படிக்கும்போது ஜோசியத்தை எந்த அளவுக்கு நம்புவது நல்லது என்ற விளக்கமும் கிடைத்து விட்டது!
மதுரை — டி. ஆர். அலமேலு

● தண்ணீர் தண்ணீர்! நாடகமா சார் அது? உருப்படாத திட்டங்களைத் தீட்டி மக்கள் வரிப் பணத்தை வீணடிக்கும் 'அரசாங்கத்துக்குக் கொடுத்த சாட்டையடி!
சென்னை-33 — எஸ் கோபாலன்

● தங்கள் இதழில் நாடகம் வெளியான அன்று இங்கு 'தண்ணீர் தண்ணீர்' ஏற்பாடு செய்திருந்தோம். ! கலைஞர்கள் அத்தனை பேரும் வந்து விட்டார்கள். ஆனால் காட்சி அமைப்புக்கு வேண்டிய பொருட்கள், மேடை அமைப்புக்கள், விவசாயிகள் போராட்டம் காரணமாய் லாரியில் வந்து சேரவில்லை. ஆயிரக் கணக்கான ரசிகர்களை எப்படிச் சமாளிப்பது? காய்ந்த கோரைப் புற்களைக் கொண்டு வரச் செய்து 'கோமல்' சொன்னது போல் குடிசை 'கட் அவுட்'களை அவசரம் அவசரமாக உருவாக்கினோம். நாடகத்தைச் சரியான நேரத்தில் துவக்கி ரசிகர்களின் ஏமாற்றத்தைத் தவிர்த்தோம்.
சிறுமுகை — கலைக் கண்ணன்

● நட்சத்திர சிறுகதைகள் நான்கும் நான்கு மணிகள்! அதில் வைர மணியாக ஒளிர்வது மலர் மன்னனின் 'மிருகம் தெய்வமாகிறது' கதைதான்!
வீரபாண்டி — வதிலை அன்புச் செல்வன்

● ''மதுவிலக்குக்கு முதலைக் கண்ணீர்'' கார்டூன் ரசித்தேன்

தற்போதைய பர்மிட் முறையின்படி சேலம், சொர்ணபுரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் ஒரு மாத உயர் ரகச் சாராய விற்பனைத் தொகை எவ்வளவு தெரியுமா? ரூபாய் நாலரை லட்சம்! அப்படியிருக்க, மதுவிலக்கை மேலும் தளர்த்தத் தமிழக முதல்வர் நினைக்க வேண்டாம்! தற்போதைய நடைமுறையை மாற்றி, மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்குவதைப் பற்றி வேண்டுமானால் சிந்திக்கட்டும்!
கெங்கவல்லி — இ. முருகவேள்

வெந்து தணிந்த காடுகள்

11

சற்று நேரத்துக்குப் பின் அருண் கேட்டான் ''ரமேஷ் உன்னிடம் உனக்குள்ள ஈடுபாடுகள் குறித்துப் பேசினதுண்டா?''

''ரமேஷ் அப்படி என்னிடம் பேசினதில்லே ஆனா அதே சமயம் அவர் அவரோட 'பர்ஸனாலிட்டி'யை என்பேரில 'இம்போஸ்' செய்யவுமில்லே.. ஹி வாஸ் ஜஸ்ட் எ கலர்லெஸ் பர்ஸன். எனக்கு விவரம் தெரிஞ்ச வயசிலே கல்யாணம் ஆயிருந்தா நான் ரமேஷைக் கல்யாணமே செஞ்சுண்டிருக்க மாட்டேன்'' என்றாள் ராதிகா.

''ஒருவேளை கல்யாணமே செஞ்சிண்டிருக்க மாட்டே.''

''தட் ஈஸ் ஆல்ஸோ பாஸிபில்... கல்யாணத்திலே, ஒரு ஆணோ பெண்ணோ, தன்னோட சுதந்திரத்தைப் பறி கொடுக்கணும்னு இந்த ஸிஸ்டமே டோட்டலி ராங். விம்மி தன்னோட சுதந்திரத்தைப் பறி கொடுத்ததாகத்தான் நினைச்சிருக்கணும். உங்களுக்காகப் பிடிக்காத விஷயங்களை யெல்லாம் பிடிச்சதா பாவனை பண்ணிண்டு, இத்தனை வருஷமா நடிச்சிருக்கிறதுன்னா அது எவ்வளவு பெரிய 'ஸ்ட்ரெயின்'! இனிமே நடிக்க முடியாதுங்கற நிலை வந்தபோது, அவ எது தன் மனசுக்குச் சரின்னு பட்டதோ அப்படி நடந்திண்டிருக்கா. நான் அவளைக் குத்தம் சொல்ல மாட்டேன்.''

அருண் கோபத்துடன் எழுந்திருந்தான். ''திஸ் ஈஸ் நான்ஸென்ஸ். அரை குறைப் படிப்புதான் நம்ம பெண்களை அடியோட கெடுத்துடுத்து. என்னோட அப்பா அம்மா சந்தோஷமா இல்லியா? பெண்களோட சுதந்திரம் அது இதுன்னு சொல்லித்தான் நம்ப சமூகமே சீரழிஞ்சு போயிண்டிருக்கு. ஃப்ரீடம் ஃபார் வாட்? எவனோட வேணுமானாலும் போகலாமா?''

''மிஸ்டர் அருண், இது ஏன் உங்களுக்கு நேத்தி ராத்திரி தோணலே?'' என்று புன்னகையுடன் கேட்டாள் ராதிகா.

''இதுக்கு நான் மட்டுமா பொறுப்பு?''

''நானும்தான் பொறுப்பு. இல்லேன்னு சொல்லலே... ஆனா எனக்கு 'ஹிபாக்ரிஸி' இல்லே. இதை நீங்க புரிஞ்சுக்கணும். விம்மி அந்த ஆர்ட்டிஸ்ட் தாமோதரன் வீட்டுக்குப் போனபோது என்ன நடந்ததுன்னு கேட்க உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கு? ஆம்பிளைக்கு ஒரு சட்டம், பொம்மனாட்டிக்கு ஒரு சட்டமா?''

இந்திரா பார்த்தசாரதி



''விம்மி வீட்டிலே நேத்தி ராத்திரி இருந்திருந்தா நீ என்னை இப்படிக் கேட்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது. 'ஐ வாஸ் ப்ரெனட் ஆஃப் மை காரெக்டர். என்னை இப்படிப் பலவீனமாக்கியதே அவள் தான். ஐ ஹேட் ஹர்...'' என்று கூறிக் கொண்டே அறை வாசலை நோக்கிச் சென்றான் அருண்.

''அருண்.. ப்ளீஸ் ஸிட் டவுன். நிதானமா யோசனை பண்ணுங்க.. 'ஸெக்ஸ் விஷயத்திலே மட்டும்தான் காரெக்டரா? கம்பெனி லாபத்துக்காக நாம எத்தனையோ செய்யறமே, அதுக்கும் காரெக்டருக்கும் சம்பந்தமில்லையா? சரி, தப்புங்கறதுக்கெல்லாம் ஆப்ஸெல்யூட் ஸ்டாண்டர்ட் எதுவும் கிடையாது. சந்தர்ப்பத்தையும் அவசியத்தையும் பொறுத்துத்தான் சரி, தப்புன்னு தீர்மானம் பண்ணணும். இந்தக் காலத்திலே இப்படித்தான் இருக்க முடியும்.. வியாபார விஷயத்திலே காலத்துக்கு ஏத்த மாதிரி உங்களாலே அனுசரிக்கப் போக முடியறது. தனிப்பட்ட வாழ்க்கையிலே பல நூற்றாண்டு பின் தங்கியிருக்கீங்களே?'' என்றாள் ராதிகா.

அருண் அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கூறுவது போல் அவன் 'ஹிபாகிரிட்'தானா? நேற்றிரவு நடந்ததற்கு அவள் மட்டுமா காரணம்? அவனுடைய அடி மனத்தில் இத்தகைய சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டு ஓர் உணர்வு ஒளிந்து கொண்டிருக்கவில்லை என்று அவனால் நிச்சயம் சொல்லமுடியுமா? விம்மி வீட்டில் இல்லை என்பதைச் சொல்ல அவன் ராதிகாவின் அறைக்கு ஏன் போயிருக்க வேண்டும்? அதுவும் அந்த நேரத்தில்?

அவனுக்கு இப்பொழுது பெரிய அரசாங்க கார்ப்பரேஷனில் முக்கிய பொறுப்பு வகிக்கும் வெங்கடேசன் ஞாபகம் வந்தது. அவருக்குக் குடிக்க வேண்டும் என்ற ஆசை எப்பொழுதுமே உண்டு. ஆனால் தாமாகக் குடிக்க மாட்டார். மற்றவர்கள் வற்புறுத்தித் தம் விருப்பத்துக்கு மாறாகக் குடிப்பது போல் குடித்தால்தான் அவருக்குத் திருப்தி.

அவனுக்கும் வெங்கடேசனுக்கும் என்ன வித்தியாசம்?

ராதிகா சொல்வது போல் விம்மி நேற்றிரவு என்ன செய்து கொண்டிருந்தாள் என்று கேட்பதற்கு அவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? விம்மிக்கு அவ்வளவு கோபம் வர என்ன காரணம்? 'அப்புறம் அங்கே என்ன நடந்ததோ, யாருக்குத் தெரியும்?' என்று அவன் கேட்டதுதான் அவள் சினத்தைத் தூண்டியது. அவள் அங்கு அவர்களுடன் பேசிக் கொண்டுதான் இருந்தாள் என்பது உண்மையானால், அவன் கேள்வி அவன் சிறுமையை வெளிப்படுத்தி விட்டது. அவள் அவன் சிறுமையைக் கண்டு சீறியிருக்கிறாள். அவன் அவ்வாறு கேட்டிருக்க வேண்டாமென்று இப்போது தோன்றுகிறது.

அவள் வீட்டை விட்டுப் போவதாகக் கூறினாளே, எங்கே போகக் கூடும்? அவள் அம்மாவும் இங்கில்லை; அவளுக்குத் திருமணமானவுடன் ஊரைப் பார்க்கப் போய்



விட்டான். ஒருவேளை இவளும் ஊருக்குப் புறப்பட்டு விட்டாளோ? இல்லாவிட்டால் அந்த ஆர்ட்டிஸ்ட் வீட்டுக்குப் போயிருந்தால்? அவன் யார், எங்கே இருக்கிறான் என்ற விவரங்கள் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அவன் பெயர்... எஸ்... தாமோதரன்.

''இந்த ஆர்ட்டிஸ்டைப் பத்தி நீ கேள்விப்பட்டிருக்கியா? அவன் பெயர் தாமோதரன்...'' என்று கேட்டான் அருண்.

கோபத்துடன் வாசலை நோக்கிச் சென்றவன், அவள் கூறியதைக் கேட்டு, சிறிது நேரம் சிந்தித்து விட்டு, மிகவும் நிதானமான குரலில் இவ்வாறுகேட்கிறான் என்றால், மனச் சமாதானமடைந்த நிலையில் பிரச்னையை அவன் மறு பரிசீலனை செய்கிறான் என்று ராதிகாவுக்குத் தோன்றியது.

''எனக்குத் தெரியாது. கலையைப் பொறுத்த வரையில் எனக்கும் உங்க மாதிரி தான் இன்ட்ரெஸ்ட்!''

''விம்மி ஒருவேளை அவன் வீட்டுக்குப் போயிருந்தா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்து 'ஆஷ்-ட்ரேயில் சிகரெட் துண்டைப் போட்டான் அருண்.

''அங்கேதான் போயிருப்பான்னு நீங்க நினைக்கிறீங்களா?''

''வேறே எங்கே போயிருக்க முடியும்? இல்லேன்னா ஊருக்குப் போயிருக்கலாம்... பட்... இவன் எங்கே இருக்கான்னு எனக்குத் தெரியாது...''

''அவன் அட்ரெஸைக் கண்டு பிடிக்கிறது கஷ்டமில்லே. 'லலித் கலா அகெடமி'க்கு போன் பண்ணா அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம்.''

''இப்போ ஆபீஸ்லே யாரும் இருக்க மாட்டாங்களே... 'டைரக்டர்' வீட்டுக்கு போன் பண்ணா அவருக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்குமோ? இவன் ஒரு பெரிய ஆர்டிஸ்டா இருந்தா தெரிஞ்சிருக்கலாம்... ஷல் வி ட்ரை?....''

''ட்ரை பண்ணறதிலே தப்பு ஒண்ணுமில்லே....'' என்று சொல்லிக் கொண்டே ஃபோன் அருகே சென்றாள் ராதிகா.

அருண் டைரக்டரியை எடுத்து லலித கலா அகெடமி இயக்குநரின் நம்பரைத் தேடினான்.

ஸ்டுடியோ செட்டில்

படாதிபதி: அந்தப் பாம்பைப் பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்கு!

டைரக்டர்: ஏன்?

படாதிபதி அது 'படம்' எடுத்தா கூட நாலு பேர் பார்க்கிறாங்க! நாம படம் எடுத்தா ஒரு பய கூட பார்க்கமாட்டேன்கிறானே! -வெ. சீதாராமன்



ராதிகா இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே போனை எடுத்தாள்.

அருண் நம்பரைச் சொன்னதும் அவள் டயல் செய்தாள். அவருடைய பெயரை ஊர்ஜிதம் செய்து கொண்டு தாமோதரனைப் பற்றி விசாரித்தாள்.

''தாமோதரன்! க்ரீன் பார்க்கில் இருக்கிறான் என்று நினைக்கிறேன். வீட்டு எண் தெரியாது. மிகவும் அவசரமா?''

''ஆமாம்...''

''எங்களுடைய புரோகிராம் ஆபீசர் நம்பரைத் தருகிறேன். அவருக்கு போன் செய்யுங்கள். அவருக்குத் தெரிந்திருக்கும்'' என்று சொல்லிவிட்டு, சிறிது நேரம் கழித்து நம்பரைக் கொடுத்தார்.

''அவருடைய வீட்டு நம்பரா இது?'' என்று கேட்டாள் விம்மி.

''இல்லே. ஆபீஸ் நம்பர். இப்பொழுது சர்வதேசக் கண்காட்சி நடக்கிறது. அவர் ஆபீஸில்தான் இருப்பார். மிஸ்டர் தாமோதரனும் ஒருவேளை 'ரவீந்திர பவனில்' இருந்தாலும் இருக்கலாம். அவருடைய படங்களும் கண்காட்சியில் இருக்கின்றன...''

அவர் போனை வைத்து விட்டார்.

ராதிகா ரவீந்திர பவனுக்குப் போன் செய்தாள்.

தாமோதரன் வீட்டு முகவரி கிடைத்தது. தாமோதரன் அங்கில்லை. அன்று வரவேயில்லை என்ற தகவலும் கிடைத்தது.

அருண் ராதிகா எழுதிக் கொடுத்த அந்தத் துண்டுக் காகிதத்தைப் பையில் போட்டுக் கொண்டான்.

''முதல்லே வீட்டுக்குப் போயிட்டு அப்புறம் அங்கே போறேன். விம்மி வீட்டிலேயே இருந்துண்டு இப்படிச் சொன்னா, நான் எப்படி 'ரியாக்ட்' பண்றேன்னு பார்க்கிறதுக்காகச் சொல்லியிருந்தா...?'' என்றான் அருண்.

''அவ வீட்டிலேயே இருந்தா என்ன செய்வீங்க?''

''அப்படின்னா அவ தானும் அளவுக்கு மீறிப் பேசினதுக்கு வருத்தப்படறான்னு அர்த்தம்.''

''அப்போ, அந்த ஆர்ட்டிஸ்ட் வீட்டிலே ஒரு தப்புக் காரியமும் நடந்துடலேன்னு நம்பறீங்க, அப்படித்தானே?'' என்று புன்னகையுடன் கேட்டாள் ராதிகா.

அருண் பதில் கூறாமல் அறையை விட்டு வெளியே போனான்.

''ஆர் இஸ் இட் யுவர் விஷ்?'' என்று அவனைக் கேட்டுக் கொண்டே பின்தொடர்ந்தாள் ராதிகா.

அருண் அவளைச் சிறிது எரிச்சலுடன் திரும்பிப் பார்த்தான்.

''லுக்... அப்படி ஏதாவது தப்புக் காரியம் நடந்திருந்தாலும் — அது தப்பா சரியாங்கறது வேறே விஷயம் — அதைப் பத்தி கேட்கக் கூடிய நிலையிலே நீங்க இல்லேங்கிறதையும் ஞாபகம் வச்சுண்டா நல்லது.''

''உலகத்திலே இருக்கிற எல்லாப் பெண்களும் உன்னைப் போலத்தான் இருப்பாங்கன்னு நினைக்கிறியா?''

''இருக்கணும்னு நினைக்கிறேன்!''-சோபாவில் உட்கார்ந்தாள் ராதிகா.

காரில் போய் உட்கார்ந்ததும் அருண் யோசித்தான்... ஏதாவது அந்த 'ஆர்ட்டிஸ்ட்' வீட்டில் நடந்திருந்தால்தான் ராதிகாவுக்குத் திருப்தியாக இருக்கும் போலிருக்கிறது. விம்மியும் அவனைப் போல் ஒரு பெண்தான் என்ற மனச் சமாதானத்துக்காகவா, அல்லது அப்படி நடந்திருந்தால், அவன் அதை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறான் என்று அறிந்துகொள்வதற்காகவா?

அருண் வீட்டுக்குச் சென்று மணியை அழுத்தினான். கதவைத் திறந்தவள் பூர்ணிமா.

விம்மி வீட்டில் இல்லை. அவள் அறைக்குச் சென்று பார்த்தான். 'ட்ரெஸ்ஸிங் டேபிளில் எல்லாச் சாமான்களும் அப்படியே இருந்தன. உடை வைக்கும் அலமாரியைத் திறந்தான். அவளுடைய பட்டுப் புடவைகள் ஒழுங்காக மடித்து வைக்கப் பட்டிருந்தன.

தாமோதரனை எத்தனை நாட்களாக விம்மிக்குத் தெரியும்? அவள் அவனைப் பற்றிப் பேசியதே இடையாது.. ஏன் பேசவில்லை? இந்த உறவு முறையைப் பற்றி அவளுக்குக் குற்ற உணர்வு இருந்திருக்குமோ? யோசித்துப் பார்க்கும்போது, அவள் தான் படங்கள் வரைவது பற்றிக்கூட அவனிடம் சொன்னதில்லை... ஏன்?... அவன் அவளுக்கு எதில் ஈடுபாடு என்று எப்போதாவது அறிய முயன்றிருக்கிறானா? 'கல்யாணமாகி இத்தனை வருஷமாகிறது. அவள் பெயிண்டிங் பண்றான்னு கூட உங்களுக்குத் தெரியாதா?' என்று ராதிகா கேட்டது அவன் நினைவுக்கு வந்தது.

அருண் மெல்லச் சென்று 'செல்லாரை'த் திறந்து 'விஸ்கி' பாட்டிலை எடுத்தான். அலமாரியிலிருந்து ஒரு கண்ணாடித் தம்ளரை எடுத்து அதில் விஸ்கியை ஊற்றினான். 'வார்த்' ஃப்ரிட்ஜிலிருந்து 'ஐஸ் - ட்ரே'யை எடுத்தான். 'ஆன் தி ராக்ஸ்'.

அவன் கையில் தம்ளருடன் சோபாவில் உட்கார்ந்தான்.

'விஸ்கி' குடித்ததாகச் சொன்னவள் ஏதாவது நடந்திருந்தால் நிச்சயம் சொல்லியிருப்பாள். ஒன்றும் நடக்காதபோது, அவள் மீது அவன் சந்தேகம் கொண்டதுதான் அவளுடைய கோபத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

பூர்ணிமா அங்கு வந்தாள். தாமோதரன் எப்படி இருந்தான் என்று இவளைக் கேட்டால் தெரியும்.

''சாஹேப்... 'சப்ஜி' என்ன செய்வது?'' என்றாள் பூர்ணிமா.

''நேற்று அந்த ஓவியன் வந்தபோது அவனைச் சரியாக நீ பார்த்தாயா?''

''பார்த்தேன்.''

''அவன் எப்படி இருந்தான்?''

''குள்ளமாக. கோணல் மாணலாக இருந்தான். முதுகில் ஒரு பெரிய கூன். மெம் சாஹப்தான் சொன்னார்கள் அவன் ஒரு பெரிய ஓவியன் என்று...''

எதிர்பாராத அதிர்ச்சி.

''கனவு கண்டு சொல்கிறாயா, நிஜமாகவே நீ பார்த்தாயா?''

''அவரைப் பார்க்கும் போது கனவு காண்பது போல் இருந்தது. பகவான் ஏன் இவ்வளவு அசிங்கமாக ஒரு மனிதப் பிறவியைப் படைத்தார் என்று கூட நான் யோசித்தேன்.''

அருண் ஒரே மடக்கில் தம்ளரிலிருந்ததைக் காலி செய்துவிட்டு எழுந்தான். மை காட்! விம்மியின் கட்டுக் கடங்காத கோபம் இப்பொழுது அவனுக்குப் புரிந்தது... கையில் ஸுட்கேஸுடன் வாசலில் நிற்கும் விம்மியைத் தாமோதரன் ஆச்சர்யத்துடன் வரவேற்பது போன்றகாட்சிஅவன் மனத்திரையில் பளிச்சிட்டது.

''நான் வெளியே போகிறேன். கதவைத் தாளிட்டுக் கொள்.. எனக்குச் சாப்பாடு வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே கார்ச் சாவியை எடுக்கத் தன் அறையை நோக்கிச் சென்றான் அருண். (தொடரும்)

வம்பன்  வெங்கு

மருகுணு :
எந்தக் கட்சியிலும் நான் சேரமாட்டேன்.
வெங்கு :
ஏனெனில் அவரை யாரும் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை.

செய்தி :
1980 இல் வெளியான 125 தமிழ்ப் படங்களில் 45 படங்களுக்கு 'ஏ' முத்திரை குத்தப்பட்டு வெளிவந்தன.
வெங்கு :
மற்றவை முத்திரை குத்தப்படாமல் வந்த 'ஏ' படங்கள்...

செய்தி :
தமிழக அரசுக்கு சிவ. இளங்கோ **கோரிக்கை**
வெங்கு :
பல சலுகைகளைக் **கோரி கை** நீட்டியிருப்பாரோ?

செய்தி :
ஒரு நகராட்சியில் 200 'பைல்'களைக் காணவில்லை.
வெங்கு :
அது எவ்வளவோ தேவலாம். பல நகரங்களில் நகராட்சிகளையே காணவில்லை!

ஆர். வி. :
புத்தாண்டில் பொருளாதாரம் நன்றாக இருக்கும்.
வெங்கு :
'யாருக்கு?' என்பதுதான் கேள்வி.

— விருச்சிக ராஜ்


ஸ்பிக் கூறும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

கழனியிலே விளைச்சல் பொங்க—
அந்தக் களிப்பினிலே இதயம்
பொங்க—மங்கலத்தினிலே
பால்பொங்கும் வேளையிலே—
உழவர் நலத்தினிலே நாட்டம் கொண்ட
ஸ்பிக் அளிக்கும் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்.

SPIC

ஸதர்ன் பெட்ரோகெமிகல்
இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பொரேஷன்,
லிமிடெட்.

"ஸ்பிக்" சென்டர்,
97, மவுண்ட் ரோடு,
சென்னை-32.





பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட...




வரப்புயர நெல் உயரும்
உழவர் வாழ்வு உயரும்
நாட்டின் வளம் உயரும்!

நாட்டின் நலம் பெருக,
வீட்டின் நிலை உயர
உழவர் மனம் மகிழ,

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி
எடுத்து பாதுகாப்பு பெறுவீர்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்

EP-LIC-SZ-5/80



வனவாசம் கண்ணதாசன்

9. தேசிய வெள்ளம்

பர்மிய ராணுவத்தில் பெரும் பதவியில் இருந்தவர் நாராயணசாமி நாயுடு. ரங்கூனில் அவர் இருக்கும்வரை அவருக்கும் இன்றைய பர்மிய அதிபர் நீவினுக்கும் கடுமையான போட்டி இருந்தது.

நீவினை விடப் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர் நாராயணசாமி நாயுடு. அவருக்குச் சொந்த ஜாதியிலும், பர்மிய ஜாதியிலும் இரண்டு மனைவியர் உண்டு. அவர் தான் அவனையும் பீம்சிங்கையும், விசுவநாதனையும் விருந்துக்கு அழைத்தவர்.

காலையில் உட்லண்ட்ஸ் ஓட்டலில் எழுந்த போது, 'அண்ணே, விருந்துக்குப் போகணுமா? நாம இங்கேயே சாப்பிடலாமே?' என்று கேட்டான் தம்பி விசுவநாதன். முடியாது என்று அவனையும் அழைத்துக்கொண்டு விருந்துக்குப் புறப்பட்டான் . அவன்.

நல்ல நண்பர்கள் இப்படித்தானே கிடைக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவு புகழ் வரும்வரை அவர்களை ரயிலிலும், பஸ்ஸிலும் விமானத்திலும் தான் பிடிக்க வேண்டியிருக்கிறது. பேர் பெற்ற மனிதனை பிறகு புதிய நண்பர்கள் வீடு தேடி வருகிறார்கள்.

உட்லண்ட்ஸ் ஓட்டலில் பாடல் எழுதும் வேலை அபாரமாக நடந்தது. அரை மணி நேரத்துக்கு ஒரு புதிய கட்டிடம் எழுந்தது. இளம் இரத்தத்தின் இனிமையான வேகத்தில் பாடல்கள் மிதந்து வந்தன. தம்பி விசுவநாதன் அவ்வளவு துரிதமாக இசையமைத்தான். அந்த வேகத்துக்கு அவனும் ஈடு கொடுத்தான். இதில் புதுமை என்ன இருக்கிறது?

சிந்தனையே சாகித்தியமாக மிதந்த காலம் அது. வாழ்க்கைச் சாலையின் குறுகலான பயணத்தில் சில பிரகாசமான விளக்குகள் அவை.

சரித்திரம் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும் என்பார்கள். அவனது சரித்திரமும் அப்படித்தான்.

இந்தக் காலங்களில் அவன் மிகவும் நம்பிய நண்பர்களில் சிலர் நாணயம் கெட்டவர்களாக நடந்து கொண்டார்கள். நாகரிகம் கருதி அவர்கள் பெயரை வெளியிட முடியவில்லை.

கட்சிக்கும் அவன்தான் செலவழித்தான். அவர்களது சொந்த வாழ்க்கை, அச்சகம், ஆகியவற்றுக்கும் அவனே பணம் கொடுத்தான். அதற்காக விசாலாட்சி பிலிம்ஸிலிருந்த 5450 எண்ணுள்ள காரை ஈடு போட்டுப் பணம் வாங்கினான்.

வாங்கிய அச்சகத்தின் விலை 12,000 ரூபாய். அதற்கு அவன் கொடுத்தது 1,900 ரூபாய். மெஷின் வாங்கியவரின் முதலீடு வெறும் 100 ரூபாய்! அவன் கொடுத்த பணம் அரோகரா. கடைசியில் அந்த நண்பர் தன்னிடமிருந்த மூன்று சக்கர மோட்டார் ஒன்றைக் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துக்கொள்ளச் சொன்னார். அது 3000 ரூபாய்க்கு விலை போயிற்று. இதை யாரிடம் வெளியிடுவது?

நம்பியே தி.மு.க.வை விட்டு வெளி வந்தாகி விட்டது. இப்போது நண்பர்கள் மீது குற்றம் சொன்னால் கருணாநிதி சிரிக்க மாட்டாரா? தன்னால் சம்பாதிக்க முடியும் என்ற தைரியத்தில் அவன் அந்தப் பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அரசியலிலோ, தனி வாழ்க்கையிலோ, சில கவலைகள் நேரும்போது ஏதாவது ஒரு சம்பவம் நிகழ்ந்து அவனை உத்வேகப்படுத்தும்.

அந்த நேரத்தில் அப்படி நிகழ்ந்த சம்பவம், இந்தியாவையும், உலகத்தையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதாகும்.

கவலையையே கண்டறியாத ஜவாஹர்லால் நேருவையே கலங்க வைத்த ஒரே நிகழ்ச்சி அதுதான்.

ஆம்! சீனப் படையெடுப்பு. ஒரு நாகரிகமற்ற நாட்டின் பின்புறத் தாக்குதல்.

உலக அரங்கில் அது ஒரு காட்டுமிராண்டி நிகழ்ச்சி.

அதனால்தான் ''கம்யூனிஸ்ட் அகிலம்'' என்பதையே உடைத்துக் கொண்டு சோவியத் யூனியன் ஆர்வத்தோடு நம்மை ஆதரிக்க முன்வந்தது.



அருள்வாக்கு

அருள்பெற வழி

வாழ்க்கையில் நல்ல நிலைக்குவரவேண்டும் என்பது பிறருக்கெல்லாம் உபகாரம் செய்வதற்காகத்தான். நிறையச் சம்பாதித்து அதை யெல்லாம் நமக்காகவே செலவழித்து விட்டால் ஸ்வாமி சந்தோஷப்பட மாட்டார். அவருக்கு நாம் எப்படிக் குழந்தையோ அதே மாதிரி ஏழைகள், நோயாளிகள் அநாதைகள் எல்லோரும் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு நாம் உபகாரம் பண்ணாமல் நமக்கே செலவழித்துக்கொண்டால் ஸ்வாமி அதற்கப்புறம் நமக்கு அருள் செய்ய மாட்டார்.

அதனால் நீங்கள் எல்லோரும் உலகத்துக்கு உங்களால் முடிந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும். அதில் உங்களுக்கு ஒரு பெரிய சந்தோஷமும் திருப்தியும் உண்டாகும். நீங்களே சாப்பிடுவதை விட ஓர் ஏழைக்குச் சாப்பாடு போட்டால் அதில் உங்களுக்கு இன்னும் ஜாஸ்தி இன்பம் உண்டாகும். நாம் பிறந்திருப்பதே மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் என்று தெரியும். இப்படி உங்களால் முடிந்த உதவியைச் செய்து நீங்கள் மற்றவர்களின் மனத்தைக் குளிர வைத்தால் அதைப் பார்த்து ஸ்வாமியும் உங்களிடம் மனம் குளிர்ந்து நிரம்ப அருள் செய்வார்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சீன ஆக்கிரமிப்பு இந்தியாவுக்கு எப்படி அதிர்ச்சியோ அப்படியே சோவியத் யூனியனின் போக்கு சீனாவுக்கு அதிர்ச்சியாயிற்று.

தங்கு தடையின்றி அஸ்ஸாம் எண்ணெய் வயல்கள் வரை வந்துவிட்ட சீனப் படை எவ்வகை எதிர்ப்பும் இல்லாதபோதே பின்வாங்கியது அதற்காகத்தான்.

காலங் காலங்களுக்கு சோவியத் யூனியனை நாம் மறக்க முடியாது.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை காஷ்மீர் நம்மைச் சேர்ந்ததே என்று வாதாடும் ஒரே நாடு சோவியத் யூனியன்.

சிதறிக் கிடந்த இந்திய மக்களை ஒற்றுமைப்படுத்த சீன ஆக்கிரமிப்பு பயன்பட்டது. இது தீமையில் விளைந்த நன்மை.

இந்தியா 'ஏக இந்தியா'வாக எழுந்து நின்றது.

அன்றிரவு வானொலியில் ஜவாஹர்லால் நேரு பேசிய பேச்சு மறக்க முடியாத ஒன்றாகும்.

எல்லாமாகச் சேர்ந்து அவனது ரத்தத்தில் வெறியூட்டின. சீன எதிர்ப்புக் கவிதைகள் மளமளவென்று பிறந்தன.

சீனாக்காரன் பின்வாங்கியதும் சோவியத் யூனியனைப் புகழ்ந்து கவிதைகள் பிறந்தன.

பண்டித ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாள் நவம்பரில் வந்தது. ராஜாஜி ஹாலில் ஒரு கவியரங்கம்.

தேசிய வெள்ளத்தில் அவனது முதல் கவியரங்கம் என்பதாக நினைவு.

திரு எஸ்.எஸ். வாசன், திருமதி சௌந்தரா கைலாசம், திரு சின்ன அண்ணாமலை உட்படப் பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

கவிஞர்கள் எல்லோரும் நின்று கொண்டு பாடினார்கள். அவன் மேடையில் உட்கார்ந்து பாடினான். கவிஞன் நிற்கலாமா? அரசனையே நிற்கவைத்த கவிஞன் உட்காருவதல்லவா மரபு!

அங்கேதான்,

'போதி மரப் புத்தன்
போய்விட்டான் என்றிருந்தோம்
பாதிவழி போன அவன்
பண்டிதராய்த் திரும்பி வந்தான்'

என்ற கவிதை பிறந்தது.

இந்த வரிகளைப் பாடும்போது வாசன், அண்ணாமலை, சௌந்தரம் உட்பட எல்லோரும் அழுது விட்டார்கள்.

கவிதை பெரிதல்ல, சூழ்நிலை அப்படி.

காலத்தால்தானே சில கவிதைகள் சாகா வரம் பெறுகின்றன.

''நேரத்தால் எழுந்து நிற்பது'' என்பார்கள். அப்படி நின்றான் அவனும்.

பணம் எவ்வளவு போனாலும் கவலைப்படாமல், கவிதை, பாட்டு, தேசியம் என்ற உணர்ச்சிகளில் அவன் நீந்தினான்.

அது ஒரு சுகமான நீச்சல்.

நேருவின் மீது மட்டற்ற பாசமும் அன்பும் அவனுக்கு ஏற்பட்டன. இப்படி ஒரு மனிதன் உலகத்தில் பிறக்கவே முடியாது என்று தோன்றியது.

''அது உலகத்தின் பொற்காலம்.''

அமெரிக்காவில் கென்னடி, சோவியத்தில் குருஷேவ், இந்தியாவில் நேரு.

அவனது கவிதைத் தொகுப்பை இன்று படிக்கும்போது அந்தக் காலத்தின் தேசிய உணர்ச்சி எவ்வளவு இயற்கையானது என்பதை அவனே உணர முடிகிறது. காலத்தைச் சற்று முன் பின்னாகச் சொல்கிறேனோ என்று தோன்றுகிறது.

இந்த ஆண்டில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்டதாக அண்ணா அறிவித்தார்.

அவனது கவிதை அதிலும் புகுந்து விளையாடிற்று. எந்தப் பிரிவினைக் கொள்கை காலத்துக்கும், நாட்டுக்கும் ஒத்து வராது என்று அவனும் சம்பத்தும் வாதாடினார்களோ, அதையே அண்ணா ஒப்புக்கொண்டதுபோல் ஆகிவிட்டதல்லவா?

அது காலத்தால் நிற்கக் கூடிய கவிதையோ இல்லையோ, அண்ணாவே படித்து ரசித்த கவிதை அது.

இதனைக் காஞ்சிபுரம் கமிஷனர் ராஜகோபால் வெளியிட்டார். அது மட்டுமல்ல: அதே நேரத்தில் திரு க. வேழவேந்தன் கவிதைகளை வெளியிட்டு செயிண்ட் மேரிஸ் மன்றத்தில் பேசிய அண்ணா அவர்கள் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்.

''தம்பி கண்ணதாசனின் கவிதைகளை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் எனக்குத் தமிழே தெரியாது என்று அர்த்தம்.''

—அண்ணாவின் பெருந்தன்மைக்கும் உயர்ந்த குணத்துக்கும் இது எடுத்துக்காட்டு. அவரை விட்டுப் பிரிந்த பிறகும் அவர் அவனிடம் அன்புள்ளவராகவே இருந்தார்.


அண்ணாவிடமிருந்து இத்தகைய பேச்சுக்கள் வரும்போதெல்லாம் அவனது புத்தி சபலப்படும். ஆனாலும் வறட்டுக் கௌரவமும், கருணாநிதியின் மேல் இருந்த ஆத்திரமும் அவனை மேலும் மேலும் அலையில் அகப்பட்ட காகிதமாகவே போக வைத்தன.

ஓரிடத்திலாவது நின்று, நிதானித்து, ஒரு நதியும் வேண்டாம் எனக் கரை ஏறியிருந்தால், பல இலக்குகளில் இருந்து அவன் மீண்டிருப்பான்.

என்ன செய்வது? டாக்டர் கெரிசன் சொன்னது பலித்தாகவேண்டுமே!

(வளரும்)

கம்பர்- ஒலி ஒளி காட்சி



வாலிபர்களிடமும், யுவதிகளிடமும் உள்ள சக்திக்கும் ஊக்கத்துக்கும் ஒரு வடிகாலாகப் பயன்படுகிற மாதிரி 'சின்மயா யுவ கேந்த்ரா ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. அதன் ஒரு முயற்சியாக ''கம்பர் ஒலி ஒளிக் காட்சி'' நடக்கவிருக்கிறது. கம்பன் பாடல்களுக்கு கே. வி. மகாதேவன் இசையமைத்துள்ளார். எஸ்.பி. பாலசுப்பிரமணியமும், வாணி ஜெயராமும் பாடியிருக்கிறார்கள். இரண்டரை மணி நேர நிகழ்ச்சி.

நிறையச் செலவாகுமே?

நிச்சயமாக, ஒரு நாடகம் மாதிரியே தயாரிப்பதால், பழைய காலத்து உடைகளே நிறையப் பணத்தை விழுங்கியிருக்கிறது. அப்புறம் விசேஷ மின்சார ஒளி விளக்குகள். இதற்கெல்லாம் லட்சக் கணக்கில் செலவாகிறது. பலர் நன்கொடை அளித்து உதவினார்கள் என்று நன்றி உணர்வுடன் கூறினார் சுவாமி சின்மயானந்தா.

பிப்ரவரி 20ந் தேதி தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் துவங்கும் இந்நிகழ்ச்சிக்கு மாணவர்களுக்கென குறைந்த கட்டணம் உண்டாம்.

இந்த நாட்டிய நாடகம் பிரம்மாண்டமான அளவில் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதனை சபாக்களிலும், நாடக அரங்கங்களிலும் போட முடியாது. பெரிய மைதானங்களில்தான் போட முடியும். ஒரே நேரத்தில் பத்துக்கும் மேற்பட்ட மேடைகள் அமைக்கப் பட்டிருக்கும். ஒவ்வொரு காட்சி முடிந்தவுடன் அடுத்த காட்சி கண்ணிமைக்கும்நேரத்தில் மற்றொரு மேடையில் காட்டப்படும். இதற்குள் அதற்கு அடுத்த மேடையில் காட்சி தயார். இதற்காக ஒரு நேரத்தில் குறிப்பிட்ட ஒரு மேடையில் மட்டுமே ஒளியினை ஃபோகஸ் செய்து காட்டும் மின் விளக்குகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இத்திட்டத்தினை முன்னின்று பொறுப்பேற்று நடத்துபவர் திருமதி பத்மா நரசிம்மன். அவர் கூறினார்:

''வட இந்தியாவில் துளசிதாஸர் என்றால் பட்டி, தொட்டிகளில் எல்லாம் தெரிந்திருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் கம்பர் தமிழ் இலக்கியம் படித்தவர்களுக்கு மட்டும் தான் உரியவராயிருக்கிறார். எல்லா இடங்களிலும் கம்பர் புகழ் பரவவேண்டும் எல்லா மக்களும் கம்பரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்தத் திட்டத்தைசுவாமிஜிவெளியிட்டார். அவர்விருப்பத்தை நிறைவேற்றும் பணியில் பங்கேற்க முடிந்த நாங்கள் அனைவரும் பாக்கியசாலிகள்.''

—தமயந்தி:ராம்குமார்






மேனியழகு மிளிர இயற்கை
உங்களுக்குத் தரும் சீதனம்
VEP
VEP
ஓர் அரசு நிறுவனத்தின் தரமிகு தயாரிப்பு
வேப்
வேப் சோப்பு, உங்கள் சருமம் உலர்ந்து சுருங்கிவிடாமல் பாதுகாத்து, மழ மழப்பாக இருக்க உதவுகிறது.
கொழிக்கும் நுரை, நீடிக்கும் நறுமணம், உங்கள் மேனியின் இளமையையும் அழகையும் பேணிக் காக்கிறது வேப்.
கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிமிடெட், கோழிக்கோடு.
வேப்
மேனிக்கு மெருகூட்டும்
இயற்கையின் கைவண்ணம்
FDS KSO 3383A TAM

கொசுவமூர்த்தியின் யக்ஞம்

—ஜே.எஸ்.ராகவன்





கொடிய கொசுக்களுடன் ஐம்பது நாட்கள் இருந்து காட்டுவதாகச் சவால் விட்ட கேசவமூர்த்தியைப் பேட்டி காணப் போயிருந்தேன். யக்ஞத்தை ஆரம்பித்த எட்டாவது நாள். பெரிய கொசுவலைக்குள் ஒரு மோடாவில் மெரீனா சிலை போல் உட்கார்ந்திருந்தார்.

''வணக்கம் கேசவமூர்த்தி. நச்சுப் பாம்புகளோடு நாட்கணக்கில் இருப்பேன் என்று தொகுதிக்கு ஒருவராகச் சவால் விட்டு வரும் இந்த நாளில் நீங்கள் இந்தப் பாழும் கொசுக்களைத் தேர்ந்தெடுத்தது ஏன்?''

''இப்போது என்னுடைய பெயர் கொசுவமூர்த்தி. இந்த வட்டாரத்து அன்பர்கள் மாற்றிவிட்டார்கள். 'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. 'கொசுக்கள் என்றால் தொடையும் நடுங்கும்' என்பது புதுமொழி. என்னைக் கேட்டால் 'பாம்பு அன்றே கொல்லும்'. ஆனால், கொசுக்கள் நின்று கொல்லும்'. எந்த விதத்திலும் கொசுக்கள் பாம்பை விடக் குறைந்தவை அல்ல.''

''கும்பகோணம், மேற்கு மாம்பலம், சைதாப்பேட்டை போன்ற கொசுத் திருத்தலங்களில் சைதையை நீங்கள் குறிப்பாகத் தேர்ந்தெடுத்ததற்குச் சிறப்பான காரணங்கள் உண்டா?''

''சைதையைச் சேர்ந்தவன் நான். பைலேரியா, மலேரியா, போன்ற 'யா'க்கள் மலிந்த ஏரியா எங்கள் பேட்டை. சென்னையில் ஒரு கொசப்பேட்டை இருக்கிறது. இல்லாவிட்டால் சைதாப்பேட்டை என்ற பெயரை கொசப்பேட்டையாக மாற்ற வேண்டும் என்று ஒரு போராட்டம் ஆரம்பித்திருப்பேன். எல்லாக் கொசுக்களும் இந்த மண்ணின் மைந்தர்கள். சைதைவாசிகள். இவைகள் ஙொய்ரென்று ஆரம்பிக்கும் 'சேர்ந்திசை' தான் காதைக் கூசுகிறது. பஞ்சை அடைத்துக் கொள்ளலாம் என்றால் விதிகள் அதை அனுமதிப்பதில்லை.''

''அப்படியா? வேறு ஏதாவது விதிகள் உண்டா?''

''நான் ஜட்டி மாத்திரம் போட்டுக் கொண்டு திறந்த மேனியாக உட்கார்ந்து இருக்க வேண்டும். கையையும் காலையும் கராத்தே ப்ளாக் பெல்ட் போல் காற்றில் வீசக் கூடாது. முக்கியமாகக் கைகளைத் தட்டக் கூடாது. பெரிசாக வாயைத் திறந்து நீர்யானைக் கொட்டாவி விடக் கூடாது.''

''ஏன்?''

''அப்படிச் செய்தால் சுற்றியுள்ள சில கொசுக்கள் செத்துத் தொலையும்.''

''தடுப்பு ஊசி ஏதாவது போட்டுக் கொண்டீர்களா? நாட் கணக்கில் பல்லாயிரக் கணக்கான கொசுக்களால் கடிக்கப்பட்டால் கைகால்கள் பெரிதாக வீங்கி விடாதா?''

''அந்தப் பயமே இல்லை. நான் பிறந்ததிலிருந்தே திறந்த சாக்கடைக்குப் பக்கத்தில் வசித்து வருகிறேன். குடித்து வரும் தண்ணீர் 'மனித குலம் தொடுவதற்கே லாயக்கு இல்லை' என்று சோதனைக் கூடங்களால் அத்தாட்சி செய்யப் பட்டது. அதனால் கொசுக்கள் என்னைக் கடித்தால் அவைகள் தான் செத்து மடியும். கைகால் வீங்குமே என்ற கவலை எனக்கு இல்லை. அதே போல் கர்வத்தினால் என் தலை வீங்கக் கூடாது என்பதில் 'கின்னிஸ்' உலக ரெகார்டு புத்தகக்காரர்கள் கண்ணும் கருத்துமாய் இருப்பதாகத் தெரிகிறது.''

''ஏன்? இந்தச் சாதனையை நீங்கள் வெற்றிகரமாக முடித்தால் உங்கள் பெயர் அந்தப் புத்தகத்தில் வராதா?''

''சந்தேகம்தான். யாரோ வத்தி வைத்திருக்கிறார்கள். 'என்னைச் சுற்றி இருக்கும் எல்லாக் கொசுக்களும் பெண் கொசுக்கள் என்பதற்கு அத்தாட்சி வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்கள்.''

''என்னது? பெண் கொசுக்களா?''

''ஆமாம். உங்களுக்குத் தெரிய நியாயமில்லை. கொசு வர்க்கத்தில், ஆண் கொசுக்கள் அப்பாவிகள். வாய் மூடிகள். பெண் கொசுக்களுக்குத்தான் மனிதரை வெடுக் வெடுக்கென்று கடிக்கும் 'ப்ரபோஸிஸ்' என்ற பகுதியைக் கடவுள் கொடுத்திருக்கிறார்.''

''அட ராமா, இந்தக் கொசுக்களை ஆணா, பெண்ணா என்று எப்படிக் கண்டுபிடிப்பீர்?''

''அதுதான் முழித்துக் கொண்டு இருக்கிறேன். இப்போதெல்லாம் ஆணா பெண்ணா என்று மனிதர்களிடமே இனம் கண்டு கொள்ள முடிவதில்லை. கொசுக்களை எப்படி இனம் பிரிப்பது என்று தெரியவில்லை.... ஹூம்... வேலாயுதம் மாதிரி சிவனே என்று பாம்புகளோடு நான் யக்ஞத்தைச் செய்திருக்கலாம். விதி!''

ஒரு கிரிக்கெட் போட்டி



✻ மீனாட்சி கல்லூரி ஆட்டக்காரர்கள் : நடுவில் உட்கார்ந்திருப்பது காப்டன் மாலினி. அவருக்கு இடது புறம் தோராணி

வைஷ்ணவா பெண்கள் கல்லூரி,
குரோம்பேட்டை

Vs.

மீனாட்சி பெண்கள் கல்லூரி,
கோடம்பாக்கம்

வைஷ்ணவா பெண்கள் கல்லூரி கிரிக்கெட் வீராங்கனைகளும், மீனாட்சி பெண்கள் கல்லூரி கிரிக்கெட் வீராங்கனைகளும் எதிரெதிராக விளையாடும் விதமாக 30 ஓவர்கள் அடிப்படை கிரிக்கெட் போட்டியைக் 'கல்கி' நடத்தியது.

தோராணியும், கல்பனாவும் இப் போட்டிக்கான ஏற்பாடுகளில் பல விதங்களிலும் உதவ இரு அணிகளும் 3-1-81 சனியன்று மதியம் ஒரு மணி அளவில் வைஷ்ணவா கல்லூரி மைதானத்தில் மோதத் தயாரானார்கள்.

எந்த ஒரு பௌலரும் 6 ஓவர்களுக்கு மேல் போடக் கூடாது என்ற விதிமையும் வகுத்துக் கொண்டனர்.

மீனாட்சி கல்லூரி அணி காப்டன் மாலினியும் வைஷ்ணவா கல்லூரி அணி காப்டன் வீணு கோபியும் "டாஸ்' போட்டு வைஷ்ணவா கல்லூரி டாஸில் வென்று முதலில் பாட்டிங்கைத் தொடங்கியது.

குமாரி ராதா சீனிவாசனும், என். உஷாவும் 'ஓபனிங் பாட்ஸ்மன்'களாக விளையாடத் தொடங்கினர். மீனாட்சி கல்லூரி சார்பில் தோராணி பந்து வீசத் தொடங்கினார்.

லதாவின் சாதனை

வேகமாக ரன்கள் எடுக்க முடியாவிட்டாலும் கூட எவ்வித சேதமும் இல்லாமல் ராதாவும் உஷாவும் நன்றாக ஆடிக்கொண்டிருந்தனர். வைஷ்ணவா அணி ஒன்பது ரன் எடுத்திருந்த சமயம்தான் அவர்களது பெரு வீழ்ச்சி தொடங்கியது. தனது மூன்றாவது ஓவரில் மீனாட்சி கல்லூரி ஓபனிங் போலரில் இன்னொருவரான டி. என். லதா உஷாவை 'கிளீன்' 'போல்ட்' செய்தார். தனது அடுத்த ஓவரின் முதல், இரண்டாவது மூன்றாவது பந்துகளில் மூன்று விக்கெட்டுகளைத் தொடர்ந்து எடுத்து கிரிக்கெட்டின் மிக அரிய சாதனையான 'ஹாட்ரிக்' எடுத்துப் பலத்த கரவொலி பெற்றார். வைஷ்ணவா கல்லூரியின் மதுரவல்லி (0) எல்.பி.டபிள்யூ. எஸ். மகாலட்சுமி (0) போல்ட், காப்டன் வீணு கோபி (0) காட் ஆகிய மூவரும்தான் லதாவின் இரைகள். விக்கெட் இழக்காமல் ஒன்பது ரன் எடுத்திருந்த வைஷ்ணவா விட்டுவில் சரிந்த இந்திய அணியைப் போன்று சரிந்து நாலு விக்கெட் நஷ்டத்துக்கு ஒன்பது ரன் மட்டுமே எடுத்தது.

வைஷ்ணவாவின் முதல் நான்கு விளையாட்டுக்காரர்கள் உடனுக்குடன் 'அவுட்' ஆனதால் அவ்வணி திணறத் தொடங்கியது.

வைஷ்ணவாவின் திணறலும் சரிவும்

மீனாட்சி கல்லூரியின் சார்பில் தோராணியும் சுசித்ராவும் சிறப்பாகப் பந்து வீசி ரன் அதிகம் கொடுக்காமல் பார்த்துக் கொண்டனர். விஷம் போல் 'ஓவர்கள்' முடிந்து கொண்டிருக்க ரன்கள் அதிகம் எடுக்க முடியாததால் Quick singles எடுக்க அவசரம் கொண்டு ஆடிய வைஷ்ணவா அணி, எஸ். ராதா, அலமேலு, சரஸ்வதி, எஸ். வி. ராதா ஆகிய நான்கு ஆட்டக்காரர்களை ரன் அவுட்டில் இழந்தது. கல்பனா விக்கெட்டை சாந்தியும், புஷ்பாவின் விக்கெட்டை மாலினியும் வீழ்த்தினர். மீனாட்சி அணி 17.2 ஓவர்கள் மட்டுமே வீசி வைஷ்ணவா அணிக்கு 27 ரன்கள் மட்டுமே கொடுத்து அந்த அணியை 'ஆல் அவுட்' செய்தது.

வைஷ்ணவா அணிக்கு அதிக ரன்களாக எஸ். ராதா, என். உஷா, எஸ். அலமேலு ஆகிய மூவரும் தலா ஐந்து ரன்கள் எடுத்தனர். மீனாட்சி கல்லூரியின் டி. என். லதாவின் போலிங் விவரம்: 5.2 ஓவர்கள் 2 ரன்கள் கொடுத்து 5 விக்கெட்டுகள். இதில் ஒரு ஹாட்ரிக்.

சிறப்பான ஆரம்பம்

தேநீர் இடைவேளைக்குப் பிறகு மீனாட்சி கல்லூரி அணி தனது பாட்டிங்கைத் தொடங்கியது. வைஷ்ணவா சார்பில் வீணு கோபி போலிங்கை ஆரம்பிக்க சுசித்ராவும் டி. கே. சுதாவும் முதலில் பாட்டிங் தொடங்கினர். மீனாட்சி கல்லூரி ஐந்து ரன்கள் எடுத்திருந்தபோது சுசித்ரா அவுட் ஆனார். 13 ரன்கள் எடுத்தபோது ஒரே விக்கெட் இழந்திருந்த மீனாட்சி அணி நம்பிக்கை நடை போட்டுக் கொண்டிருந்த போது மாலினி 5 ரன்களுடன் கல்பனாவின் பந்து வீச்சுக்கு 'போல்ட்' ஆனார்.



⌘ வெற்றி கொண்ட வைஷ்ணவா கல்லூரி கிரிக்கெட் அணி இடது புறம் நின்றிருப்பவர்கள் நடுவர்கள்.

கல்பனாவின் பாய்ச்சலும் மீனாட்சி அணியின் வீழ்ச்சியும்

கல்பனா தனது சிறப்பான சுழல் பந்து வீச்சுக்களை வீசத் தொடங்கியதும்தான் மீனாட்சி அணியின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று. மீனாட்சி கல்லூரி அணியின் காப்டன் மாலினியின் விக்கெட்டை • வீழ்த்தியதைத் தொடர்ந்து கல்பனா, சுதா (0) காட், கீதா ராணி (3) காட், சாந்தி (2) எல்.பி., மஞ்சரி (0) காட் ஆகியோர் விக்கெட்டுகளை மட மடவென்று ஒரு பக்கம் வீழ்த்த, எல். அலமேலு தனது சிறப்பான பந்து வீச்சால் டி. என். லதா (0) ஸ்டம்ப்ட், சுஷ்மா (0) காட், அம்பிகா (0) போல்ட், ஆகியோர் விக்கெட்டுகளை மறு முனையில் வீழ்த்த 19 ரன்களுக்கு 4 விக்கெட் மட்டுமே இழந்து நம்பிக்கை நடை போட்டுக் கொண்டிருந்த மீனாட்சி கல்லூரி அணி 22 ரன்களுக்குத் தனது ஆட்டத்தை இழந்தது. 22 ஓவர்களும் 5 பந்துகளும் வீசி, வைஷ்ணவா அணி மீனாட்சி கல்லூரியை அவுட் செய்து போட்டியில் வென்றது.

மறக்க முடியாத மகாலட்சுமியின் விக்கெட் கீப்பிங்

வைஷ்ணவா கல்லூரியின் விக்கெட் கீப்பர் மகாலட்சுமி அற்புதமாக விக்கெட் கீப்பிங் செய்தார். லதாவை அவர் செய்த ஸ்டம்பிங் மின்னல் வேகத்தில் ஜொலிக்காக அமைந்தது.

30 ஓவர் போட்டி முடிந்த போது மாலை நாலு மணி மட்டுமே ஆகியிருந்ததால் ஒவ்வொரு கல்லூரி சார்பிலும் இரண்டு பேர்களைக் கொண்ட இரண்டு அணிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு மினி டபுள் விக்கெட் போட்டி நிகழ்த்த அனுமதி கோரினர்.

பிரதான போட்டி முடிந்துவிட்ட நிலையில் 'டென்ஷன்' குறைந்து 'ஃப்ரீ'யாக ஆடினர்.

மீனாட்சி கல்லூரி சார்பில் ஆடிய சாந்தியும் மாலினியும் தங்கள் சக கல்லூரி மாணவிகளான கீதாராணி, சுசித்ராவை வென்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி ஆனார்கள். வைஷ்ணவாவைச் சேர்ந்த அலமேலுவும் வீனு கோபியும் கல்பனாவையும், உஷாவையும் வென்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றனர்.

வைஷ்ணவா கல்லூரி அலமேலுவும், வீனு கோபியும் மீனாட்சி கல்லூரியை இறுதி ஆட்டத்தில் வெற்றி கண்டனர்.

பரிசளிப்பும் பாராட்டும்

திரு என். மாதவன், திரு எல். கண்ணன் ஸ்ரீ ஜி. ஸ்ரீராம் • ஆகிய மூன்று இளைஞர்கள் நடுவர் பொறுப்பேற்று இப்போட்டிகளைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர்.

தென் மண்டலப் பிராந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியில் ஓர் விளையாட்டுக்காரரும், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் பணி புரிபவருமான குமாரி சுகுனா தலைமை வகித்து முக்கிய போட்டியான 30 ஓவர் போட்டியில் வென்ற வைஷ்ணவா கல்லூரி ஆட்டக்காரர்களுக்கு 'கல்கி'யின் பரிசான ரூ. 100 அளித்தார்.

போட்டியில் பங்கேற்ற மற்றவர்களுக்குப் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

நாயகன்


புகைப்படம் : மன்னை மூர்த்தி

⌘ வைஷ்ணவா கல்லூரி கிரிக்கெட் அணியின் தலைவி குமாரி வீனு கோபி சுகுனாவிடமிருந்து பரிசு பெறுகிறார்.



⌘ இடமிருந்து வலம்: 5 விக்கெட்ஸ் வீழ்த்தி வெற்றி தேடித்தந்த கல்பனா; அபாரமாக விக்கெட் கீபிங் செய்த மஹாலக்ஷ்மி (வைஷ்ணவா கல்லூரி;) 'ஹாட்ரிக்' சாதனை புரிந்த லதா (மீனாட்சி கல்லூரி)





தெய்வ பக்தியை விஞ்சிய தேசபக்தி

பாரதியாருக்கு முன் தோன்றிய புலவர்களும், அவர் காலத்திலேயே வாழ்ந்த கவிஞர்களும் உறங்க வைக்கத் தாலாட்டுப் பாடலும், விழிக்க வைக்கப் பள்ளி எழுச்சிப் பாடலும் பாடினர்.

பாரதியார் தாலாட்டுப் பாடவில்லை. மாறாக, உறங்குவோரை எழுப்புகின்ற 'பள்ளி எழுச்சி' பாடியுள்ளார்.

தூங்கிக் கிடந்த சமுதாயத்தைத் துயிலெழுப்பத் தோன்றிய வராதலால் அவருக்குத் தாலாட்டுச் சந்தம் தேவைப் படவில்லை. பாரதியாரின் உள்ளத்தை அறிந்த பாவேந்தர் பாரதிதாசன்,

'நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாரதியாரை வருணிக்கிறார்.

துயில் இருவகைப்பட்டது. ஒன்று அறிதுயில்; இன்னொன்று நீடுதுயில். அறிதுயில் என்பது ஆண்டவனுக்குரியது. அது, தூங்காமல் தூங்குவதாம். அப்படித்தான் தூங்குகிறார், திருவரங்கத்திலே அரங்கநாதர்!

'நீடு துயில்' என்பது எழ வேண்டிய நேரத்திலும் எழாமல் தூங்குவதாம். இது, அடிமைப்பட்ட சமுதாயத்தின் தூக்கம். இதனாற்றான், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்கிறார் பாரதிதாசன். நாமக்கல் கவிஞரும்,

''தாழுழுது பறைசாற்றித்
தமிழ்ப்பா வோதித்
தட்டியெழுப் பாரதிதான்
கவிசெய் தானே!''

என்று பாடுகிறார்.

பாரதி பாடிய பள்ளி எழுச்சியிலே யான் ஒரு புதுமையைக் காண்கிறேன். தேசம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் மக்கள் உறங்கிக் கிடப்பது இயற்கை. அது, அடிமைப்பட்டதன் விளைவு. ஆனால், விடுதலை பெற்றுவிட்ட தேசமும் விழித்தெழாமல் உறங்குவது விதியின் விளையாட்டாகும். அதனால் சுதந்திர பாரதத்துக்கே பள்ளியெழுச்சி பாடுகிறார் பாரதியார்.

''பொழுது புலர்ந்தது;யாம்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபகம் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி.
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னுமென் தாயே!
வியப்பிதுகாண்! பள்ளி எழுந்தரு ளாயே!''

இந்தப் பாடல் சுதந்திர பாரதத்தைப் பற்றியதுதான் என்பதற்கு,

''பரிதியின் பேரொளி
வானிடைக் கண்டோம்!
பார்மிசை நின்னொளி
காணுதற் கலந்தோம்!''

என்னும் வரிகள் சான்றாகும்.

பாரதி, 'தேசம்' என்பதற்கு 'முப்பது கோடி மக்கள்' என்றே பொருள் கொண்டார். அதனாற்றான் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் விழிப்போடிருக்கவேண்டும் அப்பொழுதுதான் பெற்ற விடுதலை பறையருக்கும், தீயருக்கும், புலையருக்கும் போய்ச் சேரும் — என்ற உண்மையை உணர்ந்த சுதந்திர பாரதத்துக்கே பள்ளியெழுச்சி பாடினார்.

விடுதலைப் போராட்ட காலத்திலே, மார்கழித் திங்களில் விடியற்காலையில் எழுந்து பாரதியாரின் இந்த 'பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி'ப் பாடலைப் பாடிக்கொண்டு வீதி வலம் செல்வோம். சுப்பிரமணிய சிவா இதற்கென்று ஒரு பஜனைக் கோஷ்டியையே படைத்தார்.

பாரத மாதா மீது பாரதியார் ஒன்றா, இரண்டா? பத்துக்குமேற்பட்ட பாடல்களைப் பாடினார்.

இந்தப் பாடல்களெல்லாம் அவரே பாடியுள்ள தெய்வ பக்திப் பாடல்களை விஞ்சி நிற்கின்றன. ஆம்; பாரதியாரிடம் விஞ்சி நிற்பது தேச பக்தியா? தெய்வ பக்தியா?" என்ற வினா எழுந்தால் யான் ''தேச பக்தி'' என்றே விடையளிப்பேன். பாரத தேசத்தையே தெய்வமாக்கி, பாரதமாதா என்று பெயரிட்ட அவர் ''சுதந்திரம்'' என்னும் உரிமை வாழ்வைக்கூடத் தேவி வடிவத்தில் கண்டு, ''சுதந்திர தேவியின் துதி'' என்னும் தலைப்பில் ஒரு பாடலைப் பாடி வைத்துள்ளார்.

பாரத தேவியையேயன்றி அந்தத் தேவியின் பக்தனையும் பாட விரும்பி, ''பாரத தேவியின் அடிமை'' என்ற தலைப்பிலும் ஒரு கவிதையைத் தந்துள்ளார்.

அவரே சொல்கிறார், ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்று. ஆம்; 'சொர்க்கத்தை விடச் சிறந்தது சொந்த நாடு' என்பது அவரது சித்தாந்தம். இதிலே பாரதியார் விவேகானந்தரையே பின்பற்றினார் எனலாம். விவேகானந்தர் சொல்கிறார்:

''இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்கு இந்த மகத்தான தாய் நாட்டைப் பற்றியே நாம் நினைக்க வேண்டும். அதுவொன்றே நமது தேசிய வாழ்க்கையின் சிறப்பான குறிக்கோளாகும். ''இக்காலத்தில் மற்றெல்லாத் தெய்வங்களும் நம் மனத்தை விட்டு அகலட்டும். நமது தேசம், நமது மக்கள் இவைகள் தாம் உயிருள்ள தெய்வங்கள். நம்மைச் சுற்றிலும் பரவி, எங்கும் திகழ்ந்து கொண்டிருக்கும் இவ்விராட சக்தியை நாம் முதலில் வழிபடுவோமாக!''

ம.பொ.சி

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யாபவன் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor; K. Rajendran

ஈறு உபாதைகளின் முதல் அறிகுறிகள்



ஊத்தை (Plaque)
ஊத்தை என்பது எப்போதும் உங்கள் பற்களையும் ஈறுகளையும் சுற்றி தோன்றும் கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளின் மெல்லிய படிவமாகும். இதை அலட்சியம் செய்தால் இப்படிவம் காரையாக உருப்பெறுகிறது.

பற்காரை
பற்காரை பற்களின் அடிபாகத்தில் படிந்து, ஈறுகளில் எரிச்சல் உண்டாக்கி அவற்றை வீங்கச் செய்கிறது. காலடைவில் ஈறுகளிலும் எலும்புகளிலும் சரிவு ஏற்படுத்தி பற்களை விழச் செய்கிறது.

இரத்தம் கசியும் ஈறுகள்
பிரஷ் செய்யும் போது பலவீனமாகவும் மிருதுவாகவும் உள்ள ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இதனால் வலி ஏற்படாவிடினும் இந்த ஈறுகளின் இரத்தக் கசிவு பெரும் உபாதைகளில் கொண்டு விடலாம்.

பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் ஈறுகளை பராமரியுங்கள்

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது.

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்கநேரிடும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள், ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.



ஈறுகள்
கெட்டால்
உடல்
நலம்
கெடும்



இலவசம்! "உங்கள் ஈறுகளையும் பற்களையும் பராமரிக்கும் முறை" பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 30 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக.
போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, த.பெ. எண். 11463, டிபார்ட்மென்ட் P 197-224, பம்பாய் 400020. எம் மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

போர்ஹென்ஸ்
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

224F-203 TM

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

பார்லே

உலகிலோர் ஒப்பிலா மணி யென அவளுக்கு உணர்த்திடும் அன்புறவே.



இனிய கவனிப்பு...
அவளுக்காக நீங்கள்
தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டே
[illegible]
தினமும் அதுவே. [illegible]
சுகாதார முறையில்
கைபடாத தூய்மையோடு
தயாரித்த பிஸ்கட்—சுவை
மிக்கது. [illegible]
அவளுடைய தேவைக்கு
[illegible] ஊட்டச்சத்து
உள்ளது. எண்ணிப்
பாருங்கள். தரத்திற்காக 7
உலக விருதுகளை வென்ற
பிஸ்கட்—பார்லே க்ளூகோ—
இந்தியாவின் அதி நவீன
பிஸ்கட் தயாரிப்பாளர்களின்
படைப்பு.



இந்தியாவில் அதிக
விற்பனை கண்ட பிஸ்கட்

உலக விருதுகளை
வென்றது

பார்லே
க்ளூகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

everest/80/PP/332-tm